DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
i HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com
Ragu Thillainathan Sales Representative homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
Homelife/Future Realty Inc., Brokerage
Raj Perampalam
Broker
என்னை அழையுங்கள்
Direct: 416-897-9155
Office: 905-201-9977
e-mail : raj.p@rogers.com

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

List Your Property Free
PROPERTYMAX.LK
+94772332300

BIG
Great Coverage. BIG Savings.
Home · Auto · Life · Business
Iggy Thuray
Insurance Broker
416.814.7470
iggy@thebig.ca thebig.ca/iggy

27ம் ஆண்டில்...
27 years of publishing
www.uthayannews.ca
UTHAYAN உதயன்
திக்கெட்டும் தமிழ் உலகில்
எதிக்கும் கதிர் வீசும்
வாரச் செய்தி இதழ்
Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1460 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 29, 2024

# "இலங்கையில் ஊடகச் சுதந்திரம், சட்டப் புத்தகத்தில் எழுத்தில் மட்டுமே உள்ளது. நடைமுறையில் இல்லை"

## ஜெனிவா மனித உரிமைகள் மன்றில் உரையாற்றிய கனடா உதயன் தென்னாசிய செய்தியாளர் சிவா. பரமேஸ்வரன் தெரிவிப்பு



"இன அடக்கு முறை மற்றும் இன அழிப்பு ஆகியவற்றுக்கு "பெயர் பெற்ற" நாடாக விளங்கும் இலங்கையில் ஊடகச் சுதந்திரம் என்பது சட்டப் புத்தகத்தில் எழுத்து வடிவில் மட்டுமே உள்ளது. நடைமுறையில் இல்லை. அங்கு சுமார் 80 தமிழ் பேசும் ஊடகவியலாளர்களுக்கு மரண அச்சுறுத்தல்கள் தொடர்ச்சியாக உள்ளன"

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் வரும். ஜெனிவா மனித உரிமைகள் மன்றில் உரையாற்றிய முன்னாள் பிபிசி செய்தியாளரும் கனடா உதயன் தென்னாசிய செய்தியாளருமான சிவா. பரமேஸ்வரன் தெரிவித்தார். கடந்த 27-03-2024 செவ்வாய்க்கிழமையன்று மாலை அங்கு உரையாற்றிய சிவா பரமேஸ்வரன் தனக்கு வழங்கப்பெற்ற சில நிமிட நேரத்தை நன்கு பயன்படுத்தினர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(உள்ளே விபரமான செய்தி 5ம் பக்கத்தில்)

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

# "கனடாவில் தன்னை ஒரு கலை இலக்கியவாதியாக தொடர்ச்சியாக காட்சிப்படுத்திக் கொண்டிருப்பவர் ஆ. ஸ்ரீஸ்கந்தராஜா ஆவார்"

## ஆ.ஸ்ரீஸ்கந்தராஜாவின் நூல் வெளியீட்டு விழாவில் வானொலி நிலைய அதிபர் நடா ராஜ்குமார் புகழாரம்



1990ம் ஆண்டு முன்னர் கனடாவில் பல்வேறு காரணங்களால் குடியேறிய ஈழத்தமிழர்கள் மொன்றியால் மாநகரில் தான் வந்திறங்கினார்கள். அங்கு அவர்கள் ஒற்றுமையாக தங்கள் புலம்பெயர் வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். அந்த நாட்களில் த ங்களுக்கு ஆர்வமுள்ள துறைகளில் அவர்கள் கால்களைப் பதிக்கத் தவறவில்லை. நான் எனக்கு பிடித்தமான வானொலி மற்றும் நடிப்புத்துரையில் ஈடுபாடு காட்டினேன். நண்பர் ஆ. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களோ தனக்கு பிடித்தமான துறையாக இருந்த எழுத்து மற்றும் கவிதை சினிமா இலக்கியம் ஆகியவற்றில் தனது கவனத்தைச் செலுத்தினார்.

அந்த பாதையில் கடந்த 35 வருடங்களாக கனடாவில் தன்னை ஒரு கலை இலக்கியவாதியாக தொடர்ச்சியாக காட்சிப்படுத்திக் கொண்டிருப்பவர் ஆ. ஸ்ரீஸ்கந்தராஜா ஆவார். எனவே அவரை நாங்கள் அனைவரும் கொண்டாடி மகிழ வேண்டும்"

(உள்ளே விபரமான செய்தி 13ம் பக்கத்தில்)

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St, East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
ACCOUNTING
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

உதயன் சர்வதேச விருது விழா-2024
Uthayan International Awards Festival – 2024
Dance, Music and Awards Presentation
For Tickets and information: 416 732 1608 or 647 762 9512
மண்டபம்:-
The Estate Banquet & Event Centre
430 Nugget Ave, Scarborough, ON M1S 4A4
26th May, 2024 Sunday, at 6.00 PM

# கனடாவில் தனது வெற்றிகரமான 20 ஆண்டுகளைப் பூர்த்தி செய்து தொடர்ந்து சேவையாற்ற உறுதிபூண்டுள்ள அஞ்சப்பர் செட்டிநாடு உணவகம்

AR

## ANJAPPAR

*Authentic Chettinadu Restaurant*

**கனடாவில் பாரம்பரிய செட்டிநாடு உணவு வகைகளை எமது 3 கிளைகளிலும் சுத்தம் சுகாதாரம் சுவை ஆகியவற்றுடன் வாடிக்கையாளர்களுக்கு படைப்பதில் பூரிப்படைகின்றோம்.**

கனடாவில் இயங்கிவரும் கிளைகளோடு எமது நிர்வாகத்தின் கீழ் தமிழ்நாட்டின் 2 கிளைகள் சென்னை - அண்ணா நகரிலும், சேலம் நகரிலும் அனைத்து வசதிகளோடு சிறப்பாக இயங்கிவருகின்றன என்ற மகிழ்ச்சியான செய்தியை எமது கனடிய வாடிக்கையாளர்களோடு பகிர்ந்து கொள்கின்றோம்.

எமது அஞ்சப்பர் செட்டிநாடு உணவகத்தின் "மூலகர்த்தா" ஐயா அஞ்சப்பர் அவர்கள் மறைந்த முன்னாள் தமிழக முதல்வரும் மக்கள் திலகமுமான M.G.R. அவர்களின் தனிப்பட்ட சமையல் வல்லுனராகத் திகழ்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

எமது வெற்றிகளுக்கு காரணமாக அமைந்துள்ள வாடிக்கையாளர்கள். பத்திரிகை மற்றும் வானொலி நிறுவன நண்பர்கள். எமது அனைத்து கிளைகளிலும் ஆர்வத்துடன் பணிசெய்யும் அனைத்து தரங்களையும் சேர்ந்த சமையல் வல்லுனர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் எமது நன்றி!

இங்ஙனம்,
ரங்கசாமி அஞ்சப்பர் மற்றும்
கோபால் ஆறுமுகம்

**எமது 3 கிளைகள் அமைந்துள்ள இடங்கள்:**

**Scarborough நகரில்:**
**3090 Eglinton Ave East**
**Scarborough, ON M1J 2H1**
**(416) 265-2695**

**Mississauga நகரில்:**
**4310 Sherwoodtowne Blvd, Unit 1**
**Mississauga, ON L4Z 4C4**
**(905) 272-2232**

**Brampton நகரில்:**
**Bartley's Square**
**1 Bartley Bull Pkwy #5**
**Brampton, ON L6W 3T7**
**(905) 450-7575**

**www.anjapparcanada.ca**

Canada
We acknowledge the financial support of the Government of Canada

உதயன் கதிரோட்டம்

# தர்மத்தின் எல்லை தாண்டி உதவிக்கரம் நீட்டும் மன்னார் மெசிடோ நிறுவனத்தின் மகத்தான பணிகள்

'பாத்திரம் அறிந்து பிச்சை போடு' என்ற கூற்று எம்மவர்கள் மத்தியில் எத்தனையோ ஆண்டுகளாய் பகிரப்படும் ஒன்றாக இருந்தும் உண்மையில் உணர்வோடு உதவிகளைச் செய்பவர்கள் 'அளந்தோ' அன்றி 'அறிந்தோ' உதவிகள் வழங்கமாட்டார்கள். அதுவும் உதவிக்கரம் நீட்டுபவர்கள் சிலர் மதங்களின் அடிப்படையில் உதவிகளை வழங்குவார்கள் அல்லது தெரிந்தவர்களுக்கு மட்டுமே உதவிகளைச் செய்வார்கள்.

ஆனால் எமது ஆசிரிய பீடத்திற்கு வந்து சேரும் சாதாரண செய்திகளுக்கு மத்தியில் 'சாதாரணமானது' என்று நாம் புறக்கணித்து விடமுடியாத ஒரு செய்தி ஒன்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து. நாம் இவ்வார ஆசிரிய தலையங்கமான 'கதிரோட்டத்தை' வடிக்கின்றோம்.

'மன்னார் மெசிடோ நிறுவனம்' என்ற உதவிகள் வழங்கும் அமைப்பு தொடர்பான செய்திகளை எமது மன்னார் செய்தியாளர் லம்பேர்ட் அவர்கள் தவறாது அனுப்பி வைப்பார். அந்த நிறுவனத்தின் உதவிக் கரம் நீட்டும் திட்டங்கள் மன்னார் பிரதேசத்தில் 'அடிக்கடி' இடம்பெறும் என்பதை அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் மூலம் அறிந்து அவ்வாறான செய்திகளுக்கு நாம் முக்கியத்துவம் கொடுப்பதுண்டு. இந்த அமைப்பு யாழ்ப்பாண நகரத்திலும் பலருக்கு தனது உதவிக்கரத்தை நீட்டியிருந்த வைபவங்கள் பல இதற்கு முன்னர் இடம்பெற்றிருந்தன.

ஆனால் இவ்வாரக் கதிரோட்டத்தில் இடம்பெறும் அளவிற்கு அந்த அமைப்பினர் செய்த உதவிகள் வழங்கும் நிகழ்வானது 'தர்மத்தின் எல்லைகளைக் கடந்து சென்றுள்ளது என்ற உயரிய கௌரவத்தை அந்த 'மன்னார் மெசிடோ நிறுவன' த்தின் நிர்வாகிகளுக்கு ஈட்டிக்கொடுத்துள்ளது என்றால் அது மிகையாகாது.

நாம் ஏற்கெனவே அறிந்த விடயம் ஒன்றே மன்னார் மெசிடோ நிறுவனத்தை மிகவும் அவசியமானவர்களுக்கு தமது உதவிக்கரத்தை நீட்டுவதற்கு தூண்டியுள்ளது. மியன்பார் எனப்படும் முன்னைய 'பர்மா' தேசத்தில் இஸ்லாமியர்களுக்கு எதிரான தாக்குதல்களை அந்த நாட்டின் பெரும்பான்மை ஆளும் இனத்தினர் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர். ஆனால் இரண்டு வருடங்களுக்கு முன்னர் அரசின் ஆதரவோடு (நாம் பிறந்த இலங்கையில் நடைபெற்றது போன்ற ஒன்றே இது எனலாம்)' இந்த தாக்குதல்கள் காரணமாக மியன்மாரில் இருந்து இடம் பெயர்ந்து பல நாடுகளுக்கும் தப்பி ஓடுவதற்கு அங்கு வாழ்ந்து வந்த இஸ்லாமியர்கள் முயன்றார்கள். இந்தியா போன்ற நாடுகள் அவர்களை ஏற்றுக்கொள்ள தயாராக இருக்கவில்லை.

இனம் சார்ந்த தாக்குதல்கள் காரணமாக மியன்மாரில் இருந்து இடம் பெயர்ந்து பங்களாதேஸ் நாட்டில் தற்காலிகமாக வாழ்ந்த நிலையில் அங்கிருந்து வெளியேறி தமது உயிரை பாதுகாத்துக் கொள்ள கடல் வழியாக பயணித்த போது கடல் மார்க்கமாக பயணித்த மியன்மார் முஸ்லிம் அகதிகள் 105 பேர் கடந்த 2022 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இலங்கையில் அகதிகளாக தஞ்சமடைந்தனர். ஆனால் அவ்வாறு வந்த ஒரு குழுவினரை பௌத்தர்கள் சென்று தாக்க முயன்றதை நாம் செய்திகள் வாயிலாக அறிந்தோம்.

யாழ்ப்பாணம் வலி வடக்கு பகுதியை வந்தடைந்த நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய குறித்த மியன்மார் அகதிகள் கொழும்பு பாணந்துறையில் தங்க வைக்கப்பட்டனர்.

இவ்வாறாக அவர்கள் அகதிகளாக இலங்கைக்கு வந்து பாணந்துறையில் தங்கியுள்ள மியன்மார் முஸ்லிம் மக்களுக்கு அவசரமாக காணப்பட்டு வீட்டிற்கான நிவாரணத்தை மன்னார் மெசிடோ நிறுவனம் நேற்றைய தினம் 28ம் திகதி வியாழக்கிழமை நேரடியாக சென்று வழங்கி வைத்துள்ளனர்.

இவ்வாறு 'மன்னார் மெசிடோ நிறுவனம்' வழங்கிய பண உதவிகள் அந்த மியன்மார் அகதிகளுக்கு அவர்கள் தங்கியுள்ள வீட்டு வாடகைக் கட்டணங்களை செலுத்த உதவியுள்ளதை நாம் கவனிக்க வேண்டும்.

மன்னாரில் இயங்கிவரும் இந்த மெசிடோ நிறுவனம் இந்த உதவி வழங்கும் திட்டத்தின் வாயிலாக 'தர்மத்தின் எல்லைகளைத் தாண்டி புரிந்த மாபெரும் உதவி என்றே நாம் கருதுகின்றோம். அதற்காகவே பாராட்டுகின்றோம்.

$25 / Hr
Cleaning / Cooking

We are looking for a Lady with experience to help with Tamil / Sri Lankan cooking and cleaning in Mississauga (south of QEW on Hurontario), Ontario, two to three days a week. You will work for 4 hours a day and will be paid $25 / hour or $100 / day.

Please contact Nirmala at
(647) 391-4207

ROHINI TAILORS & DESIGNS

Saree Blouse, Skirt & Blouse
மற்றும் மணமகளுக்கான ஆடைகளும் தைத்துக் கொடுக்கப்படும்.
அத்துடன் கற்றுக்கொள்ள விரும்புகின்றவர்களுக்கான தையல் வகுப்புக்களும் நடைபெறுகின்றன.
இடம்:- Pickering
தொடர்புகளுக்கு: 647 569 4794
அல்லது 416 438 2552

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் | Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON M1C 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# யாழ்ப்பாண முஸ்லிம் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இஸ்லாமிய மக்களின் நோன்பு நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா!





யாழ்ப்பாண முஸ்லிம் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இஸ்லாமிய மக்களின் நோன்பு நிகழ்வு நேற்று 28.03.2024 வியாழக்கிழமை மன்னித் முஹம்மதியா பள்ளிவாசலின் தலைவரும் சாமதான நீதிவானுமான பி.எஸ்.எம் சரபுல் அனாம் தலைமையில் நடைபெற்றது.

இவ் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கடற்றொழில் அமைச்சர் கே.என். டக்ளஸ் தேவானந்தா, கலந்துகொண்டார்.

நிகழ்வில் யாழ்ப்பாண மாவட்ட பதில் அரசாங்க அதிபர் ம.பிரதீபன், யாழ்ப்பாண பிரதேச செயலாளர் சா.சுதர்சன் உள்ளிட்ட உயர்மட்டக் குழுவினர்கள், இஸ்லாமிய உறுப்பினர்கள் மற்றும் வர்த்தகப் பெருமக்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.



Toronto சிட்டி கவுன்சிலர்
PAUL AINSLIE
WARD 24, SCARBOROUGH-GUILDWOOD

HELP IS AVAILABLE
வட்டார மக்களின் தேவை கருதி பின்வரும் சேவைகள் எம்மால் கவனிக்கப்படுகின்றன.

குறைந்த கட்டனத்தில் வீட்டுவசதி
விலங்கு சேவைகள்
உயர்மாடி கட்டட சட்டங்கள்
கட்டட அனுமதி பத்திரங்கள்
பிள்ளை பராமரிப்பு சலுகை
அவசர வீட்டு வசதிகள்
தீயணைப்பு சேவைகள்
கழிவுப் பொருட்கள் சேவை
நூலகச் சேவை
மாநகரத் தேர்தல்
மாநகர அனுமதியும் சட்டங்களும்

Ontario Works
வாகனத் தரிப்பிடங்கள்
பூங்காக்கள்
காவல் துறை
பொதுச் சுகாதாரம்
வீதிகள்
ஆதன வரிகள்
பொதுப் போக்குவரத்து
மீள் சுலட்சியும் பசுமை திட்டமும்
மரங்கள்
நீர் விநியோகம்

நியமன அலுவலகம்
Scarborough Civic Centre
150 Borough Drive, 2nd Floor
Scarborough, ON M1P 4N7
Phone: 416-396-7222
Fax: 416-392-4006

ரொரன்ரோ சிட்டி ஹால் அலுவலகம்
100 Queen Street West,
2nd Floor - Suite C52
Toronto, ON M5H 2N2
Phone: 416-392-4008
Fax: 416-392-4006

councillor_ainslie@toronto.ca
www.paulainslie.com
Ward 24 Scarborough-Guildwood
@Ainslie_Ward24
@cllrainslie
Paul Ainslie (City of Toronto)

www.paulainslie.com 416-396-7222

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# பழுதடைந்த விதை உருளைக்கிழங்கு விவகாரம்: மாகாண விசாரணைக்குழு
## கஜேந்திரனின் கோரிக்கைக்கு ஆளுநர் இணக்கம்

**பு. கஜிந்தன்**



யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள தெரிவு செய்யப்பட்ட விவசாயிகளுக்கு வழங்கப்பட இருந்த சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா பெறமதியான விதை உருளைக்கிழங்கு பழுதடைந்த விவகாரம் தொடர்பில் மாகாண மற்ற விசாரணை குழுவை அமைக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரனின் கோரிக்கையை வடமாகாண ஆளுநர் ஏற்றுக்கொண்டார்.

குறித்த விடயம் தெரிய வருவதாவது, கடந்த டிசம்பர் மாதம் உலக வங்கியால் விவசாய நவீனமாக செயல் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்ட தேர்வு செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கு செய்கையாளர்களுக்கு வழங்கப்பட இருந்த விதை உருளைக்கிழங்கு கிருமித் தொற்றுக்கு உள்ளாகிய நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்நிலையில் அப்போதைய யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபராக இருந்த அம்பலவாணர் சிவபால சுந்தரன் குறித்த விடயம் தொடர்பில் உயர்மட்ட கலந்துரையாடலை மேற்கொண்டார்.

குறித்த கலந்துரையாடலில் மனிதனுக்கு தீங்கை விளைவிக்கக் கூடிய ஆபத்தான நுண்ணங்கிகள் காணப்படுவதாக அதிகாரிகள் உறுதிப்படுத்திய நிலையில் உருளைக்கிழங்கை மண்ணுக்குள் புதைத்தால் ஆபத்து ஏற்பாடு என கூறிய நிலையில் எரியூட்டப்பட்டது.

அதன் தொடர்ச்சியாக இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி குழு கூட்டத்தில் பழுதடைந்த உருளைக்கிழங்கு விவகாரம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கேள்விகளை எழுப்பினர்.

விவசாய நவீனமாக்கல் செயல் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மாவட்ட



விவசாயிகளுக்கு வழங்கப்பட இருந்த சுமார் ஒரு கோடியே 50 இலட்சம் ரூபா பெறுமதியான விலை உள்ள கிழங்கை கொழும்புக்கு இறக்குமதி செய்தவர் யார் யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வந்தவர் யார் என்ற கேள்விகள் எழுப்பப்பட்ட நிலையில் எல்லாமே கொழும்பு தான் என அதிகாரிகள் பதிலளித்தனர்.

இந் நிலையில் குறித்த விடயம் தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர்களால் விடப்பட்ட கோரிக்கையின் அடிப்படையில் விவசாய அமைச்சு விசாரணைகளை ஆரம்பித்த நிலையில் மூன்று மாதங்கள் கடந்தும் விசாரணை அறிக்கை கிடைக்கப் பெறவில்லை.

இந் நிலையில் நேற்று புதன்கிழமை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில இடம் பெற்ற யாழ் மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்பு குழு கலந்துரையாடலில் பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் உருளைக்கிழங்கு விவகாரம் தொடர்பில் விசாரணை அறிக்கை எங்க என கேள்வி எழுப்பினார்.

இதன் போது பதிலளித்த கிளிநொச்சில் உள்ள விவசாய நவீன மக்கள் செயல் திட்ட உதவிப் பணிப்பாளர் விஜிதரன் அமைச்சின் விசாரணை அறிக்கை தமக்கு கிடைக்கப் பெறவில்லை கிடைத்ததும் வழங்குவதாக தெரிவித்தார்.

இதன்போது குறுக்கீடு செய்த பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் அமைச்சின் விசாரணை அறிக்கை வருமா என்ற சந்தேகம் எழும் நிலையில் ஆளுநர் மாகாண மட்டத்தில் ஒரு விசாரணை குழுவை அமைக்க வேண்டும் என கோரிக்கை விடுத்தார்.

இதன்போது கருத்து தெரிவித்த ஆளுநர் கிளிநொச்சியில் அமைந்துள்ள விவசாய நவீன மயமாக்கல் செயல் திட்டம் எங்களுடன் இணைந்து பணியாற்றுவது ஒரு சில தேவைக்கு மட்டும் தான்.

விவசாயிகளுக்கு வழங்கப்பட இருந்த உருளைக்கிழங்கு பழுதடைந்தமை வழங்கப்பட்ட பின்னரே தெரியும்.

பாராளுமன்ற உறுப்பினர் கேட்டதற்கு இணங்க குறித்த விடையார் தொடர்பில் மாகாண மட்டத்தில் ஒரு விசாரணை அழகிய தனக்கு வழங்குமாறு வடமாகாண விவசாய அமைச்சின் செயலாளர் ஜெகுவிடம் பணிப்புரை விடுத்தார்.

# கல்முனையில் கிறிஸ்தவ தேவாலயங்களுக்கு பலத்த பாதுகாப்பினை உறுதிப்படுத்த பொலிஸாருக்கு உத்தரவு

இலங்கை செய்திகள்
Sri Lanka News

**மன்னார் நிருபர்**




(26-04-2024)

புனித வெள்ளிக்கிழமையான 29 ஆம் திகதியும் உயிர்த்த ஞாயிறு தினமான 31 ஆம் திகதியும் நாட்டிலுள்ள அனைத்து கிறிஸ்தவ தேவாலயங்களுக்கும் வரும் யாத்திரீகர்கள் மற்றும் அவர்களது பயணப்பொதிகளை சோதனையிடும் விசேட வேலைத்திட்டம் தொடர்பில் கலந்துரையாடி நடைமுறைப்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

அனைத்துப் பொலிஸ் பிரிவுகளுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளார்.

இதன்படி சமூக பொலிஸ் குழுக்கள் அந்தந்த தேவாலயங்களின் பாதிரிமார்கள் மற்றும் அமைப்பாளர்களுடன் இணைந்து வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துமாறு பொலிஸ் மா அதிபர் சகல பிரிவுகளுக்கும் பொறுப்பான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும் பொலிஸ் நிலையங்களுக்கு பொறுப்பான மாவட்ட அலுவலர்கள் நாளை (26-ந் திகதி) மற்றும் நாளை மறுதினம் (27-ந்திகதி) தங்கள் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பொலிஸ் பகுதியிலும் உள்ள தேவாலயங்களுக்கு சென்று பாதுகாப்பு பணிகளை சரிபார்க்க வேண்டும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

குறித்த உத்தரவிற்கமைய கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் தலைமையில் சென்ற பொலிஸ் குழு கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அனைத்து தேவாலயங்களின் பொறுப்பாளர்களை சந்தித்து வருவதுடன் தேவையான பாதுகாப்பினையும் உறுதிப்படுத்தியுள்ளனர்.



இது தவிர கல்முனை பிராந்தியத்தில் இராணுவம் பிசேட அதிரடிப்படை புலனாய்வு பிரிவினரின் நடவடிக்கையையும் என்றும் இல்லாதவாறு முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் மன்னார் விஜயம் – பல்வேறு விடையங்கள் குறித்து ஆராய்வு



(28-03-2024)

மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் பாதிக்கப்பட்டவர்கள், மனித உரிமைகள் செயற் பாட்டாளர்களை ஒன்றிணைத்து இடம்பெற்ற விசேட சந்திப்பில் கலந்து கொண்டார்.

குறித்த சந்திப்பில் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் சட்டத்தரணி திருமதி. ரனித்தா ஞானராஜ் உள்ளடங்களாக மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலைய பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

குறித்த கலந்துரையாடலின் போது அவுஸ்திரேலியாவின் நிதி உதவியுடன் திட்டங்கள் அமுல் படுத்தப்பட்ட நிறுவனங்களுடன் கலந்துரையாடல் நடத்தப்பட்ட நிலையில் மன்னார் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் அலுவலகத்தில் பயனாளிகளுடன் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன் போது காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டவர்கள் உடன் அவர்களின் என்னக் கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

மேலும் மன்னாரில் பால்நிலை அடிப்படையிலான வன் முறைகளும் பெண்கள் எதிர் நோக்குகின்ற பிரச்சினைகள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

# வீணைமைந்தனின் "தொலைந்துபோன வசந்த காலங்கள்" 2ஆம் பதிப்பு நூல் கொழும்பு தமிழ் சங்க நூலகத்திற்கு வழங்கப்பெற்றது



25.03.2024 திங்கட்கிழமை காலை கொழும்பு தமிழ்சங்க நூலகத்திற்கு விஜயம் செய்த கனடிய எழுத்தாளர் திரு. வீணைமைந்தன் எழுதிய “தொலைந்துபோன வசந்த காலங்கள்” (ஒரு ஊரின் கதை) 2ஆம் பதிப்பு நூல் பிரதியினை நூலக பிரதம பொறுப்பாளர் திருமதி. சித்தார்தினி அவர்களிடம் நூலக வைப்பிற்காகக் கையளித்தார்.

2015 இல் வெளியான 1ஆம் பதிப்பான:
“தொலைந்துபோன வசந்த காலங்கள்”
“வாழ்த்தும் வணக்கமும்”
“கவியின் காதல்”
ஆகிய மூன்று நூல்களின் பிரதிகளும் தமிழ்சங்க நூலகத்திற்கு வழங்கப் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

கொழும்பிலிருந்து வாசகி
திருமதி. சாந்த

# "இலங்கையில் ஊடகச் சுதந்திரம் என்பது சட்டப் புத்தகத்தில் எழுத்து வடிவில் மட்டுமே உள்ளது. நடைமுறையில் இல்லை"

### ஜெனிவா மனித உரிமைகள் மன்றில் உரையாற்றிய முன்னாள் பிபிசி செய்தியாளரும் கனடா உதயன் தென்னாசிய செய்தியாளருமான சிவா. பரமேஸ்வரன் தெரிவிப்பு



"இன அடக்கு முறை மற்றும் இன அழிப்பு ஆகியவற்றுக்கு "பெயர் பெற்ற" நாடாக விளங்கும் இலங்கையில் ஊடகச் சுதந்திரம் என்பது சட்டப் புத்தகத்தில் எழுத்து வடிவில் மட்டுமே உள்ளது. நடைமுறையில் இல்லை. அங்கு சுமார் 80 தமிழ் பேசும் ஊடகவியலாளர்களுக்கு மரண அச்சுறுத்தல்கள் தொடர்ச்சியாக உள்ளன".

இவ்வாறு ஐக்கிய நாடுகள் சபையின் கீழ் வரும். ஜெனிவா மனித உரிமைகள் மன்றில் உரையாற்றிய முன்னாள் பிபிசி செய்தியாளரும் கனடா உதயன் தென்னாசிய செய்தியாளருமான சிவா. பரமேஸ்வரன் தெரிவித்தார். கடந்த 27-03-2024 செவ்வாய்க்கிழமையன்று மாலை அங்கு உரையாற்றிய சிவா பரமேஸ்வரன் தனக்கு வழங்கப்பெற்ற சில நிமிட நேரத்தை நன்கு பயன்படுத்தினார் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் "இலங்கையில் நாற்பது வருடங்களுக்கு மேலாக ஊடகச் சுதந்திரம் மறுக்கப்படுவதும். தொடர்ச்சியாக ஊடகவியலாளர் கைது செய்யப்படுவதும் அவர்கள் சித்திரவதைக்கு உள்ளாவதும் சிலர் படையினரின் துப்பாக்கிக்கு இரையாவதும் அவ்வப்போது நடைபெறுகின்ற சம்பவங்களாகவே மாறிவிட்டன.

மேலும், 2006ம் ஆண்டு சுப்பிரமணியம் சுகிர்தராஜா என்னும் ஊடகவியலாளர் இராவத்தினரால் கொல்லப்பட்ட பாடசாலை மாணவர்கள் நால்வரின் கொலைபற்றி எழுதியதால் அவர் அரசாங்கப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டார். இடைப்பட்ட காலத்தில் பல ஊடகவியலாளர்கள் மற்றும் ஊடகத்துறையில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் பயின்றவர்கள் உட்பட பலர் அரச புலனாய்வாளர்களால் எச்சரிக்கை செய்யப்பட்டும் தாக்கப்பட்டும் உள்ளார்கள். 2021ம் ஆண்டில்கூட பல தாக்குதல்கள் இடம்பெற்றன. விசுவலிங்கம் விஸ்ணுசந்திரன் என்னும் ஊடகவியலாளர் யாழ்ப்பாணத்தில் இராவணத்தால் தாக்குதல்களுக்கு உள்ளானார்.

இவ்வாறான இராணுவ மற்றும் புலனாய்வாளர்களின் அச்சுறுத்தல் உள்ள இலங்கையில் ஊடகவியலாளர் தங்கள் பணிகளை சுதந்திரமாகச் செய்யும் நிலை உண்டாக எமது ஐக்கிய நாடுகள் சபை மற்றும் மனித உ ரிமைகள் மன்றம் ஆகியன இலங்கையை நிர்ப்பந்திக்க வேண்டும்" இவ்வாறு திரு. சிவா பரமேஸ்வரன் தெரிவித்தார்.

# நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் நடத்த உள்ள இணையவழிக் கருத்தரங்கு

### "தென்னாப்பிரிக்காவின் சர்வதேச நீதிமன்றத்தை நோக்கிய முயற்சியும் ஈழத் தமிழர்களுக்கான நீதியும்"




இணையவழிக் கருத்தரங்கு - தென்னாப்பிரிக்காவின் சர்வதேச நீதிமன்றத்தை நோக்கிய முயற்சியும் ஈழத் தமிழர்களுக்கான நீதியும் - நாடுகடந்த தமிழீழ அரசாங்கம்!!

தென்னாபிரிக்காவின் சர்வதேச நீதிமன்றத்தை நோக்கிய முயற்சியும் ஈழத் தமிழர்களுக்கான நீதியும் பற்றி விவாதிக்க பல புகழ்பெற்ற சர்வதேச சட்ட அறிஞர்கள் இணைந்துள்ள இணையவழிக் கருத்தரங்கு ஒன்றை நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் நடாத்த உள்ளது.

காலம்: மார்ச் 28, 2024
நேரம்: மதியம் 12.00 (EST) - 1.30 (EST)

Zoom Link:
https://us02web.zoom.us/j/82058834607?pwd=d012R0xRcnVWMXhqcUVDa2pubFAvQT09
Meeting ID: 820 5883 4607 Passcode: 661537



# சிறைச்சாலை வாழ்க்கை இல்லை என்றால் "ஈஸ்ரர்படுகொலை இனமத நல்லிணக்க அறிதலும் புரிதலும்" என்ற இந்த புத்தகம் எழுத வாய்ப்பே இருந்திருக்க முடியாது

இலங்கை செய்திகள் Sri Lanka News

கனகராசா சரவணன்

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தலைவர் "பிள்ளையான்" சி.சந்திரகாந்தன் தெரிவிப்பு







கிழக்கு மாகாணம் எல்லோருடைய மாகாணமாக இருக்க வேண்டுமாக இருந்தால் யாரும் தாங்கள் பெரிது என தங்களை மார்தட்டக் கூடாது எந்த மதமும் தங்களை உயர்திபிடிக்க கூடாது அது பௌத்தமாக இருக்கலாம் முஸ்லீமாக இருக்கலாம் அதனை நாங்கள் எதிர்ப்போம். இந்த குண்டு வெடிப்பின் பின்னால் உள்ள சக்தி என்ன அவர்களுடைய நோக்கம் கொள்கை என்ன என்பதை இந்த புத்தகம் இலகுவாக காட்டியுள்ளது என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பிள்ளையான் என்றழைக்கப்படும் சி. சந்திரகாந்தன் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் இராஜாங்க அமைச்சர் சி.சந்திரகாந்தன் எழுதிய ஈஸ்ரர்படுகொலை இனமத நல்லிணக்க அறிதலும் புரிதலும் எனும் வரலாற்று ஆய்வு நூல் வெளியீட்டு விழா 23-03-2024 சனிக்கிழமை (23) அஞ்சனா மண்டபத்தில் இடம்பெற்றது. மேற்படி "ஈஸ்ரர்படுகொலை இனமத நல்லிணக்க அறிதலும் புரிதலும்" நூலை "பிள்ளையான்" சி. சந்திரகாந்தன் வெளியீடு செய்துவைத்து உரையற்றும் போது இவ்வாறு தெரிவித்தார்.

"சிறைச்சாலை வாழ்க்கை இல்லை என்றால் இந்த புத்தகம் எழுத வாய்ப்பே இருந்திருக்க முடியாது சிறைச்சாலையில் இடம்பெற்ற கலந்துரையாடல் சந்திப்புக்கள் மிக பயங்கரமான மனிதர்களோடு மிக நண்பனாக உரையாட கிடைத்த பாக்கியம் எல்லாம் இறைவன் கொடுத்தது அதில் தகவல் திரட்டுவதற்கு பல வழிகளிலே சிறைச்சாலை அதிகாரி சம்மாந்துறையைச் சேர்ந்த அரபு மொழி சம்மந்தமாக புலமை கொண்ட மௌலவி.

அதேபோன்று சிறையில் இருந்த ஸாரானின் தம்பி சைனி மெனியுடடைய மனைவியின் கடைசிதம்பி இப்போது சிறையில் இருக்கின்ற நவ்பர் மௌலவி கூட உரையாடி இந்த புத்தகத்தில் குரான் வசனங்களை பெற்றுக் கொண்டேன். இவ்வாறு நீண்ட வரலாற்றின் தொகுப்பில் ஒரு இஸ்லாமிய மகனும் எங்களை குற்றம் கண்டுபிடிக்க கூடாது என்பதற்காக கவனமாக எழுதப்பட்டது.

பேர்பிரகடனம் செய்து கையை உயத்தி கோட்பாடுகள் என தௌவ்பீக் கொள்கை களை வஹாபீசத்தை பேசி வழிநடாத்துகின்றவர்கள் தான் இந்த புத்தகத்தை படித்து எங்களுக்கு எதிராக பேர் கொடி தூக்குவார்கள் அவர்கள் நாட்டில் மீண்டும் ஒரு இரத்தகலரியை ஏற்படுத்த வேண்டும் என சிந்திப்பவர்களாகத்தன் இருக்கும்.

புதுவருட தினம் மட்டு ஆண்டகை பொன்னையா வருவார் அங்கு கரோல் இடம்பெறும் அதில் கனிசமான அளவு முஸ்ஸீம் இளைஞர்கள் கலந்து கொள்வார்கள் அப்படி ஒரு தினமான ஈஸ்ரர் தினத்தில் குண்டு வெடிப்பு இடம்பெற்றது.

நாம் தெரிந்தே தெரியாமலே ஒரு பேர் பிரகடனத்துக்கு மத்தியில் இருக்கின்றோம் இந்த பேர் பிரகடனத்தை நாங்கள் வலிந்து எடுக்கவில்லை இன்னும் ஒரு மதம் அந்த மதத்தில் இருக்கும் முறை மையமாக கொண்டு எங்களது பகுதியிலே வாஹாபீச கொள்கை உருவாகி இந்த நாட்டையும் உலகத்தையும் குலுக்கியது.

இதை எப்படி எதிர்காலத்தில் கையாளப்போகின்றோம் இந்த இரத்த கலரியை போலு இன்னும் ஒரு இரத்த கலரியை தடுப்பதற்கு உரிய நிலமையில் இருந்து எப்படி ஒரு அமைதியான சூழலை தொடர்ந்து தக்கவைப்பது இந்த சவாலை எப்படி எதிர் கொள்வது என சிந்திக்காமல் இருக்க முடியாது அந்த வலி வேதனையை சொல்லியிருக்கின்றோம்.

இந்த கடும் போக்குவாதிகள் எப்படி உருவாகின்றார்கள் உருவாக்கப்படுகின்றனர் என தேடிபார்க்கவேண்டும் சனல் 4 வீடியோ காட்சியை வைத்து சில அரசியல்வாதிகள் என் மீது கைநீட்டி காட்டினர் நான் விடுதலை போராட்ட காலத்தில் தமிழ் சிங்கள உறவில் நீணடகாலமாக பாதிக்கப்பட்ட அரசியல் பாடம் சந்தித்தனவன் நான் அந்த காலத்தில் மிகப் பெரும் தாக்குதல் நடாத்த எத்தனை ஆண்டுள் சென்றது.

சாதாரன ஒரு மதக் குழுவில் இருக்கின்றவர்கள் பெரும்பான்மை குழுவில் இருந்தால் எப்படி சாத்தியம் என்ற கேள்விக்கு தான் இந்த புத்தகம் பதில் சொல்லியிருக்கின்றது எப்படி மெல்ல மெல்ல எமது மண்ணில் மாற்றம் இடம்பெற்றிருக்கின்றது என அறியவேண்டும் இந்த மண்ணிலே சாதாரணமாக தமிழ் அரசியல் கட்சிகள் போல வெறுமனவே சாதாரணமான சிந்தனை கொண்டவர்களாக இருக்க முடியாது ஒரு ஆழமான கருத்தாடலையும் அறிவு சாந்த திட்டமிடுபவர் களாக இருக்கவேண்டும்.

சிறைச்சாலைக்குள் இருந்து கொண்ட இவர்கள் தமது உடைகளை கழுவுவதற்கு (சீமெந்து பாக்) மாட்டுதாள் பாக்கில் அரபு எழுத்தில் எழுதி அதனை திருப்பி வைத்து அதற்குள் உடைகளை வைத்து வெளியே அனுப்புவார்கள் அதில் அரபி எழுத்தில் என்ன தவல் கொடுத்து அனுப்புகின்றார்கள் என தெரியாது அதனை பார்க்க கூடிய அறிவு சிறைச்சாலை அதிகாரிகளுக்கு இருக்கவில்லை இன்று கூட அந்த நிலமை அப்படித்தான் இருக்கமுடியும்.

எனவே எங்கள் மண்ணிலே எங்களுக்கு முன்னால் குழந்தைகள் எரிந்து போனார்கள் இப்படி ஒரு சம்பவம் இன்னும் ஒரு முறை நடக்க கூடாது என அரசு சிந்திக்க வேண்டும்.

இந்திய எல்லைப் புறத்தில் ஐ.எஸ்.ஐ.எஸ் தலைவரை இந்தியா கைது செய்தது ரஷ்யாவில் துப்பாகி சூடு நடக்கபோவதாக அமெரிக்க உளவு பிரிவு அறிவித்தது அதனை ரஷ்ய எமது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபோல கணக்கு எடுக்வில்லை எனவே எல்லோரும் ஒன்றுபட்டு சிந்தித்தால் மட்டும் தான் இந்த பேர்பிரகடனத்தையும் சவால்களையும் வெல்ல முடியம்.

காத்தான்குடியில் வஹாபிச கருத்துக்களில் இருக்கின்ற பள்ளிவாசல் எத்தனை் சூபிக்கள் என்றால் யார். சியா சுனிமுஸ்லீம்கள் என்றால் என்ன அங்கு இருக்கின்ற அது போன்று ஏனைய மதப்பிரிவுகள் தொடர்பாக அறிந்து கொள்ள வேண்டும்.

இந்த உயிரை பயணமாக கொடுத்தவர்கள் எல்லோரும் மிக வசதி படைத்தவர்கள் இந்த வீடியோவில் காட்டப்பட்ட பலர் வசதி படைத்தவர்கள் அவர்களுடைய கம்பனி வாகரையிலே ஒரு பண்ணைக்காக பதியப்பட்டுள்ளது இதே கம்பனி தான் ஸரானை ஜப்பானுக்கு அழைத்து சென்றது அவருக்கு பித்தளையை வாங்கி கொடுத்திருக்கின்றது.

மில்கானை சவுதிக்கு பொலிஸ் பாயிஸ் அழைத்து கொண்டு சென்று விட்டுவந்துள்ளார் ஓட்டு மாவடியில் இருக்கின்ற மௌலவி சிறைச்சாலைக்கு தொழுகைக்காக அதிக பணத்தை கொடுத்துவபவரின் தந்தையாக இவர் பள்ளிவாசலால் அதிக உதவி செய்கின்ற பேர்வையில் அவர் அங்கு சந்திக்க இடம்பெற வாய்ப்பு இருக்கின்றது எங்கள் நாட்டு புலனாய்வு பிரிவு பலவீனப்பட்டு போயுள்ளது அரசியல் சூழல் காரணமாக நடவடிக்கை எடுப்பதற்கு பேசுவதற்கு எல்லோரும் அச்சப்படுகின்றனர்.

7ம் 8ம் நூற்றாண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஒரு கருப்பொருளான மதமாற்றம் 5000 ஆயிரம் வருடமான இந்த மண்ணின் பாரம்பெரியமான இந்த மாற்றத்தை தீர்மானிக்கின்ற அளவிற்கு சென்றிருக்கின்றது என்றால் அந்த பிழையை யார் ஏற்றுக் கொள்வது 1922ம் ஆண்டு தொடக்கம் ஈழகனவுகளில் நான்கள் மிதக்க 1938 எண்ணை கலாச்சரம் சவூதியில் ஏற்பட்ட மாறுதல் அது வளர்சியடைந்த அந்த அரபு தேச கலாச்சாரத்தை 1990ம் ஆணடு குழந்தைகளுக்கு ஊட்டப்படுகின்றது 1980 புத்தளத்தில் சரியா சட்டம் அச்சிடப்பட்டிருக்கின்றது சரியா சட்ட கல்லூரி இங்குவந்து அமைக்கப்பட்டிருக்கின்றது என சொன்னால் இதை கண்டும் காணாமல் போன சமூகம் யார் என சொன்னால் குண்டு வெடித்ததன் பின்னர் அதை பேச நாங்கள் அருகதை இல்லை என பேசுவோமாக இருந்தால் இதையார் பேசுவது எமது பிள்ளைகள் மரணிக்கும் வரை காத்திருக்க போகின்றோமா?

ஒரு நாட்டின் பலம் கருவில் பிள்ளை சாகாமல் தடுப்பது பிறக்கும் பிள்ளை ஆரோக்கியமாக பிறப்பது பிறந்த பின்னர் தாயும் சிசுவும் பாதுகாப்பாக வாழ்வது ஆனால் வாஹபிச கொள்கை இஸ்லாமுக்கு எதிரான காபீர்கள்களை கண்ட இடத்தில் பிரடியை வெட்டுங்கள் என்று சொன்னால் நேற்று இறந்து போன குழந்தைகள் மாத்திரம் தான் குழந்தைகளா?. எமது குழந்தைகளுக்கு வரும்வரை காத்திருக்க போகின்றோமா இன்னுமொருமுறை வராலமல் தடுக்க வேண்டும்" என்றார்.

# கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மொழிபெயர்ப்பு தின விழா

கிழக்குப் பல்கலைக்கழகத்தில் சர்வதேச மொழிபெயர்ப்பு தினம் 2023 விழா மற்றும் கண்காட்சி 21-03-2024 வியாழக்கிழமை பல்கலைக்கழக நல்லையா மண்டபத்தில் இடம்பெற்றது.

கலை கலாசார பீட மொழித்துறைத் தலைவர் கலாநிதி. ஸ்ரீகருணாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்குப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர். வ. கனகசிங்கம் கௌரவ அதிதியாக கலை கலாசார பீட பதில் பீடாதிபதி ஜி. விக்னேஸ்வரன், அதிதிகளாக மட்டக்களப்பு கல்விக் கல்லூரியின் முன்னாள் உபபீடாதிபதி மனோகரன்.

கிழக்குப் பல்கலைக்கழக சௌக்கிய பராமரிப்பு பீட பீடாதிபதி பேராசிரியர். சதானந்தன், தொழிநுட்பவியல் பீட பீடாதிபதி பேராசிரியர் மதிவேந்தன் பட்டதாரி கற்கைகள் பீட பீடாதிபதி பேராசிரியர் கென்னடி மற்றும் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் உட்பட மாணவர்களும் கலந்து கொண்டனர்.

இதன்போது மாணவர் மொழிபெயர்ப்பாளர் (The Student Translator) மற்றும் மொழ பெயர்ப்பாளரின் சொற்களஞ்சியம் (The Translator's Glossary) ஆகிய தலைப்புகளில் மென்பிரதி நூல்கள் வெளியீட்டு வைக்கப்பட்டதுடன், தென்கிழக்குப் பல்கலைக்கழக மொழித்துறை பேராசிரியர் அஷ்ரப் நூல் திறனாய்வு உரையை நிகழ்தினார்.

இதேவேளை மொழிபெயர்ப்பு தொடர்பான விடயங்கள் அடங்கிய கண்காட்சியை கலை கலாசார பீட பதில் பீடாதிபதி ஆரம்பித்து வைத்துடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் அரங்கேற்றப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









இலங்கை செய்திகள்
Sri Lanka News

# ரணில் விக்கிரமசிங்க தனது ஆட்சிக் காலத்தில் பல தேர்தல்களுக்கு "ஆப்பு" வைத்தவர்

## தேர்தல் முறைமை தொடர்பாக தற்போது கொண்டுவரும் சட்ட மூலம் நடக்க இருக்கும் தேர்தல்களை பிற்போடுவதற்கான ஆயத்தமாகும் என்கிறார் கோவிந்தன் கருணாகரன் எம்.பி

கனகராசா சரவணன்

தேர்தல்களை பிற்போடுவதில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வல்லமையுள்ளவர் எனவே இலங்கை நாடாளுமன்ற தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்கு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸா நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கின்ற சட்ட மூலம் நடக்க இருக்கும் தேர்தல்களை பிற்போடுவதற்கான ஆயத்தமாக இருக்கலாம் என நா.உறுப்பினர் கோவிந்தன் கருணாகரன் தெரிவித்தார்.


மட்டக்களப்பில் வாவிக்கரையில் அமைந்துள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான கோவிந்தன் கருணா-கரனின் காரியாலயத்தில் செவ்வாய்க்கிழமை (26) இடம்பெற்ற ஊடக மாநாட்டில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஈஸ்ரர் குண்டிவெடிப்பு தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி மைதிரிபால சிஜடி யினரால் வாக்கு மூலம் பெறப்பட்டுள்ளார் 2019 அவர் ஜனாதிபதியாக இருந்த காலகட்டம் அந்த குண்டுவெடிப்பை இலங்கையிலுள்ள அரசியல் கட்சிகள் ஒட்டுமொத்தமாக கோட்டபாயாவை ஜனாதிபதியாக கொண்டுவருவதற்காக அவரின் கீழ் இயங்கிய புலனாய்வு பிரிவினரால் திட்டமிட்டு செய்யப்பட்ட குண்டுவெடிப்பாக பேசப்பட்டது.

சனல் 4 ஊடகம் ஊடாக தமிழ் மக்களின் விடுதலைப் புலிகளின் முக்கிய பொறுப்பில் இருந்தவர் கடந்த வருடம் ஈஸ்ரர் குண்டுவெளடிப்பு தொடர்பாக அம்பலமாக்கி பிரபலமானது தற்போது ஈஸ்ரர் படுகொலை சம்மந்தமாக தமிழ் மக்களின் விடுதலைப் புலிகளின் தலைவர் சி. சந்திரகாந்தன் (பிள்ளையான்) புத்தம் எழுதி வெளியிட்டுள்ளார்.

அதில் பல விடையங்களை குறிப்பிட்டிருக்கின்றார் அதேவேளை முன்னாள் ஜனாதிபதி மைதிரிபால குண்டுவெடிப்பு சூத்திரதாரிகளை தனக்கு தெரியும் என குறிப்பிட்டுள்ளார் அவர் இந்த நாட்டின் ஜனாதிபதியாக இருந்தவர் தனக்கு தெரிந்த விடையங்களை வெளிப்படையக கூறி மனித உயிர்களை பலியெடுத்து அந்த சூத்திரதாரிகளை சட்டத்துக்கு முன் கொண்டுவருவதற்கு துனை போகவேண்டும்.

அதனூடாக இந்த ஈஸ்ரர் படுகொலை யாருக்காக அது நடாத்தப்பட்டது அல்லது எதற்காக நடாத்தப்பட்டது என்ற உண்மை வெளிவரவேண்டும். மைதிரிபால எதை கூறியுள்ளார் என இன்னும் வெளிவரவில்லை ஆனால் அவரின் கூற்றுக்கள் அனைத்தும் மக்களுக்கு வெளிப்படையாக கூறப்படவேண்டும்.



அதேபோன்று இந்தவருடம் தேர்தல் ஆண்டாக இருக்கின்றது அது ஜனாதிபதி தேர்தலா நாடாளுமன்ற தேர்தலா முதல் வரவேண்டும் என சந்தேகம் இருக்கின்றது அதேவேளை சரி பிழைக்கு அப்பால் இலங்கை அரசியல் அமைப்பின்படி ஜனாதிபதி தேர்தல் எதிர்வரும் 10 மாதத்திற்கு முன்பு நடந்தே ஆகவேண்டும் ஆனால் தற்போது இலங்கை நாடாளுமன்ற தேர்தல் முறையை மாற்றி அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் கொடுத்திருக்கின்றது.

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஸா நாடாளும்ன்றத்தில் சமர்ப்பிக்க இருக்கின்ற சட்ட மூலம் நடக்க இருக்கும் தேர்தல்களை பிற்போடுவதற்காக ஆயத்தமாக இருக்கலாம் ஏன் என்றால் மாகாணசபை தேர்தல்கள் நடைபெறாமல் கடந்த 7 வருடங்களாக இருக்கின்றது.

அவ்வாறே மாகாணசபை தேர்தல் நடாத்துவதற்கான காலம் வரும்பேர்து அந்த மாகாணசபை தேர்தல் முறையில் ஒரு மாற்றத்தை கொண்டுவருவதற்காக நாடாளுமன்றத்தில் ஒரு சட்டத்தை கொண்டுவந்து இன்றுவரை அந்த தேர்தல் நடைபெறாமல் இருக்கின்றது அதேபோன்று உள்ளூராட்சி மன்ற தேர்தல்கள் பிற்போடப்பட்டுள்ளது எனவே இந்த தேர்தல்களை ஒத்தி போடுவதிலே வல்லமையுள்ளவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

எதிர்வரும் தேர்தல்களை பிற்போடுவதற்கான ஆயத்தமாக இந்த தேர்தல் முறை மாற்றம் சட்டமூலத்தை கொண்டுவருகின்றாரே என்ற சந்தேகம் இருக்கின்றது எது எப்படி இருந்தாலும் ஜனாதிபதி தேர்தல் நடந்தே ஆக வேண்டும் அதே-வளை தமிழ் மக்கள் இந்த ஜனாதிபதி தேர்தலில் எங்களுக்காக எடுக்கும் முடிவ-ில் நாங்களும் ஒற்றுமையாக செயற்பட்டு சரியான முடிவை எடுக்க வேண்டும் என்றார்.

# இஸ்லாமிய மதத்தை இழுவு படுத்திய ஞானசார தேரருக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் ரூபா அபதாரமும் — நீதிமன்றம் தீர்ப்பு



கூரகல விகாரையில் இஸ்லாமிய மதத்தை இழிவுபடுத்தும் வகையில் வெளியிட்ட கருத்து, தேசிய மற்றும் மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவித்ததாக சம்மந்தமாக ஞானசார தேரருக்கு எதிராக சட்டமா அதிபரால் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே 28-03-2024 அன்று வியாழக்கிழமை 4 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் ரூபா அபதாரமும் செலுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

கடந்த 2016 ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கூரகல விகாரையில் வைத்து இஸ்லாமிய மதத்தை இழிவுபடுத்தும் வகையில் வெளியிட்ட கருத்து, தேசிய மற்றும் மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவித்ததாக குற்றச்சாட்டில் ஞானசார தேரருக்கு எதிராக சட்டமா அதிபரால் இரண்டு வழக்குகள் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சட்டமா அதிபரால் தாக்கல் செய்யப்பட்டிருந்த இந்த இரண்டு வழக்கில் அவர் குற்றவாளி என அறிவிக்கப்பட்டிருந்த நிலையில் இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகேவால் முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது நீதிபதி அவருக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் ரூபா அபராதமும் செலுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்.

THANA INSURANCE Inc.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

Cell : 416-728-5772
Office : 416-519-3896

Thana Manickavasagar
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# சட்டவிரோத தையிட்டி திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் ஆரம்பம்!

பு. கஜிந்தன்





சட்டவிரோதமாக மக்களது காணிகளை அபகரித்து அமைக்கப்பெற்ற திஸ்ஸ விகாரைக்கு எதிரான போராட்டம் ஆரம்பமாகியுள்ளது.

இந்த போராட்டமானது தொடர் போராட்டமாக, ஒவ்வொரு பௌர்ணமி தினத்திற்கும் முதல்நாள் ஆரம்பமாகி பௌர்ணமி தினத்தன்று மாலை நிறைவடையும்.

அந்தவகையில் ஆரம்பமாகிய இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமாகிய செல்வராஜா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், கட்சியின் உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் இந்த போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

# வழங்கப்படும் பயன்கள் அனைத்தும் மக்களுக்கு உச்சபட்சமாக கிடைக்க வேண்டும் – அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு!



நான் என்றும் சுயநலத்துக்காகவோ அல்லது அரசியல் நோக்கத்துக்காக எவரையும் வற்புறுத்துவதோ திணிப்பதோ கிடையாது. அதுமட்டுமல்லாது அவ்வாறான நிலையிலிருந்து மக்கள் பணிகளை செய்வதை விரும்புவதும் கிடையாது மாறாக அனைத்தும் மக்களுக்கும் வழங்கப்படும் பயன்கள் உச்சபட்சமாக கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாடிலிருந்துதான் செயற்படுகின்றேன் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

2024 ஆம் ஆண்டுக்கான பன்முகப்படுத்தப்பட நிதி ஒதுக்கீட்டில் முன்மொழியப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ள முன்மொழிவுகள் தொடரில் ஆராயும் முன்னாயத்தக் கூட்டம் யாழ் கிளிநொச்சி ஒருங்கிணைப்பு குழு தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் ஆராய்ந்து கருத்து தெரிவிக்கையில் இவ்வாறு தெரிவித்த அமைச்சர் மேலும் கூறுகையில்,

மக்களுக்காக கடைக்கின்ற நிதிகளை திட்டங்களாக நடைமுறைப்படுத்துவதை விரைவாக முன்னெடுக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இக்கூட்டம் நடைபெறுகின்றது.

இதேவேளை அரச கொள்கைகளை ஏற்றுக்கொள்ளக்கூடிய வடக்கின் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் ஜனாதிபதி விசேட நிதி ஒன்றை வழங்க முன்வந்துள்ளார்.

அந்த வகையில் கிடைத்துள்ள இந்த சந்தர்ப்பத்தை மக்களுக்கானதாக பெற்றுக்கொடுக்க வேண்டும் என்பதே எனது நோக்கம்.

இது திணிப்போ அல்லது அரசியல் நோக்குடையதோ என்று எண்ணவேண்டாம். நான் என்றும் சுயநலத்துக்காக அல்லது அரசியல் நோக்கத்துக்காக எவரையும் வற்புறுத்துவதோ திணிப்பதோ கிடையாது. மாறாக அரசியல் இலபத்துக்காக செயற்றிட்டங்களையும் முன்னெடுப்பதையும் விரும்புவதில்லை.

அனைத்தும் மக்களுக்கும் பயன்கள் உச்சபட்சமாக கிடைக்க வேண்டும் என்ற நிலைப்பாடிலிருந்துதான் இவற்றை பார்க்கப்பட வேண்டும்.

கடந்த 3 வருடங்களாக பன்முகப்படுத்தப்பட்ட நிதி கிடைக்கவில்லை. ஆனால் தற்போது அது 320 மில்லியனாக எமது மாவட்டத்திற்கு கிடைத்துள்ளது.

அந்தவகையில் கிடைதுள்ள இந்த நிதியூடாக மக்களுக்கு உச்சபட்சமான பலனை கிடைக்க செய்வதே எம் ஒவ்வொருவரினதும் கடமையாகும் என்றும் தெரிவித்திருந்தார்.

குறித்த இந்த கூட்டத்தில் யாழ்ப்பாண மாவட்ட பதில் அரச அதிபர், யாழ்ப்பாண மாவட்ட உள்ளூராட்சி ஆணையாளர், சமுர்த்தி உதவி ஆணையாளர், பிரதேச செயலர்கள் பிரதேச சபைகளின் செயலாளர்கள் துறைசார் அதிகாரிகள் என பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# வட்டுக்கோட்டை பவித்திரன் கொலை விவகாரம் – பிரதான சந்தேகநபர் உட்பட மூவர் கைது!

யாழ்ப்பாணம் - வட்டுக்கோட்டை, மாவடியைச் சேர்ந்த 23 வயதான தவச்செல்வம் பவித்திரன் கடத்திக் கொலை செய்யப்பட்டமை தொடர்பில் மேலும் 3 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களில் பிரதான சந்தேகநபர் ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. கைது செய்யப்பட்ட மூவரும் வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவை சேர்ந்தவர்கள். 24-03-2024 அன்று கைது செய்யப்பட்ட சந்தேகநபர்களை நீதிமன்றில் முன்னிலைப்படுத்தவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் பொன்னாலையில் உள்ள கடற்படை முகாமில் தஞ்சம் புகுந்தவேளை அங்கிருந்து கடத்தப்பட்டு கடந்த 11ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட இந்த கொலைச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே கைது செய்யப்பட்ட 6 சந்தேகநபர்கள் எதிர்வரும் 28ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.



# யாழ்ப்பாணம் கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதி அளவீட்டுப்பணி மக்களின் எதிர்ப்பால் கைவிடப்பட்டது!

யாழ்ப்பாணம் - கீரிமலை ஜனாதிபதி மாளிகை அமைந்துள்ள பகுதியை நகர அபிவிருத்தி நடவடிக்கைக்காக சுவீகரிக்கும் அடிப்படையில் அளவீடுகள் செய்வதற்கு நில அளவைத்திணைக்கள அதிகாரிகள் 26-03-2024 அன்று காலை 10 மணியளவில் வருகை தந்திருந்தனர்.

இதன்போது குறித்த காணி அளவீட்டுக்கு காணி உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் எதிர்ப்பை வெளியிட்டதுடன் நில அளவைத்திணைக்களத்தின் வாகனத்தினையும் இடைமறித்தனர்.

பின்னர் நீண்ட நேர காணி உரிமையாளர்களின் எதிர்ப்பினை அடுத்து காணியினை அளவீடு செய்வதற்கு தமக்கு விருப்பம் இல்லை என காணி உரிமையாளர்கள் கடிதம் எழுதி கையொப்பமிட்டு வழங்கியதை அடுத்து நில அளவைத்திணைக்கள அதிகாரிகள் அங்கிருந்து திரும்பிச் சென்றனர்.



குறித்த பகுதியில் அதிகமான பொலிஸார் மற்றும் புலனாய்வுப் பிரிவினர் குவிக்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# கொழும்பில் Women Plus Bazaar 2024 கண்காட்சியின் விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர்





Women Plus Bazaar 2024 கண்காட்சியின் விருந்தினராக வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் கலந்து சிறப்பித்தார்.

இலங்கைக்கான எகிப்து தூதரகத்தால் கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்ட Women Plus Bazaar 2024 கண்காட்சியின் கௌரவ விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் கலந்து சிறப்பித்தார். கொழும்பு காலிமுகத்திடலில் அமைந்துள்ள One Galle Face சிறப்பு அங்காடி தொகுதியில் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த கண்காட்சி கூடத்தை, ஏனைய அதிதிகளுடன் இணைந்து வடக்கு மாகாண ஆளுநர் திறந்து வைத்தார். பின்னர் கண்காட்சி கூடத்தையும் பார்வையிட்டார்.

நாட்டிலுள்ள ஒன்பது மாகாணங்களில் வசிக்கும் 100க்கும் மேற்பட்ட கைவினை கலைஞர்களின் உற்பத்திகளை மேம்படுத்தும் நோக்கில் இந்த கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பல்வேறு மாவட்டங்களிலும் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் பெண் தொழில் முனைவோரை இலக்காகக் கொண்டு இந்த கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

இந்த வைபவத்தில் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் அவர்களும் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார்.


TRADITIONAL CHINESE ACUPUNCTURE THERAPY

| | |
|---|---|
| எல்லாவிமான வலிகளுக்கும் | All Pain & Aches, Arthritis |
| ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை | Asthma, Sinusitis, Rhinitis Allergies |
| மனத்தளர்ச்சி, தலைவலி | Stress, Migraine & All Types of Headaches |
| நீரிழிவு நோய், வயிற்றுவலி | Diabetes, Gastric Pain, Ulcer |
| மாதவிடாய் சம்மந்தமானவையும் | Menstruation |
| உடற்பருமன் குறைத்தல் | Weight Loss |

முதலான சகலவிதமான நோய்களுக்கும்


Mrs. K. Vasanthakumar ஐ

Acupuncturist (R.A.C)

தொடர்புகொள்ளவும்.

(416) 754-4024

5200 Finch Ave., East -- Suit #349
Scarborough, ON M1S 4Z5



இலங்கை செய்திகள் Sri Lanka News

# யாழ்ப்பாண இந்திய துணை தூதரகம் மற்றும் யாழ்ப்பாண பல்கலைக்கழகம் ஆகியன இணைந்து நடத்திய ஆய்வரங்கு!



யாழ்ப்பாண இந்திய துணைத் தூதரகம், யாழ்ப்பாண பல்கலைக்கழக நடனத்துறையுடன் இணைந்து பட்டப்படிப்பு மாணவர்களின் ஆய்வு அரங்கை முன்னிட்டு வழங்கும் ஆடல் அரங்கம் யாழ்ப்பாணம் பண்பாட்டு மையத்தில் நடைபெற்றது.

இந்தியாவின் பிரபல பரதநாட்டிய கலைஞர் கலைமாமணி முனைவர M.S சரளாவினது நெறியாள்கையில் அவரது மாணவி தேவியின் சிறப்பு பரத நாட்டிய நிகழ்வுடன் யாழ்ப்பாண பல்கலைகழக நடனத்துறை மாணவர்கள் இணைந்து வழங்கும் நடன நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இதன்போது சப்பதிகார ஆடல், தில்லானா ஆகிய நடனங்கள் இடம்பெற்றன.







இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, யாழ் இந்திய துணைத் தூதரக பதில் தூதர் ராம் மகேஷ், பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

# பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் திடீர் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவிற்கான புதிய கட்டடம் திறப்பு!



பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் திடீர் விபத்து மற்றும் அவசர சிகிச்சை பிரிவிற்கான புதிய கட்டடம் கௌரவ ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அவர்களினால் 22-03-2024 அன்று திறந்து வைக்கப்பட்டது. நெதர்லாந்து அரசின் மென்கடன் திட்டத்தின் கீழ் இந்த புதிய கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. சுமார் 4000 மில்லியன் ரூபா செலவில் இக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட்டிருக்கின்றது.

புதிய கட்டடத் தொகுதியில் அவசர சிகிச்சைப் பிரிவு, தீவிர சிகிச்சைப் பிரிவு, சத்திர சிகிச்சை கூடங்கள், குருதி சுத்திகரிப்பு பிரிவு, கதிரியக்கப் பிரிவு, சிறுவர்களுக்கான விசேட சிகிச்சைப் பிரிவு, குழந்தைகளுக்கான சிகிச்சை பிரிவு, மற்றும் நோயாளர் விடுதி ஆகியன உள்ளடக்கப்பட்டுள்ளன.



யாழ்ப்பாண மாவட்டத்தில் காணப்படும் நான்கு ஆதார வைத்தியசாலைகளில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையும் ஒன்றாகும். இது "ஏ" தர ஆதார வைத்தியசாலையாக காணப்படுகின்றது. ஆதார வைத்தியசாலைகளின் வசதிகள் குறைவாக காணப்படுவதால் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையை அதிகளவில் நாட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையில் தற்போது புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள அவசர மற்றும் திடீர் விபத்து பிரிவின் ஊடாக பலர் நன்மையடைய உள்ளனர்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் புதிய கட்டிடத்தை திறந்து வைத்ததன் பின்னர் ஜனாதிபதி உள்ளிட்ட குழுவினர் சிகிச்சைப் பிரிவுகளை சென்று பார்வையிட்டனர். இந்த வைத்தியசாலையின் ஊடாக அதிகபட்ச பலனை பெற்றுக்கொள்ள வேண்டுமென வடக்கு மாகாண கௌரவ ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்கள் இதன்போது தெரிவித்தார். குறிப்பாக புதிய சிகிச்சை பிரிவில் ஊடு ஸ்கேன் மற்றும் தீவிர சிகிச்சை பிரிவுகள் ஸ்தாபிக்கப்பட்டுள்ளமையானது இப்பகுதி மக்களுக்கான ஒரு வரப்பிரசாதம் எனவும் கௌரவ ஆளுநர் தெரிவித்தார். ஆகவே மத்திய அரசாங்கத்தின் "அனைவருக்கும் ஆரோக்கியம்" என்ற கொள்கையை அனைத்து மக்களிடையேயும் கொண்டு செல்வதை உறுதி செய்வதற்காக கடுமையாக உழைக்க வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் இதன்போது தெரிவித்தார்.






MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinicanada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



MORTGAGE ALLIANCE
RIGHTBROKER = RIGHTMORTGAGE
Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4



# ஜனாதிபதித் தேர்தலில் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளர்

**யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்**

பசில் ராஜபக்ச ஒரு சிறந்த டீலர் என்பது எல்லாருக்கும் தெரியும். அவர் அமெரிக்காவிலிருந்து வந்ததும் ஜனாதிபதித் தேர்தலுக்கான டீல்கள் ஆரம்பமாகும் என்பதும் எல்லோரும் எதிர்பார்த்ததே. அவர் வந்ததும் ஜனாதிபதியுடன் உரையாடினார். பேச்சுவார்த்தையின் முடிவுகள் வெளியில் வெளிப்படையாகத் தெரியவில்லை. ஆனால் ஜனாதிபதித் தேர்தலுக்குப் பதிலாக பொதுத் தேர்தலை முதலில் வைக்கலாம் என்ற ஒரு ஆலோசனையை பசில் வெளிப்படுத்தினார். பின்னர் மஹிந்த ராஜபக்சவும் அதை ஆதரித்தார்.

அதாவது ராஜபக்சக்கள் பொதுத் தேர்தலை முதலில் வைக்க விரும்புகிறார்கள். ஏனென்றால் ஒரு ஜனாதிபதி தேர்தலின் பின் பொதுத் தேர்தல் வைக்கப்படும் போது ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறும் கட்சி அல்லது கட்சிகளின் கூட்டானது, பொதுத் தேர்தலில் வெல்வதற்கான வாய்ப்புகளை அதிகமாக கொண்டிருக்கும். ஏனெனில் ஜனாதிபதி தேர்தலில் கிடைத்த வெற்றி வாக்காளர்களை பொறுத்தவரை ஒரு முன் முடிவாக அல்லது முற்கற்பிதமாக மாறும். இதனால் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றி பெற்ற தரப்பு அடுத்தடுத்த தேர்தல்களிலும் வெற்றி பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கும். எனவே ஜனாதிபதித் தேர்தல் முடிவுகள் வாக்காளர்களுக்கு முற்கற்பிதமாக அல்லது முன் முடிவுகளாக அமையாத விதத்தில் முதலில் பொதுத் தேர்தலை வைக்கலாம் என்ற ஆலோசனையை ராஜபக்சக்கள் இப்பொழுது முன்வைக்கின்றார்கள். ஆனால் அவர்களுடைய காலத்தில் முதலில் ஜனாதிபதி தேர்தல்கள்தான் நடந்தன என்பது வேறு கதை.

அவர்கள் ஏன் முதலில் பொதுத்தேர்தலில் வைக்க வேண்டும் என்பதற்கு கூறும் காரணம் புத்திசாலித்தனமாக தெரியலாம். ஆனால் அவர்கள் உண்மையான காரணத்தை மறைப்பதற்குத்தான் அவ்வாறு புத்திசாலித்தனமான ஒரு காரணத்தை கூறுகிறார்கள் என்பதே உண்மை நிலையாகும்.

ஒரு பொதுத் தேர்தலை வைத்தால் அதில் தாமரை மொட்டுக் கட்சிக்கு அதாவது ராஜபக்சங்களுக்கு எதிர்பார்த்த வெற்றி கிடைக்காமல் போகலாம். ஆனால் நிச்சயமாக ரணில் விக்கிரமசிங்கவின் யுஎன்பியை விடவும் கூடுதலான வாக்குகள் தமக்குக் கிடைக்கலாம் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதனால் தங்களுக்கு பேர பலம் அதிகமாக இருக்கும் என்றும் அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். அதாவது ராஜபக்சக்கள் தங்களுடைய பேர பலத்தை உயர்த்திக் கொள்ள விரும்புகிறார்கள்.

ஜனாதிபதி தேர்தல் முதலில் நடந்தால், ரணில் விக்கிரமசிங்க அதில் வெற்றி பெறுவாராக இருந்தால், அது அவருடைய பொருளாதார மறுசீரமைப்புகளுக்கு கிடைத்த வெற்றியாகவும் கருதப்படும். அது அவருடைய பேர பலத்தை அதிகப்படுத்தும். அந்நிலையில் பொது தேர்தலை வைக்கும் பொழுது தாமரை மொட்டுக் கட்சி அதாவது ராஜபக்சக்கள் ரணில் விக்கிரமசிங்கவோடு பேரம் பேசுவதில் வரையறைகள் தோன்றலாம். எனவே பொதுத் தேர்தலை முதலில் வைத்து அதில் தங்களுடைய பேர பலத்தை நிரூபிப்பதற்கு ராஜபக்சக்கள் விரும்பக்கூடும்.

அது ரணில் விக்கிரமசிங்கவுக்கும் தெரியும். அவரைப் பொறுத்தவரை இது கடைசி ஓவர். அவருக்கு வயதாகிவிட்டது. தன்னுடைய கடைசி ஓவரிலாவது தன் சொந்தப் பலத்தோடு அல்லது அதிகரித்த பேர பலத்தோடு ஆட்சிக்கு வர அவர் விரும்பக் கூடும். எனவே அவர் ராஜபக்சக்களின் கோரிக்கையை பரிசீலிக்கும் வாய்ப்புகள் குறைவாகவே தெரிகின்றன.

பசில் அமெரிக்காவிலிருந்து திரும்பியதும் தெரிவித்த கருத்துக்களில் முக்கியமானது பொதுத் தேர்தலை முதலில் வைக்க வேண்டும் என்பது. மற்றது தமது சகோதரர் கோட்டாபயவின் புத்தகத்தை தான் இதுவரை வாசிக்கவில்லை என்றது. கோட்டாபயவின் எல்லாக் கருத்துகளோடும் ஏனைய ராஜபக்சக்கள் முழுமையாக உடன்படவில்லை என்பது.

பசில் புத்தகத்தை வாசித்தாரோ வாசிக்கவில்லையோ, அந்தப் புத்தகத்தில் கூறப்பட்ட விடயங்களில் தமக்கு ஆர்வம் இல்லை என்பதனை அவர் மறைமுகமாகக் கூறுகிறார். தமது சகோதரர் கோட்டாபய ராஜபக்சவின் தவறுகளுக்கு அவர்கள் பொறுப்பேற்கத் தயாரில்லை என்பதையும் மறைமுகமாக வெளிப்படுத்துகின்றார். சகோதரர்களுக்கு இடையில் இருக்கக்கூடிய முரண்பாட்டை வெளிப்படையாகப் பேச வேண்டிய தேவை என்ன? அதற்கு ஒரு அரசியல் பெறுமதி இருக்கும் காரணத்தால்தான் அவர் அவ்வாறு கூறுகிறார். கோட்டாபயவின் ஆட்சிக் கொள்கையை ஏனைய சகோதரர்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதனை அவர் மறைமுகமாகக் கூறுகிறார்.

இவ்வாறு நாடு திரும்பிய கையோடு பஸில் தெரிவித்த கருத்துக்களின் ஊடாக அவர்கள், அதாவது ராஜபக்சக்கள் மீண்டும் அரசியல் பேர விளையாட்டில் இறங்கப் போகிறார்கள் என்று தெரிகிறது.

அதாவது, தென்னிலங்கையில் மும்முனைப் போட்டி தீவிரமடையும் என்று பொருள். இது தமிழ் மக்களுக்கு ஒரு விதத்தில் சாதகமானது. ஏனெனில் சிங்கள வாக்குகள் மூன்றாகப் பிரியும் பொழுது எந்த ஒரு சிங்கள வேட்பாளரும் திட்டவட்டமாக 50 வீதத்துக்கு அதிகமான வாக்குகளைப் பெறுவது சவால்கள் மிகுந்ததாக மாறலாம். அப்பொழுது தமிழ் வாக்குகள் தீர்மானகரமான வாக்குகளாக மாற முடியும். அதாவது தமிழ் மக்களின் பேர பலம் அதிகரிக்கும்.

அப்படி ஒரு எதிர்பார்ப்போடு தான் ஈ.பி.ஆர்.எல்எப் கட்சியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ் பொது வேட்பாளர் என்ற தெரிவை கடந்த சில மாதங்களாக அழுத்தமாக வலியுறுத்தி வருகிறார்.

தமிழ் பொது வேட்பாளர் என்ற விடயத்தை கடந்த ஜனாதிபதி தேர்தலின் போது முன்வைத்தது தமிழ் மக்கள் பேரவையால் நியமிக்கப்பட்ட சுயாதீனக் குழுவாகும். இம்முறை அதனை முதலில் கதைத்தது சுரேஷ் பிரேமச்சந்திரன். அதன் பின் அவர் அங்கம் வகிக்கும் குத்துவிளக்குக் கூட்டணி அதனை ஒரு தீர்மானமாக வெளிப்படுத்தியது. ஆனால் குத்து விளக்கு கூட்டணிக்குள் உள்ள பெரும்பாலான கட்சிகள் அந்த விவகாரத்தில் தமிழரசுக் கட்சி தங்களோடு இணையாவிட்டால் அது ஒரு பிரயோசனமான நகர்வாக அமையாது என்று கருதுவதாகத் தெரிகிறது. தமிழரசுக் கட்சி அகோரிக்கையை ஆதரிக்காவிட்டால் பொது வேட்பாளர் என்று தெரிவு வெற்றி பெறாது என்றும் அவர்கள் நம்புவதாகத் தெரிகிறது.

இது ஒரு தன்னம்பிக்கை குறைவான விடயம். தங்கள் சொந்தக் கட்சியில், தங்கள் சொந்த உழைப்பில் அவர்களுக்கு நம்பிக்கை குறைவு என்று பொருள். தமிழரசுக் கட்சியும் இணைந்தால்தான் வெற்றி பெறலாம் என்று நம்புவது ஒருவித தாழ்வுச் சிக்கல்தான். தாங்கள் முன்வைக்கும் ஒரு கோரிக்கைக்காக உழைத்து, அதற்காக அர்ப்பணிப்புகளைச் செய்து, அதில் வெற்றி பெற வேண்டும் என்ற வைராக்கியம் குத்துவிளக்கு கூட்டணிக்குள் எத்தனை கட்சிகளிடம் உண்டு?

இதனிடையே ஜனாதிபதி தேர்தலில் ஒரு தமிழ் பொது வேட்பாளரை நிறுத்த வேண்டும் என்ற கோரிக்கையை ஒரு கருத்தாக உருவாக்கும் நோக்கத்தோடு, டான் டிவி நிறுவனத்தினால் நிர்வகிக்கப்படும் ஒரு சிவில் அமைப்பு, ஒரு கருத்தரங்கை அண்மையில் ஒழுங்குபடுத்தியது. “மக்கள் மனு” என்று பெயரிடப்பட்ட அக்கருத்தரங்கில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியைத் தவிர ஏனைய எல்லா கட்சிகளும் கலந்து கொண்டன. சுமந்திரன் அணி பங்கு பற்றவில்லை. சிறீதரன் பங்குபற்றினார். அதில் பேசிய பெரும்பாலான கட்சித் தலைவர் பொது வேட்பாளருக்கு ஆதரவாகக் கருத்து கூறினார்கள்.

அதன்பின் அந்த சிவில் அமைப்பு தென்னிலங்கையில் உள்ள அரசியல் கட்சி தலைவர்களை சந்தித்து வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன. டான் டிவியின் தமிழ்ப் பொது வேட்பாளர் எந்த நோக்கத்தின் அடிப்படையில் முன்வைக்கப்படுகிறார் என்பது இன்னமும் தெளிவாகவில்லை. தமிழ்ப் பொது வேட்பாளர் என்று தெரிவு முதலாவதாக ஜனாதிபதி தேர்தலை ஒரு பொது வாக்கெடுப்பாக மாற்றும் நோக்கிலானது. அதன் மூலம் தமிழ் மக்களின் உச்சபட்ச கோரிக்கைகளை முன்வைத்து அதற்கு தமிழ் மக்களின் அகப்பிந்திய ஆணையைப் பெறுவது. அதன் பின்னர் தான் சிங்கள வேட்பாளர்களோடு பேரம் பேசுவதா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது.

எனவே தமிழ் பொது வேட்பாளர் என்று தெரிவு ஆகப்பிந்திய ஒரு தமிழ் ஆணையைப் பெறுவதற்கான உள்நோக்கமுடையது. அதில் தமிழ் மக்களின் முன் வைக்கப் போகும் கோரிக்கைகள் உச்சமானவைகளாக இருக்க வேண்டும். நீதிக்கான கோரிக்கையும் தமிழ் மக்களின் பொது விருப்பினை வெளிப்படுத்தும் பொது வாக்கெடுப்புக்கான கோரிக்கையும் அதில் உள்ளடக்கப்பட வேண்டும். தமிழ் பொது வேட்பாளர் தமிழ் கோரிக்கைகளின் குறியீடாக நிற்பார். தமிழ் ஐக்கியத்தின் குறியீடாக நிற்பார். அவர் தமிழ் மக்களின் அகப்பிந்திய மக்கள் ஆணையை உலகிற்கு வெளிப்படுத்துவார்.

இம்முயற்சியில் தோல்வியுற்றால் அது தமிழ் மக்களின் கோரிக்கைகளை பலவீனப்படுத்திவிடும் என்று ஒரு பகுதி விமர்சகர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். குத்துவிளக்குக் கூட்டணிக்குள்ளும் அந்த அச்சம் உண்டு. அதனால் தான் தமிழரசுக் கட்சி அதில் இணைய வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கிறார்கள். தமிழரசுக் கட்சியோ அதன் உள் வீட்டுப் பிரச்சினைகளால் நீதிமன்றத்தில் போய் நிற்கின்றது. எனவே தமிழரசுக் கட்சி ஜனாதிபதித் தேர்தலைக் குறித்து ஒரு உறுதியான முடிவை எடுக்க முடியாத நிலையில் காணப்படுகின்றது.

இந்நிலையில், குத்துவிளக்குக் கூட்டணியும் டான் டிவியின் சிவில் சமூகமும் இணைந்து ஒரு பொதுத் தமிழ் வேட்பாளரை நோக்கி முன்னெடுக்கும் கருத்துருவாக்கம் தமிழ் மக்களின் அகப்பிந்திய ஆணையை வெளிக்கொண்டுவரும் வெற்றிகரமான ஒரு செயற்பாடாக அமையுமா இல்லையா என்பது விரைவில் தெரியவரும்.

## வீணாவின் கவிக்கணை

தொலைந்து போன
வாழ்க்கையைத் தேடி
துவண்டு போய்,
நிர்கதியாய் நிற்காமல்,
புதிதாய்த்தெரியும்
பாதையில் பயணித்து
இழந்ததையெல்லாம்
மீட்டேடுத்து,
உன்னாலும் வாழமுடியும்
என நிரூபித்து,
நிம்மதியான வாழ்க்கையை
வாழ்ந்து காட்டிடு
இவ்வுலகிற்கு.



# ஒரு அசாதாரண "அரசராக" விளங்கிய கனடாவின் 18வது பிரதமர் பிரையன் மல்ரோனி மறைந்தார்

கனடிய செய்திகள் Canadian News

## கனடியத் தமிழர்கள் அன்னாருக்கு நன்றி உணர்வுடன் அஞ்சலி செலுத்தினார்கள்

அண்மையில் காலமான கனடாவின் சிறந்த பிரதமர்களாக பணியாற்றிய சிலருள் ஒருவராக மதிக்கப்பெற்ற பிரையன் மல்ரோணி அவர்களின் இறுதிக்கிரியைகள் 23-03-2024 அன்று கனடியத் தலைநகராக ஒட்டாவா மாநகரில் பாராளுமன்றத்திற்கு அருகில் நடைபெற்றது. அவரது இறுதிக்கிரியைகளில் கனடியத் தமிழர்கள் பெருமளவில் பங்குபற்றாவிட்டாலும் ஒட்டு மொத்த தமிழ் மக்களும் அன்னாருக்கு நன்றியுடையவர்களாக இன்றும் இருப்பதற்கு காரணங்கள் உண்டு.

1986ம் ஆண்டு கனடாவின் நியுபவுண்லேன்ட் மாகாணத்தின் கரையில் கப்பலொன்றில் அனுமதியின்றி சட்டவிரோதமாக வந்திறங்கிய 155 இலங்கைத் தமிழ் அகதிகளை கனடிய அரசாங்கம் ஏற்றுக்கொள்வதா அன்றி திருப்பி அனுப்புவதாக என்ற விவாதங்களை தேசிய ஊடகங்கள் நடத்திக் கொண்டிருந்தன. அதே வேளை கனடிய பாராளுமன்றத்திலும் இந்த விடயம் தொடர்பான விவாதங்கள் இடம்பெற்ற வண்ணம் இருந்தன. ஒரு வாரம் அளவிற்கு இந்தப் பிரச்சனை நீடித்தது.

ஆனால் அப்போது கனடாவின் கொன்சர்வேர்ட்டிவ் கட்சி ஆளும் கட்சியாக இருக்க அதன் பிரதமராகப் பதவி வகித்த மேன்மைதங்கிய பிரைன் மல்ரோணி அவர்கள் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரை உலகத் தமிழர்களுக்கு ஆறுதல் வார்த்தைகளைச் சொல்லுவது போன்று அமைந்தது.

அவர் தனது உரையில் "இந்த 155 அகதிக் கோரிக்கையாளர்களும் கனடாவின் முகத்தை ஒன்றும் மாற்ற மாட்டார்கள். கனடாவில் தற்போது வாழ்ந்து வரும் பெரும்பாலானவர்கள் கனடாவிற்கு அகதிகளாகத் தான் வந்தவர்கள் என்பதை நாம் மறந்து விடக்கூடாது. எனவே தற்போது எமது தேசத்தின் கரையை நாடி வந்திருக்கும் அவர்கள் அனைவரையும் நாம் ஏற்கொண்டு அவர்கள் மீதான விசாரணைகளை நடத்துவோம். அவர்களது கோரிக்கைகள் நியாயமாக இருந்தால் எமது நாட்டின் பிரஜைகளாக நாம் ஏற்றுக்கொள்வோம்" என்றார்.

அவரது உரையில் அடங்கிய விடயங்கள் அனைத்தும் பின்னர் கனடிய அரசாங்கத்தால் நடைமுறைப்படுத்தப்பட்டு 155 அகதிக்கோரிக்கையாளர்களும் தற்போது கனடாவின் குடியுரிமைபெற்றவர்களாக சிறந்த வாழ்க்கையை இங்கு அமைத்துக்கொண்டார்கள்.

இவ்வாறாக. மறைந்த முன்னாள் கனடியப் பிரதமர் பிரைன் மல்ரோணி அவர்களுக்கு கனடியத் தமிழர்கள் மாத்திரமல்ல உலகத் தமிழர்கள் அனைவரும் நன்றி செலுத்திக்கொண்டிருக்கின்றார்கள். அவர் மறைந்தாலும் எமது மக்களின் மனங்களிலிருந்து "அசாதாரண அரசராக" விளங்கிய பிரைன் மல்ரோணி அவர்கள் எளிதில் மறைந்து விட மாட்டார்.

கனடாவின் மிக முக்கியமான பிரதமர்களில் ஒருவரான பிரையன் மமல்ரோனி, 84 வயதில் இறந்தார். கனடாவின் 18வது பிரதமராக, தேசிய மற்றும் உலக விவகாரங்களில் கொந்தளிப்பான காலகட்டத்தில் கனடிய தேசத்தை வழிநடத்திய பிரையன் மல்ரோனி அவர்கள், 29 பிப்ரவரி 2024 வியாழன் அன்று, புளோரிடாவின் பாம் பீச்சில், குடும்பத்தினராடுன் இருந்த வேளையில், அமைதியாக சாவைத் தழுவினார்.

முல்ரோனி மார்ச் 20, 1939 இல் தொழிலாளர்களாக இருந்த ஐரிஷ் கனேடிய பெற்றோருக்கு 1939 இல் வனம் சார்ந்த நகரமான பை-கோமாவ-ில் பிறந்தார். அவரது தந்தை கியூபெக்கின் வடகிழக்கில் உள்ள இந்த கடினமான புறக்காவல் நிலையத்தில் ஒரு காகிதத் தொழிற்சாலையில் மின்சார வினைஞராக பணியாற்றினார். மல்ரோனி அவர்கள் பிரஞ்சு மற்றும் ஆங்கிலம் பேசுபவர்களிடையே தனிமைப்படுத்தப்பட்ட சமூகத்தில் பிளவுபட்ட இரு கலாச்சார உலகக் கண்ணோட்டத்துடன் வளர்ந்தார் - இந்த வளர்ப்பு பின்னர் அரசியல் ரீதியாக பயனுள்ளதாக இருந்தது.

மறைந்த மல்ரோனி அவர்கள் தனது அரசாங்கத்தில் செனட்டரும் அமைச்சருமான லோவெல் முர்ரே உடனான நட்பின் மூலம் பழமைவாத அரசியலில் ஆர்வம் காட்டினார். முர்ரே தனது கவர்ச்சியான வகுப்புத் தோழரை ஆண்டிகோனிஷ், என்.எஸ்.ஸில் உள்ள செயின்ட் பிரான்சிஸ் சேவியர் பல்கலைக்கழகத்தில் உள்ள முற்போக்கு பழமைவாத வளாகக் கழகத்தில் இணைந்து கொள்ளும் படி உற்சாகப்படுத்தினார்.

மல்ரோனி அவர்கள் ஒரு திறமையான பொது பேச்சாளர் மற்றும் திறமையான அரசியல்வாதி. பிரதம மந்திரியாக, அவர் அமெரிக்காவுடன் ஒரு தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை ஏற்படுத்தினார் மற்றும் கனடாவின் உச்ச சட்டத்தில் கியூபெக்கின் கையொப்பத்தைப் பெறுவதற்கு அரசியலமைப்பு சீர்திருத்தங்களுக்கு அழுத்தம் கொடுத்தார் - அது தோல்வியடைந்தது. பலூனிங் பட்ஜெட் பற்றாக்குறைக்கு எதிராக நிதி திரட்ட தேசிய விற்பனை வரியை அறிமுகப்படுத்தினார், சில அரச நிறுவனங்களை தனியார்மயமாக்கினார் மற்றும் எந்த கனேடிய பிரதமரும் நினைத்துப்பார்க்க முடியாத பதவிக்காலத்தில் தென்னாப்பிரிக்காவில் இன நிறவெறிக்கு எதிராக வலுவாக நின்றார்.

அவரது ஐரிஷ் கனேடிய பின்னணியுடன் மல்ரோணி அவர்கள் பின்னர் கியூபெக் நகரத்தில் உள்ள சட்டப் பள்ளிகளுக்குச் சென்றார். அவரது இருமொழித் திறன்கள் மற்றும் பிற திறமைகள் பின்னர் அவரது அரசியல் வர்த்தக முத்திரையாக மாறியது, அவர் ஒரு கியூபெக் தொழிலாளர் வழக்கறிஞராக முக்கியத்துவம் பெற்றார், சமரசம் செய்ய முடியாத சர்ச்சைகளைத் தீர்த்தார். அவர் தனது சொந்த மாகாணமான கியூபெக்கில் ஊழலுக்கு எதிரான போராட்ட வீரராகப் பெயர் பெற்றார். ஜேம்ஸ் பே நீர்மின்சார அணை கட்டுமான தளத்தில் வன்முறை வெடித்த பிறகு, முல்ரோனி சட்டவிரோதமான செயற்பாடுகளை விசாரிக்கும் முக்கியஸ்த்தராக நியமிக்கப்பட்டார்.

1976 இல் தோல்வியுற்ற முற்போக்கு கன்சர்வேடிவ் தலைமை தனது முயற்சியைத் தொடர்ந்தது, 1983 தலைமை மாநாட்டில் அப்போதைய தலைவர் ஜோ கிளார்க்கிற்கு எதிர்ப்பை ஏற்பாடு செய்த பின்னர் முல்ரோனி கட்சியின் ஆட்சியைப் பிடித்தார். முல்ரோனி - - கியூபெக்கிலிருந்து பிரதிநிதிகள் மத்தியில் அவருக்கு இருந்த ஆதரவின் பலத்தின் அடிப்படையில் முன்னாள் பிரதம மந்திரியை தலைமைப் பதவியில் இருந்து நீக்கினார். தாராளவாதிகள் வாக்கெடுப்பில் தடுமாறிய நிலையில், மல்ரோனி 1984 பிரச்சாரத்தில் வெற்றிக்கு அழைத்துச் சென்றார் - இது கனடிய வரலாற்றில் மிகப்பெரிய தேர்தலாக பார்க்கப்பட்டது.

மல்ரோனி அயல்நாடான அமெரிக்காவுடன் சுதந்திர வர்த்தக ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவதற்கான அவரது திட்டத்தை வாக்காளர்கள் ஆதரித்த பின்னர் 1988 இல் மல்ரோனி மீண்டும் வெற்றி பெற்றார் - இது மல்ரோனி சகாப்தத்தின் மிக முக்கியமான கொள்கையாகும். மல்ரோனி மற்றொரு பெரும்பான்மை அரசாங்கத்துடன் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அரசியலமைப்பு குழப்பங்களுக்கு மத்தியில் மற்றும் ஆழ்ந்த செல்வாக்கற்ற சரக்கு மற்றும் சேவை வரி (ஜிஎஸ்டி) அறிமுகப்படுத்தப்பட்ட பிறகு, மல்ரோனியின் புகழ் வியத்தகு அளவில் சரிந்தது. அவர் தனது இரண்டாவது பதவிக்காலத்தின் முடிவில் சாதனை - குறைந்த அங்கீகார மதிப்பீடுகளை வெளியிட்டார். அமெரிக்கா உடனான தடையற்ற வர்த்தக ஒப்பந்தத்தை பேச்சுவார்த்தை நடத்திய பிறகு, தற்போதுள்ள உற்பத்தியாளர்களின் விற்பனை வரி (எம்எஸ்டி) முறையை சீர்திருத்த மல்ரோனி முயன்றார், இது கனடாவின் ஏற்றுமதியாளர்களுக்கு பாதகத்தை ஏற்படுத்தியது. அந்த 13.5 சதவீத வரியானது நுகர்வோருக்குக் கண்ணுக்குத் தெரியாததாக இருந்தது, அதே நேரத்தில் அதை மாற்றியமைக்கும் நுகர்வு அடிப்படையிலான ஜிஎஸ்டி - கனடாவில் வாங்கப்படும் அனைத்துப் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதும் 7 சதவீத வரி - நேரடியாக பணப் பதிவேட்டில் செலுத்தப்பட வேண்டும். ராணியின் ஒப்புதலுடன், லிபரல் கட்சி ஆதிக்கம் செலுத்தும் மேலவையின் மூலம் செல்வாக்கற்ற மசோதாவைப் மீளப"பெற முல்ரோனி செனட் சபையின் சம்மதத்தை வேண்டி நின்று அதில் தோல்வி அடைந்தார். பின்னர் பிரைன் மல்ரோனி 1993 இல் கட்சித் தலைவர் பதவியிலிருந்து விலகினார்.

பிரதமர் பிரையன் மல்ரோனி அவர்கள். தனது இருண்ட அரசியல் வாய்ப்புகள் மற்றும் தொடர்ச்சியான மந்தநிலைக்கு தலைவணங்கி, ஏறக்குறைய ஒன்பது ஆண்டுகள் பதவியில் இருந்து பதவி விலகுவதாக அறிவித்தார். பிரதமர் பதவி விலகுவதாக பகிரங்கமாக அறிவித்தார். பிப். 24, 1993 அன்று சிபிசி தொலைக்காட்சி செய்தியீலு; இந்த பதவி விலகல் ஒளிபரப்பப்பட்டது. அவர் தனது ராஜினாமா உரையில், "எங்கள் தீர்வுகளை ஒருவர் ஏற்றுக்கொண்டாலும் இல்லாவிட்டாலும், எங்களுடைய மிகவும் சர்ச்சைக்குரிய விஷயங்களில் இருந்து விலகி, எங்கள் பொறுப்புகளில் இருந்து தப்பிக்கத் தேர்ந்தெடுத்ததாக யாரும் எங்களைக் குற்றம் சாட்ட மாட்டார்கள். நான் எனது நாட்டிற்கு சிறந்ததைச் செய்துள்ளேன்". 1993 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தல் பிரச்சாரத்தில் மல்ரோனி கூட்டாட்சிக் கட்சியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து, லிபரல் தலைவர் ஜீன் கிரெட்டியன் - வாக்காளர்களின் விரக்தியைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற நம்பிக்கையில் - "Axe the Tax" என்பதை தனது பிரச்சார மந்திரமாக மாற்றினார். இதனால் அவர்கள் தேர்தலில் எளிதில் வெற்றி பெற்றார். மல்ரோனியின் வாரிசான கிம் காம்ப்பெல், வரியை ரத்து செய்வதாக அவர் அளித்த வாக்குறுதியை ஒருபோதும் பின்பற்றவில்லை, ஏனெனில் அது அரசாங்க வருவாயில் பில்லியன் கணக்கான டாலர்களை ஈட்டியது - கனடாவின் கணிசமான தேசிய கடனை செலுத்த பணம் பயன்படுத்தப்பட்டது.

ஒட்டாவாவில் புதன் கிழமையும், வியாழன் மற்றும் வெள்ளிக் கிழமைகளில் மாண்ட்ரீலின் செயின்ட் பேட்ரிக் பசிலிக்காவிலும் மக்கள் அஞ்சலி செலுத்தினார்கள். அவரது மகள் கரோலின் மல்ரோனி, ஒன்ராறியோ மாகாண அமைச்சரவை அமைச்சர், கியூபெக்கின் முன்னாள் பிரதமர் ஜீன் சாரெஸ்ட், முன்னாள் அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஜேம்ஸ் பேக்கர், ஹாக்கி ஜாம்பவான் வெய்ன் கிரெட்ஸ்கி மற்றும் பிரதமர் ஜஸ்டின் ஆகியோரின் அஞ்சலிகளுடன் சனிக்கிழமை (மார்ச் 23) காலை அரசு இறுதிச் சடங்கு நடைபெற்றது.

பிரையன் முல்ரோனி, முன்னாள் முற்போக்கு தலைவர் மற்றும் கனடாவின் பிரதமர் (1984-1993) நம்பமுடியாத கலைக்களஞ்சிய மனதையும் "பெரிய விஷயங்களை" செய்யும் தைரியத்தையும் கொண்ட ஒருவராக நினைவுகூரப்படுகிறார். அவர் இந்த நாட்டிற்காக அர்ப்பணிப்புடன் இருந்தார் - கனடாவை முழு மனதுடன் நேசித்தார் - மேலும் பல ஆண்டுகளாக பல வழிகளில் சேவை செய்தார். அவர் ஒரு அசாதாரண அரசியல்வாதியாக இருந்தார், மேலும் அவர் "கனேடிய அரசியலின் சிங்கங்களில் ஒருவராக" அவர் விட்டுச் செல்லும் மிகப்பெரிய பாரம்பரியத்திற்காக நினைவுகூரப்படுவார்.

அவரது ஆன்மா நித்திய சாந்தி அடையட்டும்!



# ஈழத் தமிழ் மக்களுக்கு அரசியல் ரீதியாக சிறந்த தலைமைத்ததுவப் பண்புகளைக் கொண்ட ஒரு தலைவரோ அன்றி ஒரு தலைமையோ இல்லாதது கவலைக்குரியதே!



யுத்தம் முடிந்து 2009ம் ஆண்டு மே18க்கு பின்னரான சூழலில் இருந்து இன்று வரை ஈழத் தமிழ் மக்கள் அனைவரும் ஆரோக்கியமான சிந்தனைகள் எதுவும் மற்ற மந்தைக் கூட்டங்களாகவே மாறி விட்டார்கள். அதற்கு காரணம் அரசியல் ரீதியாக சிறந்த தலைமைத்ததுவப் பண்புகளைக் கொண்டு வழி நடத்தக் கூடிய ஒரு தலைவரோ அல்லது ஒரு தலைமையோ இல்லாததே இதற்கு முழுக் காரணம்.

எமது தமிழ் அரசியல்வாதிகள் ஒருவரைப் பார்த்து இன்னொருவர். அவரைப் பார்த்து மற்றவர்... என அனைவரும் ஓரே நோக்கமும் சுயநலமும் கொண்டவர்களாக மாறிவிட்டார். அவர்களில் சிலர் அரசாங்கம் மற்றும் இந்தியா, அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து சன்மானமாக பணத்தையும் சொத்துக்களையும் பெறுகின்றவர்களாக மாறிவிட்டார்கள். இதனால் அவர்கள் மக்களைப் பற்றிச் சிந்திப்பதில்லை. தம்மைப் பற்றியும் தமது குடும்பங்களைப் பற்றியே சிந்திப்பதில் கவனம் செலுத்துகின்றார்கள்.

இவ்வாறிருக்கையில், தகுந்த தலைவர்கள் இல்லாத நிலையில். "பெற்றோர் இல்லா பிள்ளைகள் எவ்வாறு அனாதைகளாக கணிக்கப்படுகின்றார்களோ, அதைப்போன்று. இலங்கையில் என்றும் இல்லாதவாறு மதவாதம் புத்த பகவானின் பெயரால் கொடி கட்டிப் பறக்கின்றது. இதற்கு தக்க சான்று அண்மைய காலங்களில் வவுனியா மாவட்டத்தில் அமைந்துள்ள வெடுக்கு நாறி ஆதி லிங்கேஸ்வரர் ஆலயத்தில் நடைபெற்று வரும் மதவாதம் சார்ந்த சிங்கள பௌத்த பேரினவாத அரச இயந்திரத்தின் அடக்கு முறைகளை கூறி விடலாம்.

உண்மையில் வடக்கு - கிழக்கில் வாழும் ஈழத் தமிழ் மக்கள் வெடுக்கு நாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தில் இன்று வரை தொடர்ச்சியாக நடைபெற்று வரும் மதம் சார்ந்த சிங்கள பௌத்த பேரினவாத அரச இயந்திரத்தின் அடக்கு முறைகளை ஒரு பொருட்டாகவே கணக்கில் எடுக்க வில்லை.

இதற்கு உதாரணம் ஈழத் தமிழ் அரசியல் கட்சிகள் அனைத்தும் ஒன்றினைந்து அண்மையில் வெடுக்குநாறி ஆதிலிங்கேஸ்வரர் ஆலயத்தின் மீதான பௌத்த சிங்கள பேரினவாத அரச இயந்திரத்தின் மதவாத அடக்கு முறைக்கு எதிராக நல்லூர்க் கந்தன் ஆலயச் சூழலில் அறவழிப் போராட்டங்களை நடத்தியிருந்தார்கள். அதற்கு மக்களின் பங்களிப்பு என்பது மிக மிக அரிதாகவே இருந்துள்ளது என்பதை கண்கூடாகக் காணக் கூடியதாக இருந்தது.

யுத்தம் முடிந்து 2009ம் ஆண்டு மே 18க்கு பின்னரான சூழலில் இருந்து இன்று வரை ஈழத் தமிழ் மக்கள் அனைவரும் பெரும் சிந்தனைகள் எதுவும் மற்ற மந்தைக் கூட்டங்களாகவே மாறி விட்டார்கள். அதற்கு காரணம் அரசியல் ரீதியாக சிறந்த தலைமைத்ததுவப் பண்புகளைக் கொண்டு வழி நடத்தக் கூடிய ஒரு தலைவரோ அல்லது ஒரு தலைமையோ இல்லாததே இதற்கு முழுக் காரணம்.

ஈழத் தமிழ் தேசிய அரசியல் பரப்பில் அரசியல் கட்சிகளினுடைய தலைமைகள் மக்களை அரசியல் ரீதியிலான ஒரு தெளிவான கொதி நிலையில் வைத்திருக்கத் தவறியமை எதிர்காலத்தில் பல அறவழிப் போராட்டங்களை ஈழத் தமிழ் அரசியல் தலைமைகள் முன்னெடுத்தாலும் மண்ணை கவ்வும் நிலைக்குத் தள்ளப்படும் என ஈழத் தமிழ் உணர்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

ஈழத் தமிழ் கட்சிகளுக்கு இடையிலான பொறுப்பற்ற விவாதங்களும் கருத்து முரண்பாடுகளும் ஈழத் தமிழர்களின் ஜனநாயக உரிமைக்கான தீர்வை காலம் கடந்தும் இன்னும் தாமதமாக்கும் என்பதை சம்பந்தப்பட்ட தரப்புகள் முதலில் கண்டிப்பாக உணர்ந்து கொள்ள வேண்டும்.



எமக்கு இடையிலான குடும்பிப்பிடி சண்டைகளை நிகழ்த்திக் கொண்டிருக்கும்போது மாறி மாறி ஆட்சிக்கு வரும் பௌத்த சிங்கள பேரினவாத அரச இயந்திரம் இதை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொண்டு ஈழத் தமிழர்களை இனவாத மற்றும் மதவாத ரீதியாக ஒடுக்குவதை இன்னும் தீவிரப்படுத்தும் என்பதை எளிதில் எவரும் மறுத்து விட இயலாது.

ஈழத் தமிழ் அரசியல் கட்சிகள் ஒரு கோணத்திலும் ஈழத் தமிழ் மக்கள் இன்னொரு கோணத்திலும் செயற்ப்பட்டால் காலபோக்கில் பூர்வீகமாக வாழ்ந்து வரும் எமது வடக்கு - கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தை நாம் இனவாதம் என்ற பெயரிலும் மதவாதம் என்ற பெயரிலும் பௌத்த சிங்கள பேரினவாத அரச இயந்திரத்திடம் படிப்படியாக இழக்கும் சூழலே ஏற்படும்.

தமிழரசுக் கட்சி தந்தை செல்வாவுக்கு பின் சிறந்த தலைமைத்துவமான ஒரு தலைவரை இன்று வரை கொண்டிருக்க வில்லை. இது தமிழர்களின் அரசியல் ரீதியான எதிர்கால விமோசனத்துக்கு பெரும் தடைக் கல்லாகும். குரல் கொடுப்பவன் தலைவனல்ல. மக்களுக்காக தன்னை அர்பணித்து களத்தில் செயற்படுபவனே சிறந்த தலைவன் என்பது உலகின் தலை சிறந்த அரசியல் தத்துவமாகும்.

பின் கதவால் பௌத்த சிங்கள பேரினவாத அரசிடம் பெட்டிகளை வாங்கி தங்கள் கஜானாக்களை நிரம்பும் தமிழ் அரசியல் தலைவர்கள் இருக்கும் வரை ஈழம் கார் இருளில் மூழ்குவதை படைத்தவனாலும் தடுக்க முடியாது என்பதை ஈழத் தமிழர்கள் தங்கள் கேலிக்கைககளையும் களியாட்டங்களையும் விடுத்து சிறிதளவாவது சிந்திக்க வேண்டும்.

இப்படிப்பட்ட அரசியல் தலைவர்களையும் தலைமைகளையும் தன் தீர்க்க தரிசனத்தின் மூலம் முன்னரே உணர்ந்துதான் தந்தை செல்வா தனது செயற்பாடுகளை குறைத்துக்கொண்டு சாகும் வரை மௌனமாக இருந்தார் என்பதே உண்மை.

**சாம் - ரமேஸ்குமார்**

# 1135 வாகனங்களைக்கூட நிர்வகிக்க முடியாத வடக்கு மாகாண சபை

**(கனடா உதயனின் ஒரு புலனாய்வு கட்டுரை)** **- நடராசா லோகதயாளன்**

வடக்கு மாகண சுகாதாரத் திணைக்கள அலுவலரின் வினைத்திறன் இன்மை மற்றும் அவதானக் குறைவு காரணமாக தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைகளை உரிய கால எல்லைகளை பின்பற்றாமை காரணமாக 10 வாகன விபத்துகளிற்கு பெறப்பட்ட காப்புறுதிப் பணத்திற்கு மேலதிகமாக ஒரு கோடியே 50 லட்சம் ரூபா பணம் அரசிற்கு இழப்பீடு ஏறபட்டுள்ளதாகவும் மத்திய கணக்காய்வு நிறுவனம் அறிக்கையிட்டுள்ளது.

வடக்கு மாகாண சபையின் கீழ் உள்ள நிர்வாகங்களில் தற்போது 1,135 வாகனங்கள் காணப்படுகின்றபோதும் அவற்றின் பயன்பாட்டைக்கூட நிர்வகிக்கத் தெரியாத அதிகாரிகளாகவே எமது வடக்கு அதிகாரிகள் உள்ளனரா என்ற பெரும் கேள்வி எழுகின்றது.

வடக்கு மாகாண சபையின் கீழ் 5 அமைச்சுக்கள், 18 திணைக்களங்கள், 4 பிரதிப் பிரதம செயலாளர் அலுவலகங்கள், 2 ஆணைக் குழுக்கள், 2 அதிகார சபைகள் மற்றும் 3 நிறுவனங்கள் என 34 நிறுவனங்கள் உண்டு. இவற்றின் பாவனைக்கும், மக்கள் சேவைக்காகவுமே இந்த வாகனங்கள் உள்ளன.

இதிலே மாகாண சுகாதாரத் திணைக்களத்தில் மட்டும் 383 வாகனங்களும், மாகாண கல்வித் திணைக்களத்தில் 170 வாகனங்களும், மாகாண விவசாய திணைக்களத்தில் 157 வாகனங்களும், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தில் 105 வாகனங்களும், நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 100 வாகனங்களுமாக 4 திணைக்களங்களில் மட்டும் 915 வாகனங்கள் காணப்படுகின்றன. எஞ்சிய 220 வாகனங்களே 30 திணைக்களங்களின் செயல்பாடுகளிற்காக மாகாணம் முழுவதும் காணப்படுகின்றது.

இவை தொடர்பில் 2023ஆம் ஆண்டு மத்திய கணக்காய்வு நிறுவனம் விசேட ஆய்வு ஒன்றை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பித்தனர். அந்த அறிக்கையினை தகவல் அறியும் சட்டத்தின் கீழ் கோரிப் பெற்று அதன் அடிப்படையில் இந்தக் கட்டுரை வரையப்படுகின்றது.

வடக்கு மாகாண வாகனங்களில் இருந்து 03 வாகனங்கள் வடக்கு மாகாண சபைக்கு வெளியே 2018 ஆம் ஆண்டு வழங்கப் பட்டுள்ளபோதும் அவற்றினை இன்றுவரை மீளப் பெறுவதற்கான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படவில்லை. அதில் இரு வாகனங்கள் ஜனாதிபதி செயகத்திற்கும் ஒரு வாகனம் பொலிஸ் திணைக்களத்திற்கும் வழங்கப்பட்டுள்ளது.

மாகாண சபையில் பயன்படுத்தி ஏல விற்பனைக்காக சமர்ப்பிக்கப்பட்ட 53 வாகனங்களில் 32 வாகனங்கள் 42,891 கிலோ மீற்றரில் இருந்து வெறுமனே 114 கிலோ மீற்றர் ஓடிய வாகனங்களும் காணப்படுகின்றன. இவற்றிலே 13 வாகனங்கள் 10 ஆயரம் கிலோ மீற்றருக்கும் குறைவாகவும், 8 வாகனங்கள் 5 ஆயிரம் கிலோ மீற்றருக்கும் குறைவாகவுமே பயன்படுத்தப் பட்டுள்ளமை கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

பராமரிப்புக்கள் ஒழுங்கமைப்புக்கள் இவ்வாறெனில் விபத்திற்குள்ளாகும் வாகனங்களிற்கான அறிக்கையிடல் காப்புறுதியை பெற்றுக்கொள்வதில் வடக்கு மாகாண நிர்வாகங்கள் அசமந்தமாக காணப்படுவதோடு அதிலும் குறிப்பாக வடக்கு மாகாண சுகாதார அமைச்சு அதில் வேண்டுமென்றே அசமந்தமாக இருப்பதும் தெளிவாக கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சுகாதார திணைக்களத்தின் 13 வாகனங்கள் விபத்திற்குள்ளாகி 28 லட்சத்து 61 ஆயிரம் ரூபா செலவு மதிப்பீடு செய்யப்பட்டும் ஆரம்ப விசாரணைகள் 8 மாதம் முதல் 7 ஆண்டுகள் காலதாமதமாகியும் ஆரம்ப விசாரணை அறிக்கை சமர்ப்பிக்கவில்லை. இதேபோன்று இதே திணைக்களத்தில் மேலும் 15 வாகனங்கள் விபத்திற்குள்ளாக 4 மாதம் முதல் 12 மாதங்கள் வரையில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை என்பதுடன் ஓர் சுகாதார வைத்திய அதிகாரி தனது சொந்த தேவைக்காக அனுமதியின்றி எடுத்துச் சென்ற வாகனம் வேகமாக பயணித்த சமயம் விபத்திற்குள்ளாகி சேதமடைந்தபோது 90 லட்சம் ரூபா பெறுமதியான வாகனத்திற்கு 80 லட்சம் ரூபா செலவு மதிப்பீடு செய்யப்பட்டு குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டபோதும் அந்த தொகை அறவீடு செய்யப்படவில்லை எனவும் வடக்கு மாகண சுகாதாரத் திணைக்கள அலுவலரின் வினைத்திறன் இன்மை மற்றும் அவதானக் குறைவு காரணமாக தீர்மானிக்கப்பட்ட நடவடிக்கைகளை உரிய கால எல்லைகளை பின்பற்றாமை காரணமாக 10 வாகன விபத்துகளிற்கு பெறப்பட்ட காப்புறுதிப் பணத்திற்கு மேலதிகமாக ஒரு கோடியே 50 லட்சம் ரூபா பணம் அரசிற்கு இழப்பீடு ஏறபட்டுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேநேரம் வடக்கு மாகாண சபையின் 9 நிறுவனங்களிற்குச் சொந்தமான 284 வாகனங்களில் அரச இலட்சணையோ அல்லது நிறுவனத்தின் பெயரோ இன்றிய பாவனை காணப்படுவதாகவும் இதில் நீர்ப்பாசன திணைக்களத்திற்கு சொந்தமான 100 வாகனங்களும், கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்களத்தின் 77 வாகனங்களும், மாகாண விவசாய திணைக்களத்தின் 52 வாகனங்களும் உள் அடங்குவதாவ குறிப்பிடப்படுவதோடு மாகாண சபையின் 54 வாகனங்களிற்கு நீண்ட காலமாக வருமானப்பத்திரமும் பெறப்படவில்லை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு மாகாண சபைக்கு உட்பட்ட 20 நிறுவனங்களின் வாகனங்கள் 2013 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு யூன் மாதம் வரையான 10 ஆண்டுகளில் 29 கோடியே 20 லட்சத்து 7 ஆயிரத்து 38 ரூபா செலவில் திருத்தம் செய்யப்பட்டுள்ளதாகவும் அந்த கணக்காய்வு அறிக்கையிலே சுட்டிக்காட்டப்பட்டு உரிய திணைக்களங்கள் அமைச்சிற்கு வழங்கப் பட்டுள்ளதோடு இதில் முரணகையான ஏதும் குறிப்பிட்டிருந்தால் 14 தினங்களிற்குள் அறிக்கையிடுமாறு கோரியபோதும் எந்த திணைக்களமும் அவ்வாறு மாறுபாடு காணப்படுவதான அறிக்கை சமர்ப்பிக்கவில்லை என்பதும குறிப்பிடத்தக்கதோடு இந்த வாகன எண்ணிக்கைகள் கணக்காய்வுகளில் வடக்கு மாகாணத்தில் காணப்படுத் 34 உள்ளூராட்சி சபைகள் உள்ளடங்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# "கனடாவில் தன்னை ஒரு கலை இலக்கியவாதியாக தொடர்ச்சியாக காட்சிப்படுத்திக் கொண்டிருப்பவர் ஆ. ஸ்ரீஸ்கந்தராஜா ஆவார்"

கனடிய செய்திகள் Canadian News

## திரை இசை இலக்கியமும் வாழ்வியலும்' நூல் வெளியீட்டு விழாவில் வானொலி நிலைய அதிபர் நடா ராஜ்குமார் புகழாரம்

1990ம் ஆண்டு முன்னர் கனடாவில் பல்வேறு காரணங்களால் குடியேறிய ஈழத்தமிழர்கள் மொன்றியால் மாநகரில் தான் வந்திறங்கினார்கள். அங்கு அவர்கள் ஒற்றுமையாக தங்கள் புலம்பெயர் வாழ்க்கையை ஆரம்பித்தார்கள். அந்த நாட்களில் தங்களுக்கு ஆர்வமுள்ள துறைகளில் அவர்கள் கால்களைப் பதிக்கத் தவறவில்லை. நான் எனக்கு பிடித்தமான வானொலி மற்றும் நடிப்புத்துரையில் ஈடுபாடு காட்டினேன். நண்பர் ஆ. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களோ தனக்கு பிடித்தமான துறையாக இருந்த எழுத்து மற்றும் கவிதை சினிமா இலக்கியம் ஆகியவற்றில் தனது கவனத்தைச் செலுத்தினார். அந்த பாதையில் கடந்த 35 வருடங்களாக கனடாவில் தன்னை



ஒரு கலை இலக்கியவாதியாக தொடர்ச்சியாக காட்சிப்படுத்திக் கொண்டிருப்பவர் ஆ. ஸ்ரீஸ்கந்தராஜா ஆவார். எனவே அவரை நாங்கள் அனைவரும் கொண்டாடி மகிழ வேண்டும்".

இவ்வாறு ஸ்காபுறோவில் 24ம் திகதி ஞாயிற்றுக்-கிழமை நடைபெற்ற எழுத்தாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் எழுதிய "திரை இசை இலக்கியமும் வாழ்வியலும்" நூல் வெளியீட்டு விழாவில் ரொறன்ரோ ஈஸ்ட்எப்எம் வானொலி நிலைய அதிபர் நடா ராஜ்குமார் புகழாரம் சூட்டினார்.

ஸ்காபுறோ நகரசபை மண்டபத்தில் நடைபெற்ற மேற்படி "திரை இசை இலக்கியமும் வாழ்வியலும்" நூல் வெளியீட்டு விழாவினை நன்கு அறியப்பெற்ற தொகுப்பாளர் சாந்தினி சிவகுமார் அவர்கள் சிறப்பாக தொகுத்து வழங்கினார்.







அன்றைய தினம் பிற்பகல் 1.30 தொடக்கம் நடைபெற்ற இந்த வெளியீட்டு விழா எழுத்தாளர்கள் மற்றும் பத்திரிகை மற்றும் ஊடகதுறை சார்ந்த நண்பர்கள் உறவினர்கள் என பலர் கலந்து கொண்டு சசிறப்புரைகளை ஆற்றினார்கள்.

அங்கு முதலில் ஆறுமுகம் ராஜேந்திரம் விழாநாயகர் பற்றிய அறிமுக உரை நிகழ்த்தினார். அவரும் எழுத்தாளர் ஆ. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்களோடு மொன்றியாலில் கொண்டிருந்து தொடர்பினால் பல சமூக செயற்பாடுகளில் கடந்த பல வருடங்களாக ஈடுபட்டு வருவதாகவும் மகிழ்ச்சியுடன் கூறினார்.

அடுத்து சிறப்புரை வழங்கிய கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் நா. லோகேந்திரலிங்கம் தனது உரையில் கவிஞரும் எழுத்தாளருமான ஆ. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் கலை இலக்கியம் தொடர்பான பல பிரிவுகளில் தன்னை ஈடுபடுத்தி வருபவர் என்றும் மொன்றியால் வாழ் எழுத்தாளர் வீணைமைந்தனுடன் இணைந்து பல விழாக்களை நடத்தியும் தமிழ்த் திரைப்படங்களில் உள்ளேயிருக்கும் இலக்கியத்தையும் அதன் செழுமையையும் வெளியில் கொண்டுவரும் அரிய முயற்சிகளின் இருவரும் ஒன்றாக செயற்பட்டு வருபவர்கள் என்றும் குறிப்பிட்டார்.

இந்த நூலில் அடங்கியுள்ள விடயங்கள் தமிழ்த் திரைப்படப் பாடல்களை எழுதிய பாடலாசிரியர் மற்றும் இசையமைப்பாளர்கள் ஆகியோரின் அபாரத் திறமையினால் எமக்கு கிடைத்த பொக்கிசங்களாக விளங்கும் பாடல்களின் சிறப்புக்களை எடுத்தியம்புகின்றன என்றும் லோகேந்திரலிங்கம் தனது உரையில் தெரிவித்தார்.

தொடர்ந்து விழா நாயகரின் சகோதரரும் இலங்கை நிர்வாக சேவை அதிகாரியாக விளங்கியவரும் சிறந்த சமயப் பற்றாளருமான ஆ. பாஸ்கரதாஸ் மற்றும் எழுத்தாளர் மொன்றியால் மூர்த்தி. ரவீந்திரமூர்த்தி ம்றறும் கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ் உட்பட பலரும் உரையாற்றினார்கள்.

மேலும் தனக்கு பிடித்தமான திரைப்படப் பாடல்களை தேர்ந்தெடுத்து அவற்றை திறமையும் உள்ளூர்ப் பாடக பாடகிகள் மூலம் பாடவைத்தார் ஆ. ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள்.

மேற்படி பாடல்களைப் பாடியவர்கள் திரு. தம்பிப்பிள்ளை. சுரேன் சிவகுமார். ஆதிரை சிவகுமார்க. சிவா சிவகுமார் மற்றும் ஜனார்த்தனன் ஸ்ரீஸ்கந்தராஜா காவியா மற்றும் யாதவி கணீஷ்வரன் ஆகியோர் தங்கள் குரல் வளத்தால் சபையோரை மகிழ்வித்தனர்.

தொடர்ந்து நூல் பிரதிகள் சபையோருக்கும் சிறப்பு விருந்தினர்களுக்கும் வழங்கப்பெற்றன. அதனைத் தொடர்ந்து நூலாசிரியரும் விழா நாயகருமான ஆ. ஸ்ரீஸ்கந்தராஜா பதிலுரையும் விளக்கவுரையும் ஆற்றினார். அவரது உரை இலக்கியத்தின் மேன்மையையும் தமிழ்த் திரைப்பாடல்களில் அழியாத பொக்கிசங்களாக விளங்கும் தமிழ் இலக்கியமும் மனித நேரமும் தொடர்ச்சியாக இருந்து வருகின்றன என்பதை விபரமாக எடுத்துரைத்தார்.











# புலம்பெயர் உறவுகளின் முதலீடுகளை வரவேற்பதாக வடக்கு மாகாண ஆளுநர், இலங்கைக்கான நியூசிலாந்து துணை உயர்ஸ்தானிகரிடம் தெரிவிப்பு

இலங்கை செய்திகள் Sri Lanka News



இலங்கைக்கான நியூசிலாந்து துணை உயர்ஸ்தானிகர் அன்ரேவ் ட்ராவெள்ளர் (Andrew Traveller), வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களை 21.03.2024 அன்று சந்தித்து கலந்துரையாடினார். யாழ்ப்பாணத்திலுள்ள வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

வடக்கு மாகாணத்தில் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தி திட்டங்கள் தொடர்பில் இலங்கைக்கான நியூசிலாந்து துணை உயர்ஸ்தானிகர் கௌரவ ஆளுநரிடம் கேட்டறிந்துக்கொண்டார். மாகாணத்தின் கல்வி, பொருளாதார, வாழ்வியல்நிலை தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் காணி விடுவிப்பு, மீள்குடியேற்றம், சுற்றுலாத்துறை அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பிலும், முதலீட்டு வலயங்களை ஸ்தாபித்தல் தொடர்பிலும் கௌரவ ஆளுநரால் தெளிவுபடுத்தப்பட்டது. அத்துடன் புலம்பெயர் தேசத்து உறவுகளின் முதலீடுகளை வரவேற்பதாகவும் வடக்கு மாகாண கௌரவ ஆளுநர், இலங்கைக்கான நியூசிலாந்து துணை உயர்ஸ்தானிகரிடம் தெரிவித்தார்.

# இரண்டாவது இந்து சர்வதேச மாநாடு யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில்! செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனுக்கு "ஞானவாய்ச்சியன்" விருது







இந்துக் கற்கைகள் பாரம்பரியமும் பண்பாட்டு எனும் தொனிப்பொருளில் இரண்டாவது சர்வதேச இந்து மாநாடு யாழ்ப்பாண பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் மாநாடு தலைவர் ச பத்மநாபன் தலைமையில் 21-03-2024 வியாழக்கிழமை காலை இடம்பெற்றது.

இன் நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிவக்கொழுந்து சிறீசற்குணராஜா சகிதம் விருந்தினர்கள் விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டனர்.

விருந்தினர்களின் மக்கள விளக்கேற்றலைத் தொடர்ந்து நந்திக் கொடி ஏற்றும் வைபவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது.

வரவேற்பு உரையை மாநாட்டின் செயலாளர் பேராசிரியர் வி. பவனேசன் நிகழ்த்தியதுடன் பிரதம விருந்தினர் உரையை யாழ் பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் சிறீசற்குணராஜா நிகழ்த்தினார்.

அதனை தொடர்ந்து இரண்டாவது சர்வதேச இந்து மாநாட்டின் விருது வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது இந்து கற்கைகள் பீடச்சபையின் ஏகோபித்த ஆதரவுடன் கீரிமலை நகுலேஸ்வரர் ஆலயத்தின் பிரதம குருவாக இருந்து தேகாந்த நிலையை அடைந்த அமரர் கு. நகுலேஸ்வர குருக்களுக்கு மெய்ப்பொருள் விருதும், சைவ சமூக பணியாற்றும் செஞ்சொற் செல்வர் ஆறு திருமுருகனுக்கு ஞானவாய்ச்சியன் விருதும், இலங்கையில் இந்து பண்பாட்டுக்கு உழைக்கும் அகில இலங்கை இந்து மாமன்றத்திற்கு சிவநிதி விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

# ஏ9 – வீதி யாழ்ப்பாணம் மீசாலை பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் சொகுசு பேருந்து மோதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.


ஏ9 - வீதி யாழ்ப்பாணம் மீசாலை பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் ஒருவர் அதி சொகுசு பேருந்துடன் மோதியதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

கிளிநொச்சி மாவட்டத்தை சேர்ந்த சின்னராசா சுதன்ராஜ் (வயது 40) என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். விபத்தை ஏற்படுத்திய பேருந்து தப்பிச் சென்ற நிலையில் பொலிசாரிடம் சிக்கியது.

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கி குறித்த பேருந்து பயணித்த போது இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவம் 25-03-2024 இரவு நடந்தது.

இது தொடர்பாக கொடிகாமம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். சடலம் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.



Zonal Education Office, Kilinochchi South

# கிளிநொச்சி தெற்கு கல்வி வலயத்தில் அலுவலகத்தில் இருந்த பொருட்கள் மாயம் – கணக்காளர் முறைப்பாடு

கிளிநொச்சி தெற்கு வலயதிற்கு 2023 ஆம் ஆண்டு Save the Children நிறுவனத்தால் வழங்கப்பட்ட Smart Board, Camera, Party Box Set opgebe பொருட்கள் கணக்கு பதிவேட்டில் பதியப்படாமை தொடர்பில் குறித்த வேலைகத்தின் கணக்காளர் மாகாண கல்வித் திணைக் களத்துக்கு முறைப்பாடு பதிவு செய்துள்ளார்.

குறித்த கடிதத்தில் தெரிவிக்கப் பட்டதாவது குறித்த அன்பளிப்புப் பொருட்களை இருப்பு புத்தகத்தில் பதிவு செய்வதற்காக களஞ்சியத்தில் ஒப்படைக்குமாறு நிதி உதவியாளர் களஞ்சியக் காப்பாளர் மற்றும் சேவைக்கால ஆசிரிய ஆலோசகரிடம் பணித்திருந்தார்.

அதற்கமைய NP/45/02/SK/10/001 இலக்க 04.07.2004 திகதிய கடிதம் மூலம் குமரன் ஆசிரிய ஆலோசகர், தகவல் தொழிநுட்பம் அவர்களை குறித்த பொருட்களை களஞ்சியத்தில் ஒப்படைக்குமாறு கேட்டிருந்தேன்.

தற்போது எமது அலுவலகத்தின் வருடாந்த இருப்பு கணக்கெடுப்பின் கள ஆய்வின் போது குறித்த பொருட்கள் எவையும் அலுவலகத்தில் காணப்படவில்லை.

இது தொடர்பாக சேவைக்கால ஆசிரிய ஆயோசகரான திருக்குமரன் அவர்களிடம் கேட்டபோது அவை தொடர்பாக தான் அறிந்திருக்கவில்லை எனவும் இது தொடர்பாக எந்த ஆதாரங்களும் இல்லை எனவும் தெரிவித்தார்.

அத்துடன் Save the Children நிறுவன இணைப்பாளர் சுரேஸ்குமார் என்பவரிடம் வினவிய போது. வலயக்கல்விப் பணிப்பணிப்பாளரால் நியமிக்கப்பட்ட பிரதிநிதி தன்னிடம் சில பொருட்களை ஒப்படைத்துள்ளார் என்பதை தெரிவித்தார்.

இது தொடர்பான தங்களின் ஆலோசனையும் அறிவுறுத்தலையும் வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன் என தெரிவித்து எழுத்து மூலமாக கடிதத்தை மாகாண கல்வித்தினை களத்திற்கு அனுப்பியுள்ளார்.

குறித்த விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட அரச சார்பற்ற நிறுவன பிரதிநிதியை தொடர்பு கொண்டு கேட்டபோது குறித்த வேலையத்துக்கு தம்மால் பொருட்கள் வழங்கப்பட்டது உண்மை எனவும் அது ஏன் வரவு புத்தகத்தில் பதியப்படவில்லை என்பது தொடர்பில் வலயக் கல்வி திணைக்களம் தான் கூற வேண்டும்.

கடந்த மூன்று கிழமைக்கு முன்னர் குறித்த பொருட்களை மீண்டும் எம்மிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் எமது தலைமைக் காரியாலயத்துடன் கலந்துரையாடி வேறு பாடசாலைகளுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக தெரிவித்தார்.

# தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சி – ஜேவிபி தமிழர் மக்களின் பிரதிநிதி சந்திரசேகரன் குற்றச்சாட்டு



தேர்தலை பிற்போடுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்து வருவதாக தேசிய மக்கள் சக்தியின் யாழ்ப்பாண மாவட்ட அமைப்பாளர் இராமலிங்கம் சந்திரசேகர் குற்றம் சாட்டியுள்ளார்.

26-03-2024 அன்று யாழ்ப்பாணத்தில் உள்ள தேசிய மக்கள் சக்தியின் அலுவலகத்தில் நடத்திய ஊடக சந்திப்பின் போதே இராமலிங்கம் சந்திரசேகர் இவ்வாறு குற்றம் சாட்டியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இன்றைக்கு அனைத்து கருத்து கணிப்புக்களிலும் தேசிய மக்கள் சக்தியே வெற்றிபெறும் என கூறப்படுகின்றது, இதனால் தேசிய மக்கள் சக்தியின் வெற்றியை தடுப்பதற்கு இவர்கள் முயற்சி எடுத்து வருகின்றார்கள்.

கடந்த 76 வருட ஆட்சியாளர்களுக்கு ஒன்றை கூறிக்கொள்ளுகின்றோம், அவர்களுடைய சகாப்தம் முடிவுக்கு வர போகின்றது, எதிர்வரும் ஒக்டோபர் மாதத்தில் புதிய அரசாங்கம் புதிய ஜனாதிபதி தெரிவு இடம்பெறும் என்பதை தெரிவித்துக்கொள்ளுகின்றேன் என தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில் கனடாவில் சில நாட்களுக்கு முன்னர் தமது கட்சியின் தலைவர் அநுரகுமார கலந்து கொண்ட மாபெரும் கூட்டத்தில் ஏராளமான தமிழ் பேசும் மக்களும் கலந்து கொண்டமை, தமிழ் மக்களின் ஆதரவு ஜேவிபி கட்சிக்கும் அதன் தலைவர்களுக்கும் உண்டு என்பதைக் காட்டியுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

அத்தோடு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்த ஈஸ்ரர் குண்டு தாக்குதல் தொடர்பிலும் இராமலிங்கம் சந்திரசேகர் கருத்து தெரிவித்தார்.




# இன்றைய நேரம் தான் நேற்றைய நேரம்

## நேற்றைய விலையில் கொண்டோவை இன்று வாங்குங்கள்

## பிக்கரிங் நகரின் சிறந்த பெறுமதி கொண்ட ஒரு புதிய வரவு! வரலாற்றில் புதிய கொண்டோ விலைகளில்!

விலைகள் அதிகரிக்கும் முன்பாகவே நீங்கள் கொண்டோக்களை வாங்கிக் கொள்வதை நாம் விரும்புகின்றோம். அதை நீங்கள் இப்போதே செய்யலாம், ஏனென்றால் Highmark வரலாற்றில் குறைந்த விலைகளில் புதிய வரவாக நவீன கொண்டோக்களை வழங்குகின்றது!

அத்துடன் எமது விசேடமான சேமிப்புத் திட்டம். எமது Highmark இல் புதிய கொண்டோ ஒன்றை வாங்கினால்

**$50,000** வரையில் கழிவைப் பெறலாம்.

வட்டி வீதம் குறையும் போது கொண்டோக்களின் விலைகள் அதிகரிக்கலாம். எனவே தற்போது வாங்கிக் கொள்வதே சரியானதாகும். எமது விற்பனை முகவர் ஒருவரை இன்றே அழைத்து தாங்கள் தனிப்பட்ட சந்திப்பு ஒன்றுக்கு ஏற்பாடு செய்யுங்கள்.

குறைந்த $500களில் இருந்து பிக்கரிங் நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள எமது கொண்டோக்கள் 3 படுக்கை அறைகளைக் கொண்டவை.




Off-site Sales Gallery Location and Hours:

633 KINGSTON ROAD, PICKERING

Mon. – Thu. 12pm – 6pm
Friday – Closed
Sat. & Sun. 12pm – 5pm

**TheHighmark.ca**

CALL: 905-831-1755 or EMAIL: info@thehighmark.ca

HIGHMARK

FOLLOW US

* Prices, promotions, and specifications are subject to change without notice. All promotions are subject to terms and conditions. Renderings are artists' concepts. See Sales Representative for details. Exclusive Listing Brokerage Milborne Group Brokerage. Brokers Protected. E. & O.E.


TITLE SPONSOR
KOKUVIL HINDU COLLEGE
OLD STUDENTS' ASSOCIATION CANADA
KOKUVIL HINDU COLLEGE O.S.A. CANADA
கற்றதொழுகு
ESTD 1994
மாபெரும் இன்னிசை நடன நிகழ்ச்சியும்,
இராப்போசன விருந்தும்
மகுடம்
MAHUDAM 2024
APRIL
6
2024
5:00 PM
Metropolitan Centre - Banquet Hall in Scarborough.
3840 Finch Ave E, Toronto, ON M1T 3T4
பறை, நடனம்,
நாட்டிய நாடகம்,
கவியரங்கம்,
இசைநிகழ்ச்சி
பறை
கலைக்குழு
SINGERS
Magisha Bahirathan,
Sabaesh Kumar, Sharmila Ganesh,
Ananthan K, Prabha Balakrishnan,
MEGA TUNERS BAND
DANCE PERFORMER'S
ABINAYALAYA NATYALAYAM &
SRI ABIRAMY DANCE ACADEMY
Mega
Tuners
MC
Ramprasan
&
Sai Janani
Ravi Kana - 416 725 7284
Kumaresh - 416 786 5054
Tharani - 647 629 8420
Adults Ticket $75
Children $40
கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் - கனடா

# மீட்பர் கிறிஸ்து சபை
## Redeemer Christ Assembly
## Brampton

## பேரிய வெள்ளி – உயிர்த்தெழுந்த ஞாயிறு
## GOOD FRIDAY & EASTER

மரித்தேன், ஆனாலும், இதோ,சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன், ஆமென்; நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன்.– **வெளிப்படுத்தினவிசேஷம் 1: 18**

### அன்பான வாசகப் பெருமக்களே!

தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை (இயேசுவை) விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். உலகத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கும்படி தேவன் தம்முடைய குமாரனை (இயேசுவை) உலகத்தில் அனுப்பாமல், அவராலே உலகம் இரட்சிக்கப்படுவதற்காகவே அவரை அனுப்பினார். – **யோவான் 3: 16**

பிதாவாகிய தேவனால் அனுப்பப்பட்டவரான இயேசு, இவ்வுலகிற்கு மானிடனாய் மனுவுரெடுத்து வந்து, சகல மனுக்குலத்தின் பாவங்களுக்காக ஓரேபலியாக கல்வாரிச் சிலுவயிலே தமது ஜீவனை ஒப்புக்கொடுத்தார். மரித்த இயேசு மூன்றாம் நாம் உயிர்த்தெழுந்து மனித சமுதாயத்திற்கு, இலவசானதும், இலகுவானதுமான இரட்சிப்பைபெறும் வழியை ஏற்படுத்தினார்.

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து (இயேசு) நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப் பண்ணுகிறார். இப்படி நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட்சிக்கப் படுவது அதிக நிச்சயமாமே. நாம் தேவனுக்குச் சத்துருக்களாயிருக்கையில், அவருடைய குமாரனின் மரணத்தினாலே அவருடனே ஒப்புரவாக்கப் பட்டோமானால், ஒப்புரவாக்கப்பட்டபின் நாம் அவருடைய ஜீவனாலே இரட்சிக்கப்படுவது அதிகநிச்சயமாமே.– **ரோமர் 5: 8–10**

### அன்பானவர்களே!!

இயேசுவின் பிறப்பு, உலக சரித்திரத்தையே இரண்டாகப் பிரித்து**“கிறிஸ்துவிற்கு முன் - கிறிஸ்துவிற்குப் பின்”**என்று முழு உலகமே வருடங்களை கணக்கிடுவதை எவரும் மறுக்கவோ, மறைக்கவோ, மறுதலிக்கவோ, புறக்கணிக்கவோ, எந்தவித எதிர்ப்பும் இல்லாமல் உபயோகத்தில் இருப்பது மிகவும் குறிப்பிடத்தக்கது. இது தேவனால் உண்டானதென்பதும், இயேசு தாமே இவ்வுலகிற்கு மனுவுருவெடுத்து வந்த தெய்வம் என்பதையும் உறுதிப்படுத்துகிறது.

### மேலும் அன்பானவர்களே!!

எங்கள் ஒவ்வொருவருடைய பாவங்களுக்காக பரலோகதிதிலருந்து இறங்கி மனுஷனாக அவதரித்து தன் இரத்தம் முழுவதையும் விரயமாகக் கொடுத்து, பலியாகி மரித்து, தெய்வீக லட்சணங்களின்படி மூன்றாம்நாள் உயிரோடு எழுந்த அந்த ஒரே பரிசுத்த தெய்வமாகிய இயேசு கிறிஸ்துவை உங்கள் தெய்வமாக ஏற்றுக்கொண்டு பாவம் நீங்கி, சமாதானத்தோடும், சந்தோஷத்தோடும் வாழ உங்கள் ஒவ்வொருவருக் காகவும் இறை ஆசி வேண்டிநிற்கிறோம். இயேசு மட்டுமே எமது பாவங்களை மன்னிக்க அதிகாரம் உள்ளவர். இயேசு நல்லவர். இயேசு ஒவ்வொருவரையும் நேசிக்கிறார். நாம் உங்களுக்காக ஊக்கமாக ஜெபிக்கிறோம். கர்த்தர் (கடவுள்) உருக்கமும், இரக்கமும், நீடிய சாந்தமும், மிகுந்த கிருபையுமுள்ளவர். அவர் எப்பொழுதும் கடிந்து கொள்ளார், என்றைக்கும் கோபங் கொண்டிரார். அவர் நம்முடைய பாவங்களுக்கு த்தக்கதாக நமக்குச் செய்யாமலும், நம்முடைய அக்கிரமங்களுக்குத் தக்கதாக நமக்குச் சரிக்கட்டாமலும் இருக்கிறார். பூமிக்கு வானம் எவ்வளவு உயரமாயிருக்கிறதோ, அவருக்குப் பயப்படுகிறவர்கள்மேல் அவருடைய கிருபையும் அவ்வளவு பெரிதாயிருக்கிறது. மேற்குக்கும் கிழக்குக்கும் எவ்வளவு தூரமோ, அவ்வளவு தூரமாய் அவர் நம்முடைய பாவங்களை நம்மை விட்டு விலக்கினார். தகப்பன் தன் பிள்ளைகளுக்கு இரங்குகிறது போல, கர்த்தர் தமக்குப் பயந்தவர்களுக்கு இரங்குகிறார். நம்முடைய உருவம் இன்னதென்று அவர் அறிவார், நாம் மண்ணென்று நினைவு கூருகிறார். மனுஷனுடைய நாட்கள் புல்லுக்கு ஒப்பாயிருக்கிறது, வெளியின் புஷ்பத்தைப்போல் பூக்கிறான். காற்று அதின் மேல் வீசினவுடனே அது இல்லாமற் போயிற்று, அது இருந்த இடமும் இனி அதை அறியாது. கர்த்தருடைய கிருபையோ அவருக்குப் பயந்தவர்கள் மேலும், அவருடைய நீதி அவர்கள் பிள்ளைகளுடைய பிள்ளைகள் மேலும் அநாதியாய் என்றென்றைக்கும் உள்ளது. அவருடைய உடன்படிக்கையைக் கைக்கொண்டு, அவருடைய கட்டளைகளின்படி செய்ய நினைக்கிறவர்கள் மேலேயே உள்ளது. கர்த்தர் வானங்களில் தமது சிங்காசனத்தை ஸ்தாபித்திருக்கிறார், அவருடைய ராஜரிகம் சர்வத்தையும் ஆளுகிறது.– **சங்கீதம் 103: 8–19**

“கடைசியாக, சகோதரரே, உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவைகளெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ, புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக் கொண்டிருங்கள்.”– **பிலிப்பியா 4: 8**

## இயேசுவின் உயிர்தெழுந்த நன்நாள் வாழ்த்துக்கள் உங்கள் அனைவருக்கும் உரித்தாகுக.

**பெரிய வெள்ளி ஆராதனை காலை 10.00 நடை பெறும் - ஞாயிறு ஆராதனை காலை 9.30**

**பாஸ்டர் அல்பிரட் செருபிம்**
மீட்பர் கிறிஸ்து சபை
Brampton
647 – 271 7645


Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

# கனடாவில் வெற்றிகரமாக நடைபெற்ற "வன்னிவிழா 2024"

கனடிய செய்திகள் Canadian News




- குமுளன்

கடந்த 23.03.2024 அன்று 3840 Finch Ave East - Metropolitan Centre இல் அமைந்துள்ள பிறின்சஸ் கலையரங்கில் மிகக் கோலாகலமாக இடம்பெற்றது "வன்னிவிழா - 2024". வன்னிச் சங்கத்தின் தலைவர் சிவா இரட்ணசிங்கம் அவர்களின் தலைமையில் மேற்படி விழா இடம்பெற்றது. பி.ப. 6.00 மணிக்கு பண்டாரவன்னியனின் உருவப்படம் திரைநீக்கம் செய்யப்பட்டதைத் தொடர்ந்து மங்கல விளக்கு முன்னைநாள் தலைவரகள், காப்பாளர்கள் மற்றும் பிரமுகர்களினால் மங்கல விளக்கேற்றி வைக்கப்பட்டது.

கொடிக்கீத்தை உறுப்பினர் கு. உதயகுமார் இசைதத்ததைத் தொடர்ந்து கனடா நாட்டுப்பண் செல்வி யாமினி தமிழ்ச்செல்வனால் இசைக்கப்பட்டது.

கலைக்கோவில் நாட்டியப்பள்ளி ஆசிரியை ஸ்ரீமதி வனிதா குகேந்திரனின் மாணவியரின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. எடுத்த எடுப்பிலேயே நிழ்ச்சி களைகட்டுத் தொடங்கியமைக்கான தொடக்கப்புள்ளியாகக் காணப்பட்டது.

அதனைத் தொடர்ந்து கனடா வன்னிச் சங்கத்தின் செயற்பாடுகள் குறித்த சுருக்கமான அறிமுகத்தை செல்வி ஜஸ்மிதா சிவரூபன் செய்ததைத் தொடர்ந்து நடன ஆசிரியை ஸ்ரீமதி ரேணுகாதேவி விக்கினேஸ்வரனி மாணவிகளின் "ஓம் சக்தி நடனம்" மேடையேற்றப்பட்டது. இந்த நடனத்தை கௌசிகா வரதராஜா மற்றும் குபேரகா குமரேஸ்வரன் ஆகிய இருவரும் வடிவமைத்து மேடையேற்றியமை குறிப்பிடத்தக்கது. மக நேர்த்தியான பரதநடனம் சபையோரின் கரஒலியால் பாராட்டப்பட்டது.

நடன ஆசிரியை ஸ்ரீமதி ரேணுகாதேவி விக்கினேஸ்வரனுக்கான கௌரவத்தினை முனைவர் பார்வதி கந்தசாமி அவர்கள் வழங்கிவைக்க நடன அமைப்பாளராகிய செல்வி குபேரகா குமரேஸ்வரன் பெற்றுக்கொண்டார்.

தொடர்ந்து சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட செந்தில் குமரன் அவர்கள் சிறப்புரையாற்றினார். வன்னிச் சங்கத்தோடு இணைந்து தாயகத்தில் மருத்துவ மற்றும் மருத்துவ உதவி பெற்ற குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகளையும் செய்து ஏழைகளின் வாழ்வில் ஒளியேற்றுவது எனது பணி. நான் நூற்றுக்கு மேற்பட்டவர்களின் இதய அறுவைப் பணிக்காக நிதியுதவியை வன்னிச் சங்கம் போன்ற வெளிநாட்டு அமைப்புகளினதும் தனியாரிடமிருந்தும் பெற்று செய்துள்ளேன். தொடர்ந்தும் இச் சேவையைச் செய்து வருவதற்கு உதவும் உங்களைப் போன்ற நல்லமனது படைத்தவர்களின் ஆதரவினால் தான் முடிகின்றது என்பதைக் குறிப்பிட்டதோடு தற்போது மல்லாவி, மாஞ்சோலை வைத்தியசாலைகளுக்கு நீரிழிவு நோயாளருக்கான இரத்தச்சுத்திகரிப்பு (Dialysis) இயந்திரங்களை வாங்கி வழங்கியிருக்கின்றார். தண்ணீரூற்று மாஞ்சோலை வைத்தியசாலையில் இதயச் சந்திரசிகிச்சைக்கான Gordiology காடியோலொச்சி யூனிற் ஒன்றினைத் தொடங்குவதற்கான நிதியினைப் பொதுமக்களிடம் திரட்டி அதனையும் அங்கு திறந்து வைத்துள்ளார். தற்போது யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைக்கு (Scarnner) ஒன்றினை வாங்கி வழங்குவதற்கான நடவடிக்கைகளைச் செய்துகொண்டிருப்பதையும் குறிப்பிட்ட அவர் தொடர்ந்து உரையாற்றும்போது வன்னிச் சங்கத்தினது நிதியுதவியோடு வன்னியில் உள்ள மாணவர்களின் கண் தொடர்பான பார்வைக் குறைவு, முதுகெலும்பு தொடர்பான நோயுடைய பிள்ளைகளை இனங்கண்டு அவர்களுக்கான உதவியை மேற்கொள்ள எனக்குக் கரம்கொடுத்து உதவியவர்கள் இன்றும் பேராதரவு நல்கிவருபவர்கள் வன்னிச் சங்கத்தினர் என்றும் பாராட்டிய அவர் தொடர்ந்து வன்னிப் பிள்ளைகளின் கல்வியில் முழு அக்கறை கொண்டு செயலாற்றி வருவதை நான் நேரடியாகவே கண்டு வியப்பற்றோன்.

அவர்களது இந்தக் கல்விப்பணியானது எங்கள் இளஞ் சமுதாயத்தின் இருப்பினையும், வளர்ச்சியினையும் தக்கவைக்க உதவுகின்றது





என்பதை எடுத்துக்கூறுவதில் மகிழ்சியடைகின்றேன் என்று பாராட்டினார்.

இதனையொட்டி தாயகத்தில் கனடா வன்னிச் சங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற செயற்திட்டங்கள் பற்றிய விவரணக் காணொளி திரையிடப்பட்டது. அக்காட்சிகளைக் கண்ணுற்ற பார்வையாளர்கள் வியந்து நோக்கினர் என்பதை அவதானிக்கமுடிந்தது.

அதனைத் தொடர்ந்து "வீரத் தமிழிச்சி குருவிச்சி நாச்சியார்" என்னும் நாட்டிய நாடகம் மேடையேறியது. இந்த நாட்டிய நாடகத்தை வடிவமைத்து நெறியாளுகை செய்தவர்கள் கலைக்கோயில் நாட்டியப் பள்ளியின் இயக்குநர்களான ஸ்ரீமதி வனிதா குகேந்திரன் மற்றும் அவரது துணைவர் மிருதங்க வித்தகரும் பொறியியலாளருமான குகேந்திரன் அவர்களுமாவார். இந்த நாட்டிய நாடகத்தில் கிட்டத்தட்ட 65 மாணவ மாணவியர்கள் பற்கேற்றனர் என்பது குறப்பிடத்தக்கது. திரைப்படம் ஒன்றைப் பார்ப்பதுபோன்ற ஒரு விறுவிறுப்பான கதையம்சத்தைக் கொண்ட நாட்டிய நாடகமாக அமைக்கப்பட்டிருந்தமையால் சபை மிக அமைதியாக வைத்த கண்வாங்காமல் பார்த்துக் கொண்டிருந்தமையைக் காணமுடிந்தது. 45 நிமிட நேரங் கொண்ட முழுநீள நாட்டிய நாடகத்தினை அரங்கேற்றிய ஆசிரியைக்கான கௌரவ விருது தவமணி கருணைநாதன் வழங்கிக் கௌரவித்தார்.

கனடாதமிழ் சங்ககத்தின் நிறுவனரும் தலைவரும் படிமுறைத் தமிழ், வேரும் விழுதும் அகிய நூல்களின் ஆசிரியரும் தமிழை மாணர்கள் கற்கவேண்டும் எனப் தமிழர் வாழும் நாடுகளுக்கெல்லாம் சென்று ஊக்குவித்து வருபவருமாகிய சு. இராஜரட்ணம் அவர்களால் பிரதம விருந்தினர் உரை நிகழ்த்தப்பட்டது. அவர் உரையாற்றும்போது பிள்ளைகளுக்குத் தமிழ்க் கல்வியை ஊட்டவேண்டிய முக்கியத்துவத்தையும் அதில் பெற்றோரின் பங்கும் ஆசிரியர்களின் பங்கும் பற்றிய விளக்கத்தைத் தந்து பிள்ளைகளின் கல்வியில் அக்கறைகொண்டிருப்பதன் அவசியத்தை குறிப்பிட்டார். தமிழைத் தக்கவைக்க தமிழ்ப்பிள்ளைகள் தமிழை முறையாகக் கற்றுக் கொடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியதோடு அதற்கான பணிகளை நான் மேற்கொணடு வருகின்றேன் என்றார்.

பிரதம விருந்தினர் உரையைத் தொடர்ந்த தென்னிந்திய, இலங்கை மற்றும் கனடிய இசைக்கலைஞர்களின் இசை நிகழ்ச்சி இடம் பெற்றது. இசை நிகழ்ச்சியின் இடையிலே கௌரவிப்பு நிகழ்வுகளும் இடம்பெற்றன.

வன்னிச் சங்கத்தின் தலைவர் சிவகுமாரன் இரட்ணசிங்கம் அவர்கள் உரையாற்றும் போது வன்னியில் இடம்பெற்ற பல்வேறு அழிவுகள் மத்தியிலும் எமது எதிர்காலச் சந்ததியைக் கட்டி எழுப்பும் நிலையில் கல்விக்கான உதவிகளை நாம் கிராமங் கிராமமாகச் செய்துவருகின்றோம்என்ற அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் இறைய அன்றைய விழா மண்டபம் நிறைந்த மக்கள் கொண்ட விழாவாகவும் நிகழ்ச்சிகள் அனைத்தும் சிறப்புவாய்ந்த நிகழ்ச்சிகளாக அமைவதற்கும் போருதவி புரிந்த அனைத்து நல் உள்ளங்களுக்கும் நன்றி தெரிவித்ததோடு மட்டுமல்லாது கனடா வன்னிச் சங்கம் தொடர்ச்சியாகச் செய்து வருகின்ற செயற்திட்டங்கள் பற்றியும் சபையோருக்கு எடுத்துக் கூறினார். சிறப்பாக வன்னிச் சங்கம் நீண்ட காலமாக செய்து வருகின்ற கல்விப் புலமைப்பரிசில் திட்டம் பற்றியும் எடுத்து விளக்கிக் கூறி ஆதரவைத் தொடர்ந்து தரும்வண்ணம் சபையோரிடம் கோரிக்கையை வைத்தார்.



இசை நிகழ்ச்சியில் வவுனியாவில் இருந்து வருகை தந்திருந்த இசையமைப்பாளரும் பாடகருமான திருவாளர்கள் கந்தப்பு ஜெயந்தன், மற்றும் இந்திய சுப்பர்சிங்கர் பாடகரான கரிகரசுதன், செந்தில்குமரன், கார்த்திக், கிளாட்சன் மற்றும் செல்விகள் அபிராமி, கர்சிதா ஆகியோர் திரை இசைப் பாடகளைப் பாடிச் சபையோரை மகிழ்ச்சிக் கடலில் ஆழ்த்தினர். "குருவிச்சி நாச்சி" நாட்டிய நாடகத்திற்காக மூன்று பாடல்களை இசையமைத்துத் தந்தமையையும் கனடாவிற்கு வருகை தந்து இசைக் குழுவில் பாடியமையையும் கௌரவித்தும் பாடகர் கந்தப்பு ஜெயந்தன் அவர்களைக் கௌரவித்து விருதினை அம்பிகா நகைமாடத்தின் அதிபரான திருமதி ஜெயசீலி இன்பநாயம் அவர்கள் வழங்கிக் கௌரவித்தார்.

பின்னணி இசையை நல்கிய குழுவின் தலைவர் சிபோதன் அர்களுக்குப் பாராட்டு விருதினை வழங்கிக் கௌரவித்தார் ஓய்வு பெற்ற கொத்தணி அதிபரும் வன்னிச்சங்கத்தின் காப்பாளருமான த. சிவபாலு அவர்கள்.

கனடா வன்னிச் சங்கத்தின் செயலாளர் திரு. பொ. சிவசுதன் அவர்களினால் விழாவினை ஒழுங்கமைத்து நடாத்துவதற்கு உறுதுணையாக இருந்த வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகையாளர்கள், சமூக வலைத்தள செயற்பாட்டாளர்கள், வர்த்தகப் பெருமக்கள், நன்கொடையாளர்கள் மற்றும் வருகை தந்து சிறப்பித்த பார்வையாளர்கள், பத்திரிகையாளர்கள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவித்துக்கொண்டார்.

இந்த நிகழ்வை திருவாளர் ஜஸ்ரின் போல் மற்றும் செல்வி ஜஸ்மிதா சிவரூபன் ஆகிய இருவரும் அழகுதமிழில் தொகுத்துவழங்கிப் பார்வையாளர்கள் அனைவரினதும் பாராட்டுக்களைப் பெற்றுக் கொண்டனர். விழா 11.00 மணிக்கு நிறைவெய்தியது.







## கடந்தவையும் கடப்பவையும் – [92]

மிகக்கவனமாய் வாகனம் போனாலும்
கலக்கமின்றி போவதற்கு முடியவில்லை

இடைவழியில் போனபோது பெரும் இரைச்சல் - அன்று
இடைவிடாது குண்டுபோடும் 'சுப்பசொனிக்'

தாழப்பறந்துவர, வண்டிதான் குறியென நினைத்தவர்
சோலையோரமாக எல்லோரையும் இறக்கிவிட

ஓடிப்போன வேகத்தில் காணுகிறோம் காட்சியொன்று - குண்டு
வீழப்போகும் இடம் வேறெங்கும் இல்லையென

உறுதியாக, உடல் பதறக் கதறிக்கொண்டே
மறுபடியும் வெளியேவந்து எங்கெங்கோ ஓடிப்போனோம்

நல்லகாலம் குண்டொன்றும் கிட்டடியில் விழவில்லை - இனி
நிற்கவேண்டாம் இவ்விடத்தில் என்றவர்கள்

மறுபடியும் ஏற்றும்போது அப்பத்தான் சொல்லுகிறோம்
'பதறியடிச்சு உள்ளே நாம்போன இடம்

எதிரியவன் தேடித்தேடிக் குண்டுகளைப் போடுமிடம் - என்றோ
பெரிதாக புலிகள் வாழ்ந்த இடம் - அங்கு

'போர்க்' எனும் பெரும்பொறுப்பில் இருந்தவரின்
வீரவணக்க உருவப்படம் கதவளவில் இருக்கிறது

பாதுகாப்பு என்று எண்ணி பகைவன்தேடும்
பெரும் குகைக்குள் புகுந்துவிட்டோம் - அங்கு

ஆருமே இருக்கவில்லை ஆனாலும் - பெரும்
ஆபத்து இருக்கும் என உணர்ந்துகொண்டு

வெளியிலே ஓடிவந்தோம்' என்றபோது தெரிந்தது - அவர்களுக்கும்
தெரியாத இடமாக அவ்விடம் இருந்ததென்று

அத்தனை பதட்டத்திலும் தாத்தாவின் அக்காவுக்கு
எத்தனை கொழுப்பு 'பழக்கதோசமாக்கும் இவர்களுக்கு

அதனால அங்க வண்டியை விட்டினம்' என்கிறா- பிறருக்கு
கேளாத மெல்லிய குரலிலே வழமைபோல

வண்டியில் ஏறியதில் இருந்தே இப்படித்தான்
வேண்டா வெறுப்பாக ஏறியவர் தானென

கதைக்கும் போதெல்லாம் அப்பப்போ சொல்லுகிறார்
எதற்கு இவவை ஏற்றினோம் என்பதாக தாத்தாவின் பாட்டி

மறுபுறத்தில் புறுபுறுக்க ஆபத்தான சூழலிலும் - கொஞ்சம்
கலகலப்பு அவர்களால் மற்றவர்க்கு

தாத்தாவின்அக்கா (பொரியபாட்டி )இன்னமும் விடவில்லை - அன்று
ஊர்ச்சனம் எல்லாம் ஆபத்தென்று புறக்கணிக்க

ஆற்றையும் பேச்சைக் கேக்காது தொடக்ககாலம்தொட்டு
வீட்டையும் கொடுத்து அப்பப்போ வேண்டிய உதவிகள்

அத்தனையும் கொடுத்தும் இரண்டு பவுனுக்காய் தாத்தாவை
எத்தனையோ நாளாய் பிடித்து வைத்திருந்து

கேட்ட பவுணைக் கொடுத்தபின் விட்டதில் - பெரிய
பாட்டிக்கு பெரும் விரக்தி - அன்று தொட்டே

'வேண்டாதவன் பெண்டாட்டி கைபட்டாலோ
கால்பட்டாலோ குற்றம்' என்பதுபோல் - அவர்களை

கண்ணிலை படவே விரும்பாமல் இருந்தார்
இன்று வேறு வழியில்லை என்பதனால் ஏறிவிட்டார் - ஆனாலும்

புறுபுறுப்பு அவரின் பெருவெறுப்பை அப்பப்போ வெளிப்படுத்த - அதுவரையில்
பொறுமையாக இருந்த தாத்தா பேசுகிறார்

'எல்லோருக்கும் சமநீதி உதவியவர் உதவாதவர் கதையில்லை
எவ்வளவு நாள் சொன்னாலும் விளங்காது'

'நன்றி மறக்காத செயலாக இதையும்தான் சொல்லலாம்'
என்று சொன்னார் வண்டிக்குள் இருந்தவர் - இப்படி

எத்தனையோ பலகதைகள் ஒன்றன்பின் ஒன்றாய்
அத்தனையும் கேட்வராய் அமைதியாய் இருக்கவே

தீர்த்தக்கரையில் கூடிநிற்கும் சனத்திரள்போல்
பார்க்குமிடம் எல்லாம் சனக்கூட்டம் பெருவாரி

இக்கரையில் நிற்கும் சனங்களெல்லாம் படகில்
அக்கரையைச் சென்றடைய எத்தனைநாள் ஆகுமோ?

போனபடி ஏற்றுவது பொதுவிதி ஆகுமெனில் - நாங்கள்
போவதற்கு ஏற்றநாள் இப்போதைக்கு வராது

சனத்திரளைப் பார்த்தபின் மனத்தோரம் ஒருகணக்கு
அதற்கிடையில் 'மினக்கடாமல் இறங்குங்கோ' என்றகுரல்

வழிப்படுத்த இறங்குகின்றோம் வேகமாக ........

(தொடரும்)

-- உமா மோகன் -- மொன்றியால் - கனடா --

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# இராஜாங்க அமைச்சர் "பிள்ளையான்" சிவநேசதுரை சந்திரகாந்தன் கிளிநொச்சிக்கு விஜயம் செய்தார்



கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் கிளிநொச்சி பாரதிபுர செபஸ்ரியார் வீதியின் பாலம் புனரமைத்தலுக்கான அடிக்கல் நாட்டு விழா 28-03-2024 வியாழக்கிழமையன்று இடம்பெற்றிருந்தது.

குறித்த நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன், யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திலீபன், ஒப்பந்ததாரர்கள், பிரதேச செயலாளர்கள், கிராம மக்கள் மற்றும் வீதி அதிகார சபை உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் அவர்களினால் பாலம் புனரமைப்புக்கான திரைநீக்கம் செய்யப்பட்டு பின் பால புனரைப்புக்கான அடிக்கல்லும் நாட்டி வைத்தார். குறித்த பாலமானது 15,329,888.18 நிதி பங்களிப்பில் 90 நாட்கள் ஒப்பந்த அடிப்படையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட கல்மடு நகர் பகுதியில் அமைந்துள்ள மூலிகைப் பண்ணையின் பிரதான வீதியினை புனரமைப்பதாகவும் அதற்குரிய நிதியினை பெற்றுத்தர நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவித்து அத்துடன் மேலும் தெரிவிக்கையில் பல சிறிய பாலங்கள் உடனடியாக புனரிப்பு செய்வதற்கான நடவடிக்கையினை உடன் மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்ததுடன் இப்பகுதிகளில் உள்ள பலகிராமிய வீதிகளை புணரமைப்பு செய்வதற்குசம்பந்தப்பட்ட அமச்சுடன் கலந்துரையாடயிருப்பதாகவும் தெரிவித்தார்.



# வடக்கிலுள்ள வளங்களை அடையாளப்படுத்தி புலம்பெயர் உறவுகள் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் – அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகரிடம் வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு



இலங்கைக்கான அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகர் பவுல் ஸ்டீபன் (Paul Stephens) வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ் அவர்களை 27.03.2024 அன்று சந்தித்து கலந்துரையாடினார். கௌரவ ஆளுநரின் யாழ்ப்பாணத்திலுள்ள உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த சந்திப்பு நடைபெற்றது.

அவுஸ்திரேலிய உயர்ஸ்தானிகராலயம் ஊடாக வடக்கில் முன்னெடுக்கப்பட்ட மற்றும் தற்போது முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்பாடுகள் தொடர்பில் இதன்போது இலங்கைக்கான உயர்ஸ்தானிகர், கௌரவ ஆளுநருக்கு தெளிவுப்படுத்தினார். அத்துடன் வடக்கு மாகாணத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டார்.

வடக்கு மாகாணத்தில் காணப்படும் வளங்களை அடையாளப்படுத்தி புலம்பெயர் உறவுகள் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என ஆளுநர் தெரிவித்தார். இந்த விடயம் தொடர்பில் அவுஸ்திரேலிய வாழ் இலங்கை புலம்பெயர் உறவுகளுக்கு தெளிவுபடுத்துமாறும் உயர்ஸ்தானிகரிடம் கௌரவ ஆளுநர் கேட்டுக்கொண்டார். வடக்கு மாகாணத்தில் தொழிற்துறையை மேம்படுத்துவதனூடாக வேலையின்மை பிரச்சினை தீர்க்கப்படுவதுடன், பொருளாதார நிலையிலும் முன்னேற்றத்தை காண முடியும் என ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

# "எமது கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொலியேவ்றா கனடாவின் அனைத்து மாகாணங்களையும் இணைக்கும் வல்லமை கொண்டவராக விளங்குகின்றார்"




## மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியின் கொன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளராக வருவதற்காக மக்கள் ஆதரவை நாடும் திரு தீபக் தெல்ரெஜா கூறுகின்றார்

"எமது கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொலியேவ்றா கனடாவின் அனைத்து மாகாணங்களையும் இணைக்கும் வல்லமை கொண்டவராக விளங்குகின்றார்" - இவ்வாறு மார்க்கம் தோர்ண்ஹில் தொகுதியின் கொன்சர்வேட்டிவ் கட்சி வேட்பாளராக வருவதற்காக மக்கள் ஆதரவை நாடும் திரு தீபக் தெல்ரெஜா கூறுகின்றார். தற்போது தனக்கான ஆதரவை மக்களிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கான திட்டத்தின்படி பணியாற்றிக்கொண்டிருக்கும் அவரிடம் நாம் முன்வைத்த கேள்விகளும் பதிகளும் கீழே காணப்படுகின்றன.

கேள்வி:

மார்க்கம் தோர்ன்ஹில் தொகுதி வேட்பாளராக கொன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் போட்டியிடும் வகையில் முயன்று கொண்டிருக்கும் தங்களுக்கு எப்போது, எவ்வளவு அரசியல் ஆர்வம் ஏற்பட்டது?

பதில்

மார்க்கம் தோண்ஹில் தொகுதி ஒரு தனித்துவமான தொகுதி. இந்தத் தொகுதியில் வாழ்பவர்களுடைய தேவைகள் மிக அவசரமாக பூர்த்தி செய்யப்பட வேண்டியவை. அவைகளை நான் முதன்மையாகக் கவனிப்பேன்.

மார்க்கம் தோண்ஹில் தொகுதி மக்களுக்கு, சேவை புரிய. ஒரு பரந்த பார்வையுடன் எல்லா சமூகங்களுக்கும் நீதியான முறையில் செயல்படுவேன். நான் இத்தொகுதியில் உள்ள எல்லா சமூகங்களுடனும் நெருக்கமாக இணைந்து வேலை செய்கின்றேன். இதன் மூலம் மேற்படி சமூகங்களின் ஆதரவையும் பெற்றிருக்கின்றேன்.

கேள்வி:

கொன்சர்வேர்ட்டிவ் கட்சி மூலம்தான் கனடியர்களது அனைத்து பிரச்சனைகளுக்கும் தீர்வு காணலாம் என்று நினைக்கின்றீர்களா? அப்படியானால் எவ்வாறு?

பதில்:

1, தேவையற்ற வரிகளை அகற்றுவது
2, புதிய வீடுகளைக் கட்டுவது,
3, குற்றச்செயல்களைத் தடுப்பது,
4, வரவு செலவுத் திட்டத்தை சமன்படுத்துவது.

நான்கு தூண்கள் போன்ற முக்கியமான இந்த முன்னெடுப்புகள் தான் கனடிய கொண்சர்வேட்டிவ் கட்சியின் முதன்மையான செயல்பாடாக இருக்கப் போகிறது. மற்றும்,

- எமது கடன்களைக் கட்டுவதற்கு கூடுதலான வரிகள் வசூலிக்க வேண்டும் என்பது தேவையற்ற ஒன்று
- வியாபாரங்களுக்கு வரியை குறைப்பதன் மூலம் வேலை வாய்ப்புகள் கூட்டப்படும். அத்துடன் மேலதிக வருமானமும் ஈட்டப்படும்.
- குற்றம் புரிவோர் சிறையில் வைக்கப்பட வேண்டும். அவர்கள் இலகுவில் பிணையில் விடுபடக்கூடாது. எமது அணுகுமுறை மூலம் பணவீக்கத்தை குறைப்போம். கூடுதலான வீடுகள் மாநகரங்களுடன் இணைந்து கட்டப்படும்.
- அத்துடன் கரியமில வாயுவை வளிமண்டலத்திற்கு அனுப்பி, அதனால் ஏற்படும் சூழற் பாதிப்புக்களை குறைப்பதற்கு அணுகதிரியக்க தொழில்நுட்பத்தையும், சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்கும் தொழில்நுட்பத்தையும் ஆதரிப்போம்.

பதில்:

தமிழ் மக்கள் அனுபவித்த துன்பங்களை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும். எமது கட்சியின் தலைவர் பியர் பொலியேவ்ற, ஈழத் தமிழர்களுக்கு நடந்தது இனப்படுகொலை என்றும் இது சர்வதேச நீதிமன்றத்தில் (ICI) விசாரிக்கப்பட வேண்டும் என்றும் தெளிவாக கூறியிருக்கின்றார்.

ஒரு நாட்டில் வசிக்கும் மக்களுக்கு பேச்சு சுதந்திரம் இல்லாவிடில் அங்கு தனி மனித சுதந்திரமும் இல்லாது போய் விடும். ஆறாம் சட்ட திருத்தம் (ஆவணி 8,1983) தமிழ் மக்கள் தமது பெரு விருப்பமான சுதந்திர நாட்டை பற்றிப் பேசக்கூட முடியாத நிலைக்கு ஈழத் தமிழ் மக்களைத் தள்ளி உள்ளது. ஆறாம் சட்ட திருத்தமும் (6th amendment to the constitution) பயங்கரவாத தடைச் சட்டமும் ஈழத் தமிழர்களை ஒரு பயம் கொள்ளும் நிலையில் கடந்த 40 வருடங்களாக வைத்துள்ளது.என்றால் அது பொய்யான கருத்தாக மாட்டாது.

கேள்வி:

கனடாவின் அரச நிதியானது பெருமளவு பல்வேறு வழிகளில் வீணடிக்கப்பட்டு வருவதாக குற்றச்சாட்டுகள் எழுதுகின்றனவே அது பற்றி...

பதில்:

தனது ஒவ்வொரு ஊழல் செயலையும் தற்போதைய லிபறல் அரசாங்கம் மூடி மறைத்து வருகிறது.

SNE - Lavalin ஊழல்
WE chanty ஊழல்
Arrivecan (Arrivescam) ஊழல்

இப்படியான ஊழல்கள் லிபரல் அரசாங்கத்தின் பெரும் ஊழல்களுக்கு சில உதாரணங்களாக கூறலாம்.

மக்களின் பெரும் நிதிகள் சில தனிப்பட்டவர்கள் செல்வந்தர் ஆகும் செயல்பாடுகளை, லிபரல் அரசாங்கத்தின் திறமையற்ற செயற்பாடுகள் காட்டி நிற்கின்றன.

எமது கன்சர்வேட்டிவ் கட்சியின் நிலைப்பாடு:என்னவென்றால் நாம் புதிதாக செலவு செய்யும் ஒவ்வொரு டொலருக்கும் ஒரு டொலர் வேற எங்காவது சேமிக்கப்பட வேண்டும்.. இந்த விடயத்தில் எமது தலைவர் பிரதமராகப் பதவியேற்கவுள்ள நாளில் இருந்தே திட்டமிட்டுச் செய்வார் என்பது எமது நம்பிக்கை.

கேள்வி:

தங்களது கன்சர்வேட்டிவ் கட்சியின் தலைவர் அவர்களின் எதிர்க்கட்சித் தலைவராக பாராளுமன்றத்தில் பணியாற்றிய காலம் பற்றி தங்களது கருத்து என்ன?

எமது கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் பியர் பொலியேவ்றா பாராளுமன்றத்தில எதிர்கட்சித் தவைராகப் பொறுப்பேற்று இன்றுவரை ஒன்றரை வருடங்கள் ஆகின்றன. இந்த் காலப்பகுதியில் நான் அவரிடத்தில் பல சிறப்பான குணாதிசியங்களைக் கண்டிருக்கின்றேன்.

எமது கட்சிக்குள் ஒத்த சிந்தனை இல்லாத அங்கத்தவர்களை புரிந்துணர்வோடு இணைக்க கூடிய சிறந்த ஆற்றல் கொண்டவர். அதனை விட கனடாவின் எல்லா மாகாணங்களையும் இணைக்கும் வல்லமை கொண்டவராகவும் விளங்குகின்றார்.

எமது கட்சித் தலைவருடைய தூர நோக்கு சிந்தனையும். தெளிவான திட்டமிடலும். அவர் கனடிய பிரதமராக பொறுப்பேற்கும் போது மக்களின் வாழ்க்கை தரத்தை மீண்டும் உயர்நிலைக்கு கொண்டு வருவார் என்பதை நான் உறுதியுடன் கூறுவேன்.

இவ்வாறு திரு தீபக் தனது கேள்வி பதில் அடிப்படையில் தெரிவித்துள்ளார்.



# 39 தொகுதிகளிலும் மனுக்கள் பரிசீலனை முடிந்தது: தமிழகத்தில் 1,085 பேரின் வேட்புமனுக்கள் ஏற்பு

இந்திய செய்திகள்

தமிழகத்தில் 39 தொகுதிகளிலும் போட்டியிட தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள்பரிசீலிக்கப்பட்டதில், 1,085 வேட்பாளர்களின் மனுக்கள் ஏற்கப்பட்டன. தமிழகத்தில் மக்களவை தேர்தல் ஒரேகட்டமாக ஏப்ரல் 19ம் தேதி நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த 20ம் தேதி தொடங்கி 27ம் தேதிமாலை 3 மணியுடன் முடிந்தது. 1,403 வேட்பாளர்கள் 1,749 மனுக்களை தாக்கல் செய்திருந்தனர். அதிகபட்சமாக, கரூரில் 73,வடசென்னையில் 67, தென்சென்னையில் 64 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. காலை 11 மணி முதல் அந்தந்த தொகுதி பொது பார்வையாளர்கள் முன்னிலையில், மனுக்கள் பரிசீலனை நடைபெற்றது. வேட்புமனுக்கள், பிரமாண பத்திரங்களில் உள்ள விவரங்கள் சரியாக உள்ளதாஎன்பது தேர்தல் நடத்தும் அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டு, ஒவ்வொரு மனுவாக ஏற்கப்பட்டது.

வேட்பாளர்கள் தாக்கல் செய்த கூடுதல் மனுக்கள், உரிய ஆவணங்கள் இல்லாத மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.கோவை தொகுதி பாஜக வேட்பாளர் அண்ணாமலை வேட்புமனு தாக்கலில் விதிமீறல்




உள்ளதாக கூறி நாம் தமிழர், அதிமுக உள்ளிட்ட கட்சியினர் தேர்தல் நடத்தும் அலுவலரான மாவட்ட ஆட்சியர் கிராந்திகுமார் மற்றும் அதிகாரிகளுடன் வாக்குவாதம் செய்தனர். தேனி தொகுதி பாஜக கூட்டணி வேட்பாளர் டிடிவி தினகரனின் பிரமாண பத்திரத்தை இணையதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்ய இயலாததால், அதை ஆய்வு செய்த பிறகே ஏற்க வேண்டும் என எதிர்தரப்பினர் கூறினர்.

வடசென்னை தொகுதி திமுக வேட்பாளர் கலாநிதி வீராசாமி பிரமாண பத்திரம் பெற்ற நோட்டரி பப்ளிக்கின் உரிமம் ஏற்கெனவே காலாவதி ஆகிவிட்டது என்று பாஜக வேட்பாளர் பால்கனகராஜ் வலியுறுத்தினார். ஆனாலும், உரிய விளக்கங்கள் அளிக்கப்பட்ட நிலையில், அவர்கள் அனைவரது மனுக்களும் ஏற்கப்பட்டன. ராமநாதபுரம் தொகுதியில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் அதே பெயரில் உள்ள 4 பேர் என 5 சுயேச்சைகளின் மனுக்களும் ஏற்கப்பட்டன.தமிழகத்தின் 39 தொகுதிகளிலும் மொத்தம் தாக்கல் செய்யப்பட்ட 1,749 மனுக்களில், 1,085 மனுக்கள் ஏற்கப்பட்டு, 664 மனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன. கரூரில் அதிகபட்சமாக 56 மனுக்கள், தென்சென்னையில் 53 மனுக்கள், வடசென்னையில் 49 மனுக்கள் ஏற்கப்பட்டுள்ளன. விளவங்கோடு சட்டப்பேரவை தொகுதி இடைத்தேர்தலுக்கு 22 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டதில், 14 மனுக்கள் ஏற்கப்பட்டன. வேட்புமனுக்களை திரும்ப பெறும் அவகாசம் நாளை (மார்ச் 30) மாலை 5 மணிக்கு முடிகிறது.

# "கோவை மக்களுக்காக எனது குரல் நாடாளுமன்றத்தில் ஒலிக்கும்" அண்ணாமலை உறுதி



நாடாளுமன்றத்தில் கோவை தொகுதி மக்களின் குரலாக எனது குரல் ஒலிக்கும் என பாஜக மாநில தலைவர் அண்ணாமலை கூறினார்.கோவை மக்களவைத் தொகுதி பாஜக வேட்பாளர் அண்ணாமலை, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், மாவட்ட தேர்தல் அலுவலர் கிராந்திகுமார் பாடியிடம் நேற்று வேட்பு மனு தாக்கல் செய்தார். அப்போது, பாஜக மாநில துணைத்தலைவர் வி.பி.துரைசாமி, கோவை தெற்கு தொகுதி எம்எல்ஏ வானதி சீனிவாசன், கோவை மாநகர் மாவட்ட தலைவர் ரமேஷ்குமார், முன்னாள் எம்எல்ஏ சின்ராஜ் ஆகியோர் உடன் இருந்தனர்.

முன்னதாக, கோனியம்மன் கோயிலில் அண்ணாமலை சுவாமி தரிசனம் செய்தார். கோயில் வளாகத்தில் புதுமண தம்பதிகளான கோவைப்புதூரை சேர்ந்த ரவி தேவிகா தம்பதி அண்ணாமலையிடம் ஆசி பெற்றனர். பின்னர், 1989ம் ஆண்டு கொலை செய்யப்பட்ட இந்து அமைப்பை சேர்ந்த நிர்வாகி வீர கணேஷின் அம்மாவிடம் அண்ணாமலை ஆசி பெற்றார். இதைத் தொடர்ந்து, தொண்டர்கள் புடைசூழ, அவிநாசி சாலை அண்ணா சிலை அருகில் இருந்து ஊர்வலமாக சென்று மனு தாக்கல் செய்தார். பின்னர், அவர் செய்தியாளர்களிடம் கூறியதாவது: நாடாளுமன்றத்தில் கோவை தொகுதி மக்களின் குரலாக எனது குரல் ஒலிக்கும். கோவை மக்களுக்கு உறுதுணையாக இருப்போம். வளர்ச்சியை வேகப்படுத்துவோம். தேசிய ஜனநாயக கூட்டணியின் வெற்றி உறுதி செய்யப்பட்டு உள்ளது. அதிமுக வேட்பாளர் சிங்கை ஜி.ராமச் சந்திரனின் தந்தை குறித்து பேசியதற்கு மன்னிப்பு கேட்க முடியாது.

அது எனது கருத்து. வளர்ச்சியை தடுக்கக் கூடிய ஆதிக்க சக்திகளோடு மட்டும் தான் எங்களது போட்டி இருக்கும். கோவை பிரச்சினைகள் குறித்து தற்போதைய எம்பி, நாடாளுமன்றத்தில் எத்தனை முறை பேசியிருக்கிறார்?கடந்த காலங்களில் பருத்திக்கு இறக்குமதி வரி வேண்டுமென ஜவுளித் தொழில் துறையினர் கேட்டதால் வரி விதிக்கப்பட்டது. காட்டன் கார்ப்ப ரேஷன் ஆஃப் இந்தியாவை கலைத்தால் பருத்தி விலை குறையும் என்கின்றனர். அதற்கான முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது. கோவை விமான நிலைய விரிவாக்கத்துக்கு மீதமுள்ள 87 ஏக்கர் நிலத்தை ஆர்ஜிதம் செய்து வழங்க தமிழக அரசு தாமதம் செய்கிறது. மத்திய விமான போக்கு வரத்து அமைச்சர், மூன்று முறை தமிழக முதல்வருக்கு கடிதம் எழுதி இருக்கிறார்.வானதி சீனிவாசன் பலமுறை சென்று மத்திய அமைச்சர் பியூஷ் கோயலை அழைத்து வந்து தொழில் துறையினருடன் கூட்டம் நடத்தி, அவர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காண உதவியுள்ளார்.

மூன்று முறை விமான போக்கு வரத்துறை அமைச்சருக்கு கடிதம் எழுதி உள்ளார். கோவை வளரக்கூடாது என மாநில அரசு கங்கணம் கட்டிக் கொண்டிருக்கிறது. 2022 தீபாவளிக்கு முன் நடந்த தற்கொலை குண்டு வெடிப்புக்கு பின் பிறகு ஐஎஸ்ஐஎஸ் அமைப்பு என குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டு, செயல்பட்டுக் கொண்டிருந்த ஒரு குழுவை உடைத்துள்ளனர்.கோவை மக்கள் இதை மறக்க மாட்டார்கள். 1998ம் ஆண்டு நடந்த கோவை குண்டு வெடிப்பு பிரிவினை வாதத்தை ஏற்படுத்தாது. இஸ்லாமியர்களும், அவர்களின் குழந்தைகளும் உயிரிழந்துள்ளனர்.

தீவிரவாதிக்கு மதம் கிடையாது. தீவிரவாதிகள் மக்களை கொலை செய்ய வருபவர்கள். கோவை மக்களவை தொகுதி மக்கள் 60% எனக்கு வாக்களிப்பார்கள். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# "நான் அரசியலுக்கு வந்தது காலத்தின் கட்டாயம்" இபிஎஸ் மேடையில் விஜய பிரபாகரன் பேச்சு



"ஓர் இளைஞனாக விருதுநகர் தொகுதியில் நிற்கிறேன். ஒருநாள் அரசியலுக்கு வருவேன் என்று தெரியும். ஆனால், இவ்வளவு சீக்கிரம் வருவேன் என்று தெரியாது. இது காலத்தின் கட்டாயம்'' என விருதுநகர் தேமுதிக வேட்பாளர் விஜய பிரபாகரன் தெரிவித்துள்ளார்.விருதுநகர் மாவட்டம் சிவகாசி பாவாடி தோப்பு பகுதியில் அதிமுக கூட்டணி சார்பில் பிரச்சார பொதுக்கூட்டம் மாலை நடைபெற்றது. இதில் அதிமுக கூட்டணியில் தேமுதிக சார்பில் விருதுநகர் மக்கவைத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் விஜய பிரபாகரன் பேசுகையில், "ஒரு இளைஞனாக விருதுநகர் தொகுதியில் நிற்கிறேன்.

ஒருநாள் அரசியலுக்கு வருவேன் என்று தெரியும். ஆனால் இவ்வளவு சீக்கிரம் வருவேன் என்று தெரியாது. இது காலத்தின் கட்டாயம்.விஜயகாந்தின் சொந்த மண்ணான விருதுநகர் தொகுதியில் போட்டியிடுகிறேன். இந்த பந்தம் என்றுமே விட்டுப் போகாது. எம்ஜிஆர், கருப்பு எம்ஜிஆர் என்ற உறவு இன்றும் தொடர்கிறது'' என்றார்.

முன்னதாக தேமுதிக வேட்பாளர் விஜய பிரபாகரனை ஆதரித்து பேசிய அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி, "விளையும் பயிர் முளையிலேயே தெரியும் என்பது போல் விஜய பிரபாகரன் உள்ளார்'' என்றார்.மேலும், "திமுக அரசின் ஊழல்களை துறைகள் வாரியாக பட்டியலிட்டு ஆதாரங் களுடன் ஆளுநரிடம் நாங்கள் மனு அளித்தோம். முதல்வரின் மருமகனும் மகனும் ரூ.30 ஆயிரம் கோடி சம்பாதித்து உள்ளதாக திமுக அமைச்சர் பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் ஆடியோவில் பேசி உள்ளார்.

அந்தப் புகார் மனுவை ஆளுநர் விசாரித்து இருந்தால் மக்களவைத் தேர்தலுடன் சட்டப்பேரவை தேர்தலும் வந்திருக்கும். ஆளுநர் நடுநிலையோடு செயல்பட வேண்டும்'' என்றார்.

# கணக்கில் உள்ளதால் தேர்தல் பத்திரம் ஊழல் ஆகாது: தமிழிசை சவுந்தரராஜன் விளக்கம்

தேர்தல் பத்திர விவரங்கள் கணக்கில் உள்ளதால் அதனை ஊழலாகக் கருத முடியாது என தென்சென்னை தொகுதி பாஜகவேட்பாளர் தமிழிசை சவுந்தர ராஜன் தெரிவித்துள்ளார். தென்சென்னை தொகுதி பாஜகவேட்பாளர் தமிழிசை சவுந்தரராஜன் கோடம்பாக்கம், தி.நகர் மற்றும் மேற்கு மாம்பலம் உள்ளிட்ட பகுதிகளில் நேற்று தேர்தல் பிரச்சாரத்தில் ஈடுபட்டார். அவருக்கு சங்கொலி எழுப்பியும், மலர்களைத் தூவியும் பாஜக தொண் டர்கள் வரவேற்பளித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: மக்களவை உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், சட்டப்பேரவை தொகுதிவாரியாக நாடாளுமன்ற அலுவலகத்தை திறப்பேன். மக்களவை உறுப்பினராக எப்படி இருக்க வேண்டும் என்பதற்கு உதாரணமாக இருப்பேன். அதிகாரப்பூர்வமாக தேர்தல் பத்திரம் மூலம் பணத்தை பெற்றதால்தான் இத்தனை நாட்களுக்குப் பின்னரும் அதனைப் பார்க்க முடிகிறது.
தேர்தல் பத்திரம் கணக்கில் உள்ளதால் அதனை ஊழலாகக் கருத முடியாது. பாஜக மட்டும் தேர்தல் பத்திரம் பெறவில்லை அனைத்துக் கட்சிகளும் பெற்றுள்ளன. ஆனால், குற்றச்சாட்டு மட்டும் பாஜக மீது இருக்கிறது.

திமுக அதிமுகவுக்கு மாற்றாகஒரு தேசிய சக்தி அவர்களை மீறி வளர்ந்து கொண்டிருக்கிறது. இதனை தேர்தல் முடிவுகள்தான் காட்டும். அதேபோல பாஜகவுக்கும் சின்னம் ஒதுக்கீடு செய்வதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை. எதற்கெடுத்தாலும் பாஜக தொடர்புபடுத்தக் கூடாது. இவ்வாறு அவர் கூறினார்.

# கவிநாயகர் கந்தவனம் அவர்களின் இறுதிக்காலங்கள்

**கலாரசிகன்**



கவிநாயகர் என மிகப் பிரபலமாக அறியப்பட்டவர் நுணாவிலில் பிறந்து, குரும்பசிட்டியில் தனது துணையை வரித்துக்கொண்டு வாழ்ந்தவர். சைவத்திற்கும் தமிழுக்கும் தொண்டாற்றப் பிறந்தவராகவே தன்னை வாழ்நாளில் ஆக்கிக்கொண்டு வாழ்ந்து காட்டியவர். அருள்மாமணி என சாந்தலிங்கம் அடிகளாரால் சிறப்புப் பட்டமளித்து கௌரவிக்கப்பட்டவர் கவிஞர்.

*தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்*
*தோன்றலின் தோன்றாமை நன்று (236)*

என்னும் பொய்யாமொழியாரின் வாக்கிற்கேற்ப எடுத்துக்கொண்ட விடயத்தில் மற்றவர்கள் வியந்து போற்றும் வண்ணம் பெரும் சபைகளில் தோன்றி தனது பெயரை நிலைநாட்டிக்கொண்டர் என்பது உலகறிந்தவிடயம். மனப்பக்குவமும், ஆளுமையும், மற்றவர்களை வசீகரிக்கும் சொல்லாற்றல், உபசரிக்கும் பண்பும் கொண்டவர்.

*இதனை தனால் இவன்முடிக்கும் என ஆய்ந்து*
*அதனை அவன் கண்விடல்*

என்னும் வள்ளுவனார் வாக்கைப் பின்பற்றி வாழ்ந்தவர். வளர்ந்து வரும் எழுத்தாளர்கள், பேச்சாளர்கள் போன்றோரை உயத்துணர்ந்து அவர்களைத் தட்டிக்கொடுத்து வளர்த்தெடுத்துவர். மரபுக்கவிஞர்கள் பலரை கனடாவில் தோற்றுவித்தவர். மேடையில் ஏறி நாடகங்களிலேயே நடித்தவர். பெற்றோர் ஒரு பிள்ளைக்கு என்ன செய்யவேண்டும் என்பதனைச் செய்தமையால் அவர் வாழுங்காலம் முழுமையும் புகழேணியில் ஏறி உலகைச் சுற்றிவந்தவர். இளமையில் தந்தையை இழந்துவிட்டாலும் தாய் மாமனின் அரவணைப்பில் வளர்ந்தவர். மாமனும் மூத்த சகூதரனும் இவரது கல்விக்குத் தீனி போட்டு வளர்த்தெடுத்தவர்கள்.

தமிழகத்தில் உயர்கல்வியை முடித்துக்கொண்டு தாயகம் திரும்பியவர் தனக்கு விருப்பமான ஆசிரியத் தொழிலை ஏற்றுக்கொண்டு மாணாக்கரை நெறிப்படுத்தி, வளர்த்தெடுத்தவர். அதிபராகவும் கடமையாற்றியதோடு சமூகத் தொண்டிலம் தன்னை இறுதி மூச்சுவரை ஈடுபடுத்திக்கொண்டவர்.

இறுதிக் காலத்தில் இல்லத்திலேயே தங்கவேண்டிய நிலைக்கு உள்ளாகியிருந்தமை அவரது பொதுவாழ்விற்கு வரம்புபோட்டது எனலாம். இருப்பினும் வீட்டில் இருந்தபடியே பல்வேறு துறைகளிலும் ஆலோசனைகளும் அவ்வப்போது வரும் மாதாந்த, வாராந்த, இதழ்களில் எழுதி வந்தார். எனினம் அவரை நாடி வந்து கவிதை, இலக்கிய, சமயம் தொடர்பான விடயங்களை அணுகியோருக்கு மனமகிழ்வோடு விடயதானம் செய்து தனது பொழுதை மிகப் பயனுள்ளதாகச் செய்து வந்தார்.

சிறிது காலமாக அவரது உடல் அவரது உள்ளத்தோடு ஒத்துப்போகவில்லை. இருந்தும் தன்னாலான முயற்சிகளை எடுத்துக்கொண்டே இருந்தார். அவரது நிலைமையை நன்கு உணர்ந்த துணையாள் தவமணி அம்மா எந்தவித சலிப்பும் இன்றி அவருக்கான அனைத்துத் தேவைகளையும் நிறைவேற்றிவந்தமையை நான் நேரிலும் தொலைபேசிமூலமும் அறிந்துகொண்டுதான் இருந்தேன்.

இவற்றிற்றகு மேலாக தங்கள் வேலைப் பழுக்களுக்கு மத்தியிலும் புதல்வி வாணி ருத்திரா காலையிலும் மாலையிலும் வந்து தாய், தந்தையருக்கான பணிகளையும், தேவைகளையும் நிறைவேற்றிக்கொண்டிருந்தமையை நான் அங்கு அடிக்கடி செல்லும் போது அவதானிக்க முடிந்தது மட்டுமன்றி திருமதி. தவமணி அம்மா தொலைபேசியில் யார் யார் தொலைபேசியில் அழைத்தாரகள், யார் யார் வந்தார்கள் என்ற விபரங்களை எல்லாம் கூறிக்கொண்டே இருப்பார். இறுதிக் காலத்தில் ஒரு குழந்தைப்பிள்ளையைப் பார்ப்பதுபோன்று அவர் தனது துணைவரைப் பார்த்துக்கொண்டமையைப் பார்த்து மெய்மறந்து அவரைப் போற்றி நின்ற கணங்களும் உண்டு.

நோய்வாய்ப் பட்டிருந்த கவிஞரைப் பார்த்து அவரோடு அளவளாவுவதோடு அங்கு செல்வதால் துணைவியாரின் மனதிற்கு ஆறுதல் அளிக்கும் என்பதை உணர்ந்து எனக்கு வசதி கிடைக்கும் போதெல்லாம் அங்கு செல்வதும் முடியாத சந்தர்ப்பங்களில் தொலைபேசியில் அழைத்துக் கதைப்பதுமாக இறுதிவரை தொடர்பில் இருந்தேன். இறுதிநாள் தொலைபேசியில் அழைத்தபோது என்னத்தைச் சொல்ல ஒன்றுமே சாப்பிடுகிறார் இல்லை எனச் சோர்வாக என்னோடு 12.30 க்கு உரையாடினார். அதன்பின்னர் 3.00 க்கு தொலைபேசி அழைப்பு வந்தது எங்களை எல்லாம் விட்டுச் சென்றுவிட்டார் என்ற தழுதழுத்து குரலோசை கேட்டது. உடனடியாக சென்று பார்க்க விளைந்து அங்கு சென்றேன் இரண்டுநாட்களுக்கு முன்னர் நான் அங்கு சென்றபோது எனது கைகளை இறுகப்பற்றிக்கொண்டு பர்த்துக்கொண்டே இருந்தார் எதுவும் பேசவில்லை. கைப்பிடியில் தனது பிரியாவிடையைத் தெரிவித்திருந்தார் என்பதை இப்பொழுது உணர்கின்றேன்.

"ஒரு கதையும் சொல்லாமல் அமைதியாக அடங்கிவிட்டார் என்ற ஆதங்கத்தை ஈனக் குரலில் முனகிக் கண்ணீர் வடித்தார். அவர் படுத்திருந்த கட்டிலுக்கு பக்கமாக அவரது கட்டில் அதில் அமர்ந்திருந்தார். அவருக்காக இரங்கினேன். அருகில் சென்று இருந்து துயர்தேய்ந்த துணைவியாரின் முகத்தைப் பார்க்கமுடியாமல் திணறிக்கொண்டு துன்பத்தைப் பகிர்ந்துகொண்டேன். அவர் இன்னும் போராடிக் கொண்டிருக்காமல் சென்றதும் நல்லதுதான் என்று ஆறுதலடைவதற்கு மனதில் நான் சில நாட்களுக்கு முன்னர் நண்பர்களோடு பகிர்ந்துகொண்ட விடயங்களை எண்ணி மனநிறைவு எய்தக்கூடியதாக இருந்தது.

மனிதருக்கு எப்படி எல்லாம் மரணம் வருகின்றது என்பதை எனது தந்தையாரின் இறுதிக்காலத்தை மனதில் மீட்டு எடைபோட்டுப்பார்க்க வைத்தது. எப்படியெல்லாம் வலம்வந்தவர், மேடைகளை அலங்கரித்தவர் இப்படியாக அடங்கிவிட்டாரே என்று எனது மனம் துயரில் ஆழ்ந்தது. சில நேரங்களில் அவருக்கு ஒரே இடத்தில் இருக்கப் பிடிக்காது. எழுந்து நடக்கமுயற்சிப்பார் ஆனால் அவரது கால்கள் இடங்கொடுக்கவில்லை. சுவரையும் மேசையையும் துணைகொண்டு அடிக்குமேல் அடி எடுத்துவைக்கும் நிலைமைப் பார்த்து இரக்கப்பட்டேன். சுவரை விட்டுட்டுத் துணிந்து நடவுங்கோ என்றேன் அதற்கு கீழே விழுந்துவிடுவேன் எனப் பாயமாக இருக்கின்றது என்றார். அமர்ந்திருந்துத மேலையில் வைத்திருந்து பாதாம்பருப்பு, வேர்க்கடலை, முந்திரிப்பருப்பு இவை தனித்தனியாக இருந்தன அவற்றை எடுத்து ஒன்றொன்றாக நீட்டிக் கெண்டு சாப்பிடு தம்பி என்பார். போதும் என்றாலும் திரும்பத்திரும்ப எடுத்து நீட்டுவார். கொடுத்துப் புரந்தது கர்ணனின் கைகள் என்பதுதான் நினைவில் வந்தன. மனம் இரங்கியழுதது. எப்படிச் சொல்லுவேன். அந்தப் பெரிய மனிதருக்கு நானா ஆறுதல் வார்த்தைகள் புத்திமதிகள் சொல்வது என மனவேதனை அடைந்தேன்.

ரொறன்ரோவில் மட்டுமல்ல உலகின் பல நாடுகளுக்கும் சென்று தனது சிம்மக்குரலால் மேடைகளை அலங்கரித்த ஒரு முத்தமிழ் வித்தகர். 80 க்கு மேற்பட்ட நூல்களை ஆக்கித்தந்தவர். சைவமும் தமிழும் அவரது இரு கண்கள். சைவத்தையும் தமிழையும் வளர்க்க அவர் செய்த முயற்சிகள் எண்ணிலடக்கமுடியாதவை.

தனக்கென ஒரு தனிவழியைத் தேடிக்கொண்டு பண்பட்ட மனிதராக அனைவரோடும் காய்தல் உவத்தல் இன்றி ஒரே பாங்கில் பழகிவந்தவர். அவருக்கு யாரும் எதிரிகள் இல்லை என்று கூறும் அளவிற்கு அவர் எல்லோருடனும் அன்பாகப் பழகிவந்தவர். தன்னை நாடி வருவோரை அணைத்துக்கொண்டு அவர்களது விருப்புக்களை நிறைவேற்றித்தந்தவர்.

கற்றவர்களோடு மிக மகிழ்ச்சியாக உறவாடி மகிழ்ந்தவர். அவர் இருக்கம் இடம் மிகக் கலகலப்பாக இருக்கும். அதிபர் கனகசபாபதி, பேராசிரியர் சுப்பராயன் பசுபதி, பேராசிரியர் கண்ணப்பன், பேராசிரயர் கணேசலிங்கம், வணக்கத்திற்குரிய சாந்தலிங்கம் அடிகளார், பேராசிரியர் நா. சுப்பிரமணியன், துணைவியார் கலாநிதி கௌசல்யா, கலாநிதி பார்வதி கந்தசாமி தம்பதியினர் போன்றோர் அவரது கற்றறிந்த நண்பர்களாக பழகிவந்தவர்கள். இவர்களுக்கு மேலாக விளம்பரம் பத்திரிகை உரிமையாளர் ராஜா மகேந்திரன், துணைவியார் பாமா மகேந்திரன், உதயன் பத்திரிகையின் ஆசிரியர் லோகேந்திரலிங்கம் துணைவியார் பாத்மலோஜினி, தாய்வீடு பத்திரிகை ஆசிரியர் திலீப் குமார், கலாநிதி பாலசிவகடாட்சம் தம்பதியினர், வைத்தியக் கலாநிதி இ.லம்போதரன் தம்பதியினர் கவிஞர் புகாரி தம்பதியினர், ஜேர்மனியில் இருந்த வெளிவரும் வெற்றிமணி பத்திரிகையை நடத்தும் அதன் ஆசிரியர் மு.சிவகுமாரன் போன்ற எழுத்தாளர்கள் மீது பற்றும் பாசமும் வைத்திருந்தவர் கவிஞர்.

கவிநாயகர்மீது மிகுந்தபற்றுக்கொண்டு அவரோடு நட்புப்பூண்டு ஒழுகியவர்களில் ஒட்டாவாவில் வாழ்ந்துவரும் பொறியியலாளர் புனிதவேல் அவர்களும் குறிப்பிடத்தக்கவர். ரொறன்ரோ வரும்போது கவிஞரைக் காணாது செல்வதே இல்லை. அங்கிருந்தாலும் அவரது உடல்நலம்பற்றி அடிக்கடி விசாரித்துக்கொண்டும் இருப்பார். ரொறன்ரோவில் இருந்த காலத்தில் கவிஞர் வீட்டிற்கு அண்மித்தாக இருந்த "ரிம்கோட்டினில்" சந்தித்து உரையாடுவதில் அவரும் முனைவர் பாலசிவகடாட்சமும் பேரின்பம் காண்பது வழக்கம். சிற்சில வேளைகளில் நானும் அவர்களோடு கலந்துகொண்டு மகிழ்ந்து உரையாடியுள்ளேன். சிவகடாட்சம் அடுத்தவாரம் வருகின்றேன் எனது காரில் உங்களை ஏற்றிக்கொண்டு நீங்கள் வேலை செய்த அப்பகனடா (Upper Canada College) பாடசாலைப் பக்கம் ஒருக்கால் போய்ப்பார்த்து பழசுகளைப் பார்த்து வருவோம் என்று தொலைபேசியில் அழைத்தவர் அந்த விருப்பு நிறைவேறாமலே நிராசையாகிப் போனதே எனக்கூறி தனது மனவேதனையைக் கொட்டித்தீர்த்தார்.

கலாநிதி பாலசிவகடாட்சம் எழுதிய சரசோதிமாலை நூலின் ஆக்கத்திற்கு அவரது கருத்தோட்டம் மிகவும்பயன்பட்டது என்பதனை அடிக்கடி குறிப்பிடுவார். சரசோதி மாலை நூலின் பாடல்களின் எனக்குத் தெளிவில்லாத பகுதிகளை அவருடன் உரையாடிப் பெற்றுக்கொண்டமையையும் இன்னும் தனக்குக்கிடைத்த பழைய ஏடுகளை வாசித்து அதன் பெருளை விளக்கிக்கூறக் கூடியவர் கவிஞரைத்தவிர வேறுயாரும் கனடாவில் இருப்பதாகத் தெரியவில்லை என தனது ஆதங்கத்தைத் தெரிவித்தக்கொண்டார். கவிநாயகர் சுகவீனமுற்று இருந்த போதிலும் அவரோடு தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாரம்தோறும் உரையாடுபவர்களில் அவரும் முக்கியமானர். அவரது உடல்நலம் பற்றி மிகுந்த அக்கறையோடு விசாரிப்பார். வெளியாட்கள் போய் அவருக்கு ஏதாவது வேறு தொற்றுநோய்களைத் தராமல் பார்த்துக் கொள்ள வேண்டும் என கவிஞரின் உடல்நலத்தில் மிகுந்த அக்கறை காட்டிவந்தவர். அவரின் இழப்பால் மிகுந்த வேதனைக்கு உள்ளானார்.

உதயன் பத்திரியை லோகேந்திரலிங்கமும் துணைவி பத்தலோஜனியும் அதிபர் மீது அளவுகடந்த அன்பும் மதிப்பும் வைத்திருந்தவர். தனது ஒவ்வொரு விழாவற்கும் அவரை மேடையில் ஏறவைத்து பெருமைப்படுவதோடு அவரையும் பெருமைப்படுத்துபவர். கவிப்பேரரசு வைரமுத்து, ஆச்சி மனோரம்மா போன்றோர் மட்டமல்ல இலக்கியவாதிகளையும் அழைத்தால் அவர்களைப் பாராட்டு விருது வழங்குபவர் கவிநாயகராகவே இருப்பார்.

கனடாவில் உள்ள எழுத்தர்களில் கவிஞர் மீது பற்றுக்கொண்டவர்கள் பலர். வீணைமைந்தன் சண்முகராஜா, அகில் சாம்பசிவம், கவிஞர் இரா.சம்பந்தன், பொதிகை எஸ். ஜெகதீசன், குரும்பசிட்டி ஜெகதீசன், கலகலப்புச் தீசன், கலைஞர் திவ்வியராஜன், ஆவணக் காப்பகம் நகுலசிகாமணி, தம்பதியினர் போன்றோர் கவஞரின் அன்பையும் மதிப்பையும் ஆதரவையும் பெற்றிருந்தனர்.

கவிஞர்மீது மிகுந்த மதிப்பும் அன்பும் வைத்திருந்து இணைந்து செயற்பட்டவர்கள் அதிபர் கனகசபாபதி மற்றும் பண்டிதர் அலெக்சாந்தர், அன்புநெறி ச. விசுவலிங்கம் ஆகியோர் கவிநாயகருக்கு முன்னரே இயற்கையெய்ததியவர்கள். அவர்களின் பிரிவுத்துயர் அவரைக் கௌவிக்கொண்டு விடுபடமுடியாமல் தவிக்கவும் வைத்தது என்பதும் நாமறிந்ததே.

கவிஞரன் சுகதுக்கங்களை அடிக்கடி கேட்டும் நேரில் சென்றும் அறிந்துகொள்ளுபவர் கதிர் துரைசிங்கம். 90வது பிறந்ததினத்திற்குக் கேக்வெட்டி மகிழ்ந்தவர். அவரோடு மனுவல் ஜேசுதாசனும் கவிஞர்பற்றி விசாரித்துக்கொள்வார்.

**(தொடர்ச்சி 25 பக்கம்)**

கனடா, தொல்காப்பிய மன்றமும்
தமிழ்நாடு, இலக்குவனார் இலக்கிய மன்றமும்
இணைந்து நடத்தும்

# முதலாம் உலகத் தொல்காப்பிய ஆராய்ச்சி மாநாடு

திருவள்ளுவர் ஆண்டு 2055, புரட்டாசித் திங்கள் 04, 05, 06 ஆம் நாள்களில்
(2024-09-20, 2024-09-21, 2024-09-22)
கனடா




குறிக்கோள் : தொல்காப்பியத்தில் உயர் ஆய்வுகள் மேற்கொள்ளுவதற்கான களமாக இம்மாநாடு அமையவேண்டும்.

இணையத்தளம் : www.tolkappiyam.ca
தொடர்புகளுக்கு : 647-881-3613 / 416-939-9171 / 647-850-0152

(23 பக்கத் தொடர்ச்சி)

# கவிநாயகர் கந்தவனம் அவர்களின் இறுதிக்காலங்கள்

கலாரசிகன்

கவிதையை கவிநாகரிடம் கற்று மரபுக்கவி பாடும் வல்லவர்களில் கவிநாயகரின் வாரிசாக அவர் கவிதை கற்பிக்கும் பணியைத் தொடர்ந்து செயற்படுத்திவரும் மாவிலி மைந்தன் சண்முகராசா மற்றும் இன்று கனடா எழத்தாளர் இணையத்தின் தலைவராக உள்ள அகணி சுரேஸ, கவிஞர்கழகத் தலைவராக இருக்கும் க.குமரகுரு மற்றும் அவர் ஒத்த கவிதைக் குழுவினரும் அவரது பேரன்புக்குப் பாத்திரமானவர்கள் மட்டுமல்ல கவிஞர்மீது அளவிலா மதிப்பையும் பற்றையும் கொண்டவர்கள் என்பதும் நாடறிந்த விடயம்.

கலாநிதி பார்வதி கந்தசாமி கவிநாயகரைத் தனது தந்தையாகவே மதித்தொழுகியவர். அவரோடு இணைந்து நாடங்களை மேடையேற்றி நடித்ததோடு அவருக்குத விருப்பமான சில உணவு வகைகளையும் செய்து கொடுத்துவந்தவர். அப்பம் கவிஞருக்கு மிக விருப்பமானது என்பதை உணர்ந்த அடிக்கடி அப்பத்தோடு அங்கு செல்வதையம் வழக்கமாகக் கொண்டிருந்தார்.

உவப்பத்தலை கூடி உள்ளப் பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்.

என்னும் குறட்பாவின் வழியது அவரது வாழ்வியலும் கற்றோருடன் கூடி மகிழும் பாங்கும். பல்வேறு காஷ்யங்கள், துணுக்குக்களை அவரது வாயிலிருந்து கேட்க முடிந்தது. இயல், இசை, நாட மேதையாக வலம் வந்தவர். கூத்தர்களுக்குக் கூத்தர், நாடகர்களுக்கு நடிகர், பாடகர்களுக்குப் பாடகர், உரைஞர்களுக்கு உரை வல்லாளர் எனப் பல்வேறு முகங்களையும் திறன்களையும் அகத்திருத்தி அவற்றை சமூகத்திற்குப் பயனுள்ளவாறு வெளியேற்றியும் வந்தவர்.

கவிதை புனைவதில் அவர் வல்லவர் "ம்" என்றால் முன்னூறும், "அம்" என்றால் அறுநூறும் எழுதும் ஆற்றல் படைத்தவர். அலயங்கள் பற்றியும் தனிமனித குணங்கள் பெருமைகள் பற்றியும் கவிதைகளை யாத்துத்தள்ளியவர். அவரது சில நூல்களுக்கு ஆய்வுகளும், கருத்துக் கண்ணோட்டமும் மற்றும் அணிந்துரையும் எழுதியுள்ளமை எனக்குப் பெருமைசேர்ப்பதாக உள்ளது.

தேவார திருவாசக பண்களைப் பாடவேண்டும் என அதற்காக அடியவர்களையும் பக்தர்களையும் திரட்டிச் செயற்பட்டவர். மாணிக்கவாசகர், அப்பர், சுந்தரர், சம்பந்தர் குருபூசைகள் மட்டுமல்ல நாவலர் பெருமானுக்கும் குருபூசை எடுத்து பெருமைப் படுத்தி மக்கள் மயப்படுத்தியவர். ஆண்டுதோறம் தேவார பண்ணிசை, பேச்சுப் போட்டிகளை இளம் சிறார்களிடையே நடத்தி பரிசில்கள், சான்றிதழ்கள் கொடுத்து வந்தவர். அவர் எப்போது கேட்டாலும் இல்லையென்னாது வழங்கிவந்துவர்களுள் பல்மருத்துவர் சண்முகவடிவேல் அவர்கள் முதன்மையானவர் எனலாம். பூதவுடலைப் பார்க்கவந்தவர் மிக நீண்டநேரமாக ஒரே இடத்தில் அமர்ந்திருந்து தனது மனக்கவலையை முகத்திலே தோயவிட்டிருந்தார். வருடா வருடம் இடம்பெறும் முற்றோதல் விழாவில் அவரது உரையை கேட்கவைப்பார் கவிஞர் என்றால் அவரது சமய அறிவையும் உலகளவல் சைவமகாநாடுகளில் கலந்து கொள்பவர்களில் ஒருவராகவும் உள்ளார்.

இவரைப்போலவே கவிஞர்மீது மிகுந்த பற்றுக்கொண்டவர் சின்னையா சிவநேசன் அவரகள். நீண்டநேரம் இருந்த அவர் இறுதியில் எழுந்துசெல்லும் போது இதுதான் வழ்க்கை என்று சலித்துக்கொண்டே சென்றார்.

ஊர்சுற்றித் திரியும் உல்லாசப் பறவையாக தனது துணையாளோடு உலகமெலாம் சுற்றிச் சுற்றிவந்தவர். வாழ்க்கை வாழ்வதற்கே என்பதனை அவரது செயல்களிலிருந்தும் எச்சங்களிலிருந்தும் கற்றுக்கொள்ள முடிகின்றது. மனிதத்தைப் போற்றி வந்த அவரது வாழ்க்கையை ஒரு பாடமாகக் கற்றுக்கொள்ள வேண்டும். அத்துணையும் கற்றுக்கொள்ளவேண்டிய மனிதநேரப் பாடங்கள். வாழ்வியல் அனுபவக் கூறுகளை பார்துப் அவரது வாழ்வியலைத் தொடர்வோம்.

சைவைத்தையும் தமிழையும் போற்றிப்பின்பற்றுவதோடு இளைஞர்களிடமும் முதியவர்களிடமும் சமய அறிவை ஊட்டும் நற்பணியைத் தனது மருத்துவத் தொழிலுக்குப் பிறிதாகச் செயற்படுத்தி வருபவர் வைத்தியக் கலாநிதி இராமநாதன் இலம்போதரன். அவர் மீது மிகுந்த பற்றும் மதிப்பும் வைத்திருந்தவர் கவிநாயகர். கவிநாயர் அழைத்துப் பேசவைக்கும் முக்கியமான ஒருவர். சமயத்தையம் தமிழையம் மிக நன்றாக மற்றவர்கள் புரிந்துகொள்ளத்தக்கதாக இலகு தமிழில் பேசவல்லவர். அவரால் நடத்தப்படும் சற்சங்க நிகழ்வுகளிலும் கவிநாயகர் கலந்துகொள்ளுவார்.

பலதடவைகள் காசிக்குச் சென்று வந்தமைப்றறி எடுத்துக் கூறி சிரித்திருக்கின்றார். போனதுதான் போனேன் ஒரு மோட்ச அர்ச்சனை செய்யலாம் என்று போய் இருந்தால் அவர்கள் சாதாரண மோட்சமா அதிமோட்சமா என்றார்கள் நான் இதுவரை இப்படி வெவ்வேறு மோட்சம் இருப்தாக அறிந்திருக்வில்லை எதற்கும் என்ன வித்தியாசம் என்று கேட்டேன். அதிமோட்சத்திற்கு இரட்டிப்பு செலவாகும் என்றார்கள் என்று சொல்லிச் சிரித்தார். இவ்விதமான தான் பெற்ற அனபவங்களையும் பல தடவைகள் சொல்லி நகைத்திருக்கின்றார். எல்லோரிடமும் அன்பாகப் பழகுவது மட்டுமல்ல பண்பார்ந்த வார்த்தைகளையும் அவர் உதிர்ப்பார். தம்பி, பிள்ளை, என்னும் வார்த்தைகள் அவரை ஆட்கொள்ளவைத்துவிடும். அன்போடும் பண்போடும் பழகிய நல்லதோர் அன்மா இன்று இப்புவியில் இல்லை.






# அன்பின் தொனி - 725

**பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)**

**தேவகிருபை** - Grace of God

**தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்**

யாக்கோபின் குமாரனாகிய ஆகூர் என்னும் புருஷன் ஈத்தியேலுக்கு வசனித்து, ஈத்தியேலுக்கும், ஊகாலுக்கும் உரைத்த உபதேச வாக்கியங்களாவன: மனுஷரெல்லாரிலும் நான் மூடன்; மனுஷருக்கேற்ற புத்தி எனக்கு இல்லை. நான் ஞானத்தைக் கற்கவும் இல்லை, பரிசுத்தரின் அறிவை அறிந்துகொள்ளவும் இல்லை. வானத்துக்கு ஏறியிறங்கினவர் யார்? காற்றைத் தமது கைப்பிடிகளில் அடக்கினவர் யார்? தண்ணீர்களை வஸ்திரத்தில் கட்டினவர் யார்? பூமியின் எல்லைகளையெல்லாம் ஸ்தாபித்தவர் யார்? அவருடைய நாமம் என்ன? அவர் குமாரனுடைய நாமம் என்ன? அதை அறிவாயோ? தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள்; தம்மை அண்டிக்கொள்ளுகிறவர்களுக்கு அவர் கேடகமானவர். அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே, கூட்டினால் அவர் உன்னைக் கடிந்துகொள்வார், நீ பொய்யனாவாய். இரண்டு மனு உம்மிடத்தில் கேட்கிறேன்; நான் மரிக்கும்பரியந்தமும் அவைகளை எனக்கு மறுக்காமல் தாரும். மாயையையும் பொய்வசனிப்பையும் எனக்குத் தூரப்படுத்தும்; தரித்திரத்தையும் ஐசுவரியத்தையும் எனக்குக் கொடாதிருப்பீராக. நான் பரிபூரணம் அடைகிறதினால் மறு தலித்து, கர்த்தர் யார் என்று சொல்லாதபடிக்கும்; தரித்திரப்படுகிறதினால் திருடி, என் தேவனு டைய நாமத்தை வீணிலே வழங்காதபடிக்கும், என் படியை எனக்கு அளந்து என்னைப் போஷித்தருளும். - **நீதிமொழிகள் 30: 1-9**

**பூமியில் சிறியவைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு**

எஜமானிடத்தில் அவனுடைய வேலைக்காரன்மேல் குற்றஞ்சுமத்தாதே, அவன் உன்னைச் சபிப்பான், நீ குற்றவாளியாகக் காணப்படுவாய். தங்கள் தகப்பனைச் சபித்தும், தங்கள் தாயை ஆசீர்வதியாமலும் இருக்கிற சந்ததியாருமுண்டு. தாங்கள் அழுக்கறக் கழுவப்படாமலிருந்தும், தங்கள் பார்வைக்குச் சுத்தமாகத் தோன்றுகிற சந்ததியாருமுண்டு. வேறொரு சந்ததியாருமுண்டு அவர்கள் கண்கள் எத்தனை மேட்டிமையும் அவர்கள் இமைகள் எத்தனை நெறிப்புமான வைகள். தேசத்தில் சிறுமையானவர்களையும் மனுஷரில் எளிமையானவர்களையும் பட்சிப்ப தற்குக் கட்கங்களையொத்த பற்களையும் கத்திகளையொத்த கடைவாய்ப்பற்களையுமுடைய சந்ததி யாருமுண்டு. தா, தா, என்கிற இரண்டு குமாரத்திகள் அட்டைக்கு உண்டு. திருப்தியடையாத மூன்றுண்டு, போதும் என்று சொல்லாத நான்குமுண்டு. அவையாவன: பாதாளமும், மலட்டுக் கர்ப்பமும், தண்ணீரால் திருப்தியடையாத நிலமும், போதுமென்று சொல்லாத அக்கினியுமே. தகப்பனைப் பரியாசம்பண்ணி, தாயின் கட்டளையை அசட்டைபண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும். எனக்கு மிகவும் ஆச்சரியமான வைகள் மூன்றுண்டு, என் புத்திக்கெட்டாதவைகள் நான்குமுண்டு. அவையாவன: ஆகாயத்தில் கழுகினுடைய வழியும், கன்மலையின்மேல் பாம்பினுடைய வழியும், நடுக்கடலில் கப்பலினுடைய வழியும், ஒரு கன்னிகையை நாடிய மனுஷனுடைய வழியுமே. அப்படியே விபசார ஸ்திரீயினுடைய வழியும் இருக்கிறது; அவள் தின்று, தன் வாயைத் துடைத்து: நான் ஒரு பாவமும் செய்யவில்லை என்பாள். மூன்றினிமித்தம் பூமி சஞ்சலப்படுகிறது, நான்கையும் அது தாங்கமாட்டாது. அரசாளுகிற அடிமையினிமித்தமும், போஜனத்தால் திருப்தியான மூடனினி மித்தமும், பகைக்கப்படத்தக்கவளாயிருந்தும், புருஷனுக்கு வாழ்க்கைப்பட்ட ஸ்திரீயினிமித்தமும், தன் நாச்சியாருக்குப் பதிலாக இல்லாளாகும் அடிமைப்பெண்ணினிமித்தமுமே. பூமியில் சிறியவைகளாயிருந்தும், மகா ஞானமுள்ளவைகள் நான்குண்டு.
- **நீதிமொழிகள் 30: 10- 24**

தொடரும்...

## கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் பெருமையுடன் நடத்தும்

# நூல்களின் சங்கமம்

கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையம் பெருமையுடன் நடத்தும் நூல்களின் சங்கமம் (புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்) 20-04-2024 சனிக்கிழமை காலை 10.00 தொடக்கம் மாலை 5.00 மணி வரை கனடா வாழ் எழுத்தாளர்கள் பலர் தங்கள் நூல்களை அறிமு-கம் செய்தும் விற்பனைக்கு வைத்தும் வாசகர்களைச் சந்திக்கின்ற அரியவொ-தாரு ஒன்றுகூடலாக இந்த நிகழ்வு கருதப்படுவதால், நாம் அனைவரும் கலந்து சிறப்பிப்போம்.

கனடா ஸ்ரீ ஐயப்பன் ஆலய கலாச்சார மண்டபத்தில்
635 Middlefield Road
Scarborough

மேலதிக விபரங்களுக்கு:
(416) 732-8021
(647) 765 9761
அல்லது
(416) 301-9027








# ஈழத்துத் திருக்கோயில்கள்

வரலாறும் மரபும் 1093



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com



## கங்குவேலி சிவன்கோவில்

### மூதூர், திருகோணமலை

*"திருநாமம் அஞ்செழுத்தும் செப்பாராகில்*
*தீவண்ணர் திறமொருகால் பேசாதாராகில்*
*ஒருகாலும் திருக்கோயில் சூழாராகில்*
*உண்பதன்முன் மலர்பறித்திட்டு உண்ணாராகில்*
*அருநோய்கள் கெட வெண்ணீறணியாராகில்*
*அளியற்றார் பிறந்தவாறேதோ வென்னில்*
*பெருநோய்கள் மிகநலியப் பெயர்த்துஞ் செத்துப்*
*பிறப்பதற்கெ தொழிலாகி இறக்கின்றாரே"*

இயற்கையின் சீற்றம் பலநிலைகளில், நிலப்பரப்புக்களில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்தி வருவது கண்கூடு. 2005 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஏற்பட்ட சுனாமி போன்ற கடற்கோள்கள் பல காலத்திற்குக் காலம் ஏற்பட்டு, பண்டைய ஈழம் அழிந்து ஈழ நிலப்பரப்பிலே மாற்றங்கள் ஏற்பட்டன. இக்கடல்கோள்களினால் நிலப்பகுதிகள் நீருள் மூழ்கியும், சில பகுதிகள் நிலமட்டத்தினின்றும் உயர்ந்தும் காணப்படும் நிலை ஏற்பட்டது. ஈழத்தில் மூன்று முறை பாரிய கடல்கோள்கள் ஏற்பட்டதாகவும், மூன்றாவது கடற்கோளின்பின் எஞ்சியுள்ள நிலப்பரப்பே தற்கால ஈழம் என வரலாற்றுச் செய்திகளிலே குறிப்பிடப்பட்டுள்ளது.

வரலாற்றுக்கு முற்பட்ட காலத்திலிருந்தே சிவபூமியாக ஈழம் விளங்கியுள்ளது. பஞ்ச ஈஸ்வரங்களுள் ஒன்றாக விளங்கும் திருக்கோணேஸ்வரம் அமைந்துள்ள திருகோணமலை மாவட்டத்தில் காணப்படும் பல திருக்கோயில்கள், ஈழத்தமிழர்களின் பண்டைய வரலாற்றுச் சிறப்பையும், கலாச்சார பாரம்பரியங்களையும் எடுத்தியம்புவனவாகக் காணப்படுகின்றன. இவற்றுள் திருகோணமலையின் மூதூர்ப் பிரதேசத்திலே அமைந்துள்ள கங்குவேலி சிவன்கோவிலின் வரலாறும், தொடர்புகளும், தமிழரின் ஆதிவரலாற்றை எடுத்தியம்பும் சான்றாக விளங்குகின்றது. ஈழத்திலே காணப்படும் அரசியல் நிலை காரணமாகத் தமிழ் மக்கள் பாதுகாப்புத் தேடி, காலத்திற்குக் காலம் தாம் வாழ்ந்த மண்ணை விட்டுச் செல்லும் நிலை அன்று தொட்டு இன்று வரை காணப்படுகின்றது. எனினும் அந்தந்தப் பகுதிகளிலே காணப்படும் ஆலயங்கள் இருந்தமைக்கான சான்றுகள், தமிழ் மக்கள் வாழ்ந்த நிலப்பிரதேசங்களைத் துல்லியமாக எடுத்தியம்பும் சான்றாக விளங்குகின்றது.


வர்த்தகநோக்கமாக இலங்கையுள் காலடி எடுத்துவைத்த அன்னியரும், மற்றும் இன அழிப்பைக் கருத்தில் கொண்டோரும், ஆலயங்களை அழிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்துள்ளனர். ஒரு இனத்தின் ஆணிவேராகக் கருதப்படும் தெய்வ நம்பிக்கையையும், அதனை ஊட்டும் ஆலயங்களையும் அழிப்பதன் மூலம் ஒரு இனத்தை, அதன் பண்பாடு, நாகரிகத்தைச் சிதைவுறச் செய்ய முடியும் என்பதில் மேற்கண்டோர் ஆர்வங்கொண்டிருந்தமையை வரலாறு தெளிவாக எடுத்தியம்பியுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் ஆலயங்கள் அழிக்கப்பட்டாலும், அவற்றின் சிதைவுகளும், வரலாற்று உண்மைகளும் இன்றுவரை அழியாது தமிழர்களின் தாயகத்தை உறுதி செய்வனவாகக் காணப்படுகின்றன. திருகோணமலை மாவட்டத்தில் அமைந்துள்ள பல ஆலயங்கள் இத்தகு பெருமையைப் பெற்றவையாகக் காணப்படுகின்றன. இவ்வாறான ஆலயங்கள் வரலாறு, புராணம், கல்வெட்டுக்கள் என பல சான்றுகளைத் தம்மகத்தே கொண்டவையாக விளங்குகின்றன. இவற்றுள் திருகோணமலை மாவட்டம், மூதூர்ப்பிரதேசம், ஆதியில் தமிழர்கள் வாழ்நத பூமியாக, சிறப்புற்றுக் காணப்பட்டதென்பதற்கு இப்பிரதேசத்திலுள்ள கங்குவேலி சிவன்கோவிலும் முக்கிய சான்றாக விளங்குகின்றது.

திருகோணமலைப் பட்டினத்திலிருந்து 23 மைல் தொலைவில் உள்ள மூதூர் பிரதேசம், கொட்டியாபுரப்பற்றிலுள்ளது. மூதூரிலிருந்து பதினாறு கிலோமீற்றர் தூரத்தில் கிளிவெட்டி என்ற சைவக் கிராமம் காணப்படுகின்றது. இங்கிருந்து மேற்கே செல்லும் பாதை வழியாகச் சென்று ஆறுகிலோமீற்றர் தூரத்திலுள்ள கங்குவேலி என்னும் இயற்கை எழில் சூழ் கிராமத்தை அடையலாம். கங்குவேலி என்னும் கிராமம், மகாவலி கங்கையை எல்லையாக உடைய கிராமமாகையால், கங்கைவேலி என அழகான தழிழ்ப் பெயரைக் கொண்டிருந்தது. காலக்கிரமத்தில் கங்கைவேலி என்ற பெயர் மருவி கங்குவேலி என்ற பெயர் நிலைப்பதாயிற்று. வேல் வந்து தங்கியதால் தங்குவேல் என்றிருந்து கங்குவேல் என மருவிப் பின் கங்குவேலி ஆயிற்று எனக் கூறுவாருமுளர்.

கொட்டியாபுரப்பற்றிலுள்ள கிராமங்களின் சரித்திரப்பின்னணிகளையும், இங்கிருந்து அழிந்துபோன ஆலயங்களின் வரலாறுகளையும் ஆராயும்போது, திருக்கரசையம்பதியை மத்தியநிலயமாகக் கொண்ட, தமிழ்மக்களால் பேணப்பட்ட ஒரு சைவ சாம்ராட்சியமே கோலோச்சித் திகழ்ந்து, காலகதியில் மறைந்துள்ளது. திருகோணமலை மாவட்டத்திலுள்ள கொட்டியாபுரப்பற்று, மகாவலிகங்கையினால் வளம்பெற்ற பிரதேசமாக விளங்குகின்றது. இப்பிரதேசத்திலே சிவாலயங்கள் பலவற்றைக்கொண்ட திருக்கரசையம்பதி, பண்டைக்காலத்தில் தமிழ் குறுநில மன்னர்களின் ஆட்சிக்கு உட்படுத்தப்பட்டிருந்தது. திருக்கரைசைப் புராணம் இச்செய்தியை விபரித்துள்ளது. கங்குவேலியில் பண்டைக் காலத்திலிருந்த சிவன்கோவில் அழிவுற்ற பின்னர், கிளிவெட்டியில் வாழ்ந்த சைவமக்கள் சுமார் இருநூறு வருடங்களுக்கு முன்னர், கங்குவேலியில் புதிய சிவன்கோவிலைக் கட்டியுள்ளார்கள். அயல்கிராமமாகிய மல்லிகைத்தீவு மக்களும் இந்தத் திருப்பணியிலே ஈடுபாடுகொண்டு கோவிலை ஆதரித்துப் பராமரித்து வந்தார்கள்.

வேதம் நான்கு வகைப்படும். அவை இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என அழைக்கப்படும். இருக்குவேதத்தில் இடம்பெறும் பாடல்களில் சிறப்பாகக் கருதப்படும், அகத்தியர் இயற்றிய நூல் அகத்தியம் என அழைக்கப்படும். தென்மதுரையிலே முச்சங்கம் அமைத்த 549 புலவர்களின் நூல்களில், அகத்தியமே சிறப்பு வாய்ந்த நூலாகக் கருதப்படுகின்றது. இதனை இயற்றிய அகத்திய முனிவர் ஈழத்திலுள்ள பல ஆலயங்களோடு தொடர்புடையவராகக் காணப்படுகின்றார். அகத்திய மாமுனிவர் திருக்கரசையம்பதியில் சிவலிங்கம் ஒன்றைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டதாகத் திருக்கரசைப்புராணம் சான்று பகருகின்றது.

*வளரும்...*

OM NAMO NARAYANA



125 வருட பாரம்பரிய காண்டம் நாடி ஜோதிடம்

N. P. ராஜசேகர்

Now In: 16 TREELINE COURT MARKHAM
L3S 3T8 CANADA
001 416 904 6278

அனைத்து நாடுகளில் இருந்தும் தொடர்பு கொள்ளலாம்

1வது காண்டம்: ஆண் வலது பெண் இடது கை பெருவிரல் ரேகை அல்லது ஜாதகத்தை கொண்டு ஜாதகம். பெயர் தாய், மனைவி, குழந்தைகள், சகோதர, சகோதரிகள் பொதுவான பலன் கூறுவது மற்றக் காண்டங்களை எடுக்க இந்தக் காண்டத்தை முதலில் அவசியம் எடுக்க வேண்டும்.

2வது காண்டம்: பணம், கண், குடும்பம், கல்வி, வாக்கு அதிர்ஷ்டகற்கள் முதலியவைகளைக் கூறுவது.

3வது காண்டம்: சகோதர, சகோதரிகளின் எண்ணிக்கை அவர்களால் ஏற்படும் நன்மை தீமைகளைக் கூறுவது.

4வது காண்டம்: தாயார், மனை, நிலங்கள், வாகனம் வாழ்க்கையில் அடையும் சுகங்கள் மற்றும் மகிழ்ச்சிகளைக் கூறுவது.

5வது காண்டம்: குழந்தைகளின் பிறப்பு. புத்திரர்களால் ஏற்படும் நன்மைகள் குழந்தைகள் இல்லாததற்குக் காரணமும் கூறுவது.

6வது காண்டம்: வாழ்க்கைகளில் ஏற்படும் விரோதி, வியாதி, கடன், வழக்கு, எதிரிகளால் ஏற்படும் தொல்லைகள் முதலியவைகளைக் கூறுவது.

7வது காண்டம்: திருமண வாழ்க்கை, திருமணக்காலம், திருமணத்தைப் பற்றிய சில அடையாளக் குறிப்புகள் திருமணக் காலத்தைக் கடந்த காரணம், பொதுவான பலன்களும், திருமணம் ஆகியிருந்தால் கணவன் (அ) மனைவியைப் பற்றி கூறுவது.

8வது காண்டம்: ஆயுள்கால நிர்ணயம், நடுநடுவே ஏற்படும் கண்டம் விபத்து முதலியவைகளைக் கூறுவது.

9வது காண்டம்: தகப்பனார், செல்வம், யோகம், ஆலயதரிசனம், தர்மம், குருவினிடத்து உபதேசம் பெறுதல் முதலியவைகளைக் கூறுவது.

10வது காண்டம்: தொழில், வியாபாரம், உத்தியோகம், எந்த வியாபாரம் அல்லது தொழில் செய்தால் அதிக நன்மை கிடைக்கும் என்பதைக் கூறுவது.

11வது காண்டம்: இலாபம் எந்தெந்த வகையில் கிடைக்கும் என்பதையும், 2வது திருமணம் அதனால் அடையும் நன்மைகளையும் கூறுவது.

12வது காண்டம்: செலவு எவ்வகையில் ஏற்படும் என்பதையும், மோட்சம் அடுத்த பிறவியில் பிறக்கும் இடம், வாழும் தன்மை வெளிநாட்டுப்பயணம் முதலியவைகளையும் கூறுவது.

பரிகார காண்டங்கள்

13வது சாந்தி காண்டம்: முற்பிறவியில் பிறந்த இடம், செய்த நன்மை, தீமை அதனால் தற்போது அனுபவிக்கும் கஷ்டங்கள் அதை நீக்குவதற்கு உரிய பரிகாரமும் முதலியவைகளைக் கூறுவது.

14வது கீட்சை காண்டம்: மந்திரம், எந்த மந்திரத் தாயத்து செய்து அணிந்து கொண்டால் தன்டைய காரியமும் குடும்ப காரியமும் வெற்றியடையும் என்பதைக் கூறுவது.

15வது ஔஷத காண்டம் : வியாதிகளுக்கு எந்த மருந்து அல்லது மூலிகை சாப்பிடலாம் என்பதையும், சாப்பிடும் வகைகளையும் பத்திரங்களையும் விபரமாகக் கூறுவது.

இவையன்னியில் ஞான காண்டமும், திசாபுத்தி காண்டமும், பிரச்சினை காண்டமும், மகாசிவ வாக்கியமும் உள்ளது

குறிப்பு : ஜாதகம் அல்லது பிறந்த குறிப்பு உள்ளவர்கள் அதை கொண்டு வருவது நலம்.

# இவ்வார ராசிபலன்

## 29-03-2024 வெள்ளி தொடக்கம் 04-04-2024 வியாழன் வரையும்




**மேஷம்:** பிரார்த்தனைகள் நிறைவேறும் வாரம். அயல்நாட்டுப் பயணம் உண்டு. அரசு வழியில் கவனம் தேவை. பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். பங்குச்சந்தை லாபம் தரும். ஆபரணச் சேர்க்கை உண்டு. இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பழையக் கடன் அடையும். திறமைகள் வெளிப்படும். சேமிப்பு பெருகும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொதுப்பணிகளில் ஆர்வம் கூடும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். எதிர்ப்புக்கள் குறையும். பழைய பகை தீரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் செலவுகள் உண்டு. லாபம் அதிகரிக்கும். வியாபாரத்தில் முன்னேற்றம் அடைவீர்கள். அரசு வழியில் கவனம் தேவை. பொறுமையாக செயல்பட வேண்டும். சந்தோஷம் அலைமோதும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகள் தவிர்க்கவும். ஏற்றுமதி தொழில் லாபம் கிடைக்கும். பெற்றோர்கள் உடல் நிலையில் கவனம் தேவை. வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். மனக்கசப்பு வந்து நீங்கும். பிள்ளைகளால் செலவுகள் ஏற்படும். புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். தொழில் அபிவிருத்தி அடையும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாசாணியம்மன், அதிர்ஷ்ட எண்: *2,4,9,6*

அதிர்ஷ்ட நிறம்: வாடாமல்லி, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: F,A




**ரிஷபம்:** காரியத்தில் வெற்றி காணும் வாரம். உள்ளம் மகிழும் காலம். பழைய பகை தீரும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். உறவினர் வழியில் தொல்லை உண்டு. வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். தைரியம் கூடும். காதல் கைக்கூடும். அடுத்தவர் பிரச்சனையில் தலையிடுவதை தவிர்க்கவும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். நலமே விளையும் வாரமாகும். பழைய பாக்கி வசூலாகும். திடீர் பயணம் உற்சாகம் தரும். பங்குச்சந்தையில் லாபம் கிடைக்கும். வயிறு சம்பந்தமான நோய் வந்து நீங்கும். வாக்குவாதத்தை தவிர்ப்பது நல்லது. பயணங்களால் பணம் கரையும். நினைத்த காரியம் நிறைவேறும். பெண்களுக்கு வேலை பளு அதிகரிக்கும். நல்லோர்களின் பாராட்டு கிடைக்கும். சுபச்செய்தி இல்லம் தேடி வரும். தேகப்பலம் கூடும். மனக்கசப்பு நீங்கும். இயற்கை காட்சிகளை கண்டு இன்புறுவீர்கள். பணநடமாட்டம் கூடும். வியாபாரத்தில் எதிர்பார்க்கும் லாபம் கிட்டும். சுபகாரியம் இல்லத்தில் இனிதே நடக்கும். கணவன், மனைவி உறவு மேம்படும். புதிய முதலீடு தவிர்க்கவும். சகோதரியினால் நன்மை உண்டு. பாக்கியவான்களை சந்திப்பீர்கள்.

வழிபட வேண்டிய தெய்வம்: காலபைரவர், அதிர்ஷ்ட எண்: *1,9,8,4*

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,Z




**மிதுனம்:** மனிதநேயம் மிகுதியாகும் வாரம். முகப்பொலிவு கூடும். கன்னிப்பெண்களின் விருப்பம் ஈடேறும். இல்வாழ்வில் இனிமை தரும். தென்றல் வீசும். எதிர்ப்புகள் விலகும். பெயர், புகழ், கௌரவம் செல்வாக்கு உயரும். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும். தொழிலில் முதலீடு செய்வதை தவிர்க்கவும். பதவி உயர்வு கிட்டும். மனக்கசப்பு நீங்கும். கணினி துறையில் ஊதிய உயர்வு உண்டு. தகுதிகள் மிகுதியாகும். குடும்பத்தில் மகிழ்ச்சிகள் கூடும். தனவரவு பெருகும். வீடு, மனை ஆசைகள் பூர்த்தியாகும். பிள்ளைகளால் மனக்கசப்பு வந்து நீங்கும். கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புக்கள் கிடைக்கும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். தொழில் அபிவிருத்தி அடையும். கணவன், மனைவி உறவு மேம்படும். சகோதரியினால் நன்மை உண்டு. கடன் சுமை குறையும். உளுந்து தானம் சிறந்த பலன் சேர்க்கும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய எண்ணங்கள் உருவாகும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். தொழில் முன்னேற்றம் ஏற்படும். தொலைபேசித் தகவல் மகிழ்ச்சி தரும். சொத்துக்களால் லாபம் கிடைக்கும். புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தாய்வழி உறவில் கவனம் தேவை. கலவரமான சூழ்நிலை காணப்படும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். வெகுமதி கூடும். மற்றவர்களால் மேன்மை உண்டு. வாகனத்தால் செலவு உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு.

வழிபட வேண்டிய தெய்வம்: பிள்ளையார், அதிர்ஷ்ட எண்: *9,5,4,1*

அதிர்ஷ்ட நிறம்: அரக்கு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: N,M




**கடகம்:** யோகமும், யாகமும் கலந்த வாரம். இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் தரும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் ஏற்படும். பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் தீரும். கல்வியில் கவனம் தேவை. பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் விலகும். ஆடம்பர பொருள் சேரும். உடல்சோர்வு ஏற்படும். குடும்ப மேன்மை உண்டாகும். பணத்தட்டுப்பாடு நீங்கும். வழக்குகள் வெற்றி தரும். திருமணத்தடை அகலும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். மனை வாங்கும் யோகம் உண்டு. மனக்கட்டுப்பாடு அவசியம். மாற்றத்தை விரும்புவீர்கள். தோற்றப் பொலிவு கூடும். ஏற்றங்கள் குறையும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபலங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். அரசு வகையில் ஆதாயம் கிட்டும். விவேகம் கை கொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும். காரியம் கைகூடும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். வணிகத்தொழில் விரிவடையும். கலைஞர்களுக்கு வாய்ப்புக்கள் தேடி வரும். ஆடம்பர நாட்டம் ஏற்படும்.

வழிபட வேண்டிய தெய்வம்: மாரியம்மன் அதிர்ஷ்ட எண்: *4,8,9,1*

அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K




ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

"ஜோதிட மகரிஷி"

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068 9940431377





**சிம்மம்:** விரக்திகள் மறையும் வாரம். திருப்தி ஏற்படும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். சுபச்செய்தி வரும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். முயற்சிகள் வெற்றி தரும். அணிகலன் சேர்க்கையுண்டு. ஆடம்பர எண்ணம் அலைமோதும். சிந்தனைகள் மேலோங்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி ஏற்படும். ஏஜென்ஸ் தொழில் ஏற்றம் தரும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. உறவுகளால் செலவு அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. அயல்நாட்டுப் பயணம் உண்டு. மற்ற இனத்தவரால் நன்மை உண்டு. தொழில் லாபம் உண்டு. பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. பங்குச்சந்தையில் கவனம் தேவை. கடன் வாங்க நேரிடும். அடுத்தவர் தலையீட்டை தவிர்க்கவும். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். பெற்றோர் வழியில் பிரியம் கூடும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். உடல்பொலிவு கூடும். கர்மவினைகள் அகலும். பெண்களுக்கு கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். தொழில் லாபம் தரும். முன்கோபம் தவிர்க்கவும். வர்த்தக தொழில் லாபம் தரும். பிரச்சனை முடிவுக்கு வரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீபால் முனீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: *9,7,1,2*

அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T




**கன்னி:** புத்துணர்வோடு செயல்படும் வாரம். சொத்து சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புகள் உருவாகும். மேலதிகாரியின் பாராட்டு கிடைக்கும். வாழ்த்துக்கள் வந்து சேரும். வெளிநாட்டுத் தொடர்பு ஏற்படும். திறமையால் பெருமை சேரும். பேச்சில் இனிமை கூடும். கலைத்துறையில் நிலை உயரும். சான்றோர்களின் சந்திப்புக் கிட்டும். உடல்நலம் சீராகும். அந்தஸ்து உயரும். பொருள் இழப்பு ஏற்படும். சகோதரியால் அனுகூலம் உண்டு. பொறாமைகள் விலகும். ஆபரணச்சேர்க்கை உண்டு. கடன் சுமை அதிகரிக்கும். காரியத்தடைகள் ஏற்படும். உறவினர்களால் நன்மை உண்டு. எதிரிகளால் தொல்லை உண்டாகும். கமிஷன் தொழில் திருப்தி தரும். வாகன மாற்றம் உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. தான தர்மங்கள் பலன் தரும். குடும்ப கௌரவம் உயரும். மறைமுக எதிர்ப்பு விலகும். கவலைகள் ஒழியும். தகுதிகள் உயரும். தனலாபம் கூடும். வறுமைகள் ஒழியும். பாராட்டுப் பெறுவீர்கள். பாதகமான சூழ்நிலை விலகும். உடல்நலம் கவனம் தேவை. பிள்ளைவழிச் செலவுகள் அதிகரிக்கும். ஆபரணச்சேர்க்கை ஏற்படும். மனோதைரியம் அதிகரிக்கும். நீண்டநாள் ஆசை நிறைவேறும். தொழில் லாபம் தரும். விருந்தினர் வருகை உண்டு. மெத்தனப் போக்கு மாறும்.

வழிபட வேண்டிய தெய்வம்: வனதேவதை, அதிர்ஷ்ட எண்: *6,8,9,1*

அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: G,J




**துலாம்:** வருமானமும், வெகுமானமும் சேரும் வாரம். கலை ஈடுபாடு அதிகரிக்கும். பயணம் அனுகூலம் தரும். மெத்தனப் போக்கு விலகும். திட்டங்கள் நிறைவேறும். வெளியூர் பயணம் உண்டு. நீண்ட நாள் கனவு நிறைவேறும். புதிய நட்பு உருவாகும். மற்றவர் உதவி கிட்டும். மனக்குழப்பம் நீங்கும். திடீர் லாபம் உண்டு. திருமண வாய்ப்பு கூடி வரும். பேச்சில் நிதானம் தேவை. ஞாபக மறதி ஏற்படும். சொத்துச் சேர்க்கை உண்டு. புதிய தொழில் வாய்ப்பு உருவாகும். வெளிநாட்டுப் பயணம் உண்டு. தன வரவு உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். உத்தியோக உயர்வு கிட்டும். குழந்தைகளால் பெருமை சேரும். வாழ்த்துக்கள் வந்து சேரும். பொருளாதார வளம் சேர்க்கும். பழையக் கடன் வசூலாகும். உறவினர் வழியில் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களால் அலைச்சல் உண்டு. எண்ணிய காரியம் கைகூடும். புண்ணிய ஸ்தலம் செல்வீர்கள். குடும்பத்தில் அமைதி பெருகும். பொருளாதார மேன்மை உண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். தனவரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புக்களை எதிர்பார்க்கலாம். கருத்து வேறுபாடுகள் அகலும். இடமாற்றம் உண்டு. தொழில் வளம் கூடும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கற்பகமூர்த்தி, அதிர்ஷ்ட எண்: *4,9,2,1*

அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,P




**விருச்சிகம்:** சுபவிரயம் ஏற்படும் வாரம். தொழில் வளம் கூடும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன் பிறப்புக்களால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். நிர்வாகச் செலவுகள் கூடும். இஷ்ட தெய்வங்களால் கஷ்டங்கள் மாறும். பாராட்டுக்கள் கிடைக்கும். நண்பர்களால் செலவு அதிகரிக்கும். உடல் அசதி ஏற்படும். உடன்பிறப்பால் உதவி உண்டு. படிப்பில் கவனம் தேவை. திடீர் பயணம் உண்டு. முதுகில் வலி வந்து போகும். மனபயம் ஏற்படும். உறவினர்களால் அலைச்சல் உண்டு. சம்பள உயர்வு கிட்டும். சக ஊழியர்கள் உதவி உண்டு. வியாபாரம் செழிக்கும். பொறுப்புக்கள் கூடும். கூட்டுப் பிரார்த்தனை மாற்றம் தரும். அனுகூலமான தருணம். சந்தோஷம் அதிகரிக்கும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். முயற்சிகள் வெற்றி கிட்டும். குடும்ப ஒற்றுமை அதிகமாகும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். உறவினர்களால் அனுகூலம் உண்டு. அரசு வகையில் ஆதாயம் உண்டு. நிர்வாகத்தில் நிதானம் தேவை. காதல் கைகூடும். விவாகம் முயற்சி தரும். வியாபாரத் தடை ஏற்படும். வீண் வம்பு அகலும். ஆரோக்கியம் கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்வர்ண தேவதை, அதிர்ஷ்ட எண்: *9,5,4,3*

அதிர்ஷ்ட நிறம்: ஆழ்ந்த சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,W

**(தொடர்ச்சி *29* பக்கம்)**

# 5ஆம் உலகத் திருக்குறள் மகாநாடு எப்பரல் 5 – 7, 2024 சிக்காக்கோ

எதிர்வரும் 5,6,7 ஆம் திகதிகளில் சிக்காக்காக்கோ நகரில் இடம்பெறுகின்றது. உலகின் பலபாகங்களில் இருந்து தமிழறிஞர்கள் கலந்துகொண்டு கட்டுரைகளை சமர்ப்பிக்க உள்ளன. இம்மகாநாட்டில் பிரபல பட்டிமன்றப் பேச்சாளர் சொலமன் பப்பையா, பிரபல பின்னணி இசையமைப்பாளர் ஜேம்பன் உட்பட கல்வேறு பிரபலங்களோடு முக்கிய பல்கலைக்கழகங்களின் பேராசிரியர்களும் கலந்துகொள்கின்றார்கள்.

உலகெங்கிலிருந்தும் இருந்து திருக்குறள்பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் பெறப்பட்டு நூலுருவாக்கம் பெற்றுள்ளதோடு பல கட்டுரைகள் மகாநாட்டில் ஆய்வறிஞர்களால் முன்னிலைப்படுத் தப்படவும் உள்ளன. கனடாவில் இருந்து முன்னைநாள் பேராசிரியர் கலாநிதி நா. சுப்பிரமணியன், கலாநிதி திருமதி. கௌசல்யா சுப்பிரமணியன், கலாநிதி திருமதி. செல்வம் ஸ்ரீதாஸ், திரு. சின்னையா சிவனேசன், திரு. த. சிவபாலு, திரு. குமார் புனிதவேல் ஆகியோரின் 7 கட்டுரைகள் மகாநாட்டில் சமர்ப்பிக்கபடத் தேர்வாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதில் திரு. த. சிவபாலுவின் வள்ளுவரின் சிந்தனைகளும் கனடாவின அரசியலமைப்பும், மகாகியவல்லியின் அரசயில் சிந்தனைகளும்வள்ளவரின் அரசியல் கோட்பாடுகளும் என்னும் இரு கட்டுரைகளும் இடம் பெறுகின்றது என அறியக்கிடக்கின்றது. திரு. சின்னையா சிவனேசன் மற்றும் திரு குமார் புனிதவேல் இருவரும் ஆங்கிலத்தில் தங்கள் கட்டுரைகளைச் சமர்ப்பித்துள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

உலக அரங்கில் திருக்குறளை எடுத்துச் செல்லவேண்டும் என்னும் உயரிய நோக்கில் உலக திருக்குறன் மகாநாட்டுக் குழு இதனை மேற்கொண்டுள்ளதோ, இந்த மூன்றுநாட்கள் இடம்பெறும் மாகாநாட்டில் மாணவர்களின் உரைகள், நாடகங்கள், இசை, நடன நிழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளன. கனடாவில் இருந்தும் இந்து மகாநாட்டில் கலந்துகொள்ள தமிழார்வலர்கள் செல்ல உள்ளார்கள்.

திருக்குறள் மகாநாடு தொடர்ந்து பல்வேறு நாடுகளில் இடம்பெற உள்ள நற்செய்தியையும் திருக்குறள் மகாநாட்டுக் குழு அறிவித்துள்ளது.

பரந்த பொருளெல்லாம் பாரறிய வேறு
தெரிந்து திறந்தொறுஞ் சேரச் - சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல்
வல்லாரார் வள்ளுவரல் லால்.

என சங்க இலக்கியப் புலவரான அரிசில் கிளார் பாடியிருப்பது வள்ளுவத்தின் சிறப்பை படம்பிடித்துக்காட்டுகின்றது. சுருங்கச் சொல்லி பல்வேறு கருத்தாளம் தொட்டவர்கள் வள்ளுடுவனைப்போல் யாரும் இல்லை என்பது பல்வேறு அறிஞர்களால் விதந்துரைக்கப்பட்டுள்ளது மட்டுமல்ல தமிழுக்கு சிறப்புத் தருவதாகவும் உள்ளது. வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ் நாடு எனப் புகழ்ந்து பாடிய திருக்குறள் உலகெங்கும் பரந்து புகழ்க்கொடி நாட்டுவதற்கான முயற்சியை உலகத் திருக்குறள் மகாநாடுகள் கருப்பொருளாகக் கொண்டுள்ளன என்பது அதன் தொனிப்பொருளாக உள்ளது.

## JOB POSTING : Psychotherapist/Manager

Reporting to: Executive Director

Full Job Description:

Join the team at Vasantham - A Tamil Mental Wellness Centre, a non-profit organization dedicated to serving the Tamil community in the GTA since 1999. We are currently seeking a full-time position (as a combined qualification for a parttime psychotherapist and a part time Manager.) Some evening weekend work is expected) for one year with possible extension.

Position Overview:

We are seeking a dedicated Substance-Addiction therapist/Manager to join our dynamic team.

The successful candidate will play a pivotal role in delivering high-quality addiction counseling services while also overseeing the coordination and management of all activities of Vasantham daily. A Friday, Saturday and some evening inclusive schedule is expected. A Part-time in person psychotherapist may also be considered with commitment to some weekdays, evening and Saturdays with minimum three years' work experience with Addiction and trauma counselling.

If you are passionate about making a difference and thrive in a collaborative environment,
Vasantham offers an excellent opportunity for career growth. We encourage dedicated individuals to apply.

Location: Mid-Scarborough Hub
2660 Eglinton Ave E, Scarborough, ON M1K 253

Our Values:
At Vasantham, we uphold human rights and diversity. We do not tolerate discrimination of any kind towards clients or staff based on ancestry, family status, disabilities, socioeconomic status, sex, gender identity and expression, or sexual orientation.

Job Type: Full-time position for 1 year
Possible extension
* Referral Needed
Deadline: 02 April 2024 5.00 pm. No phone calls regarding the Job advertisement, please.
Apply: info@vasantham.ca

How to Apply:
Please submit your application to info@vasantham.ca. For more information about Vasantham and our initiatives, visit www.vasantham.ca.

*Join us in making a positive impact on the mental wellness of our community.
Apply now!

# இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** பொறுப்புக்களும், சிறப்புக்களும் சேரும் வாரம். திட்டம் வெற்றி பெறும். ஸ்திர சொத்துக்கள் சேரும். தெய்வீக ஈடுபாடு அதிகரிக்கும். முயற்சிகள் பலன் தரும். உங்கள் தனித்தன்மை வெளிப்படும். சுயநலம் கூடும். காரியங்களில் வெற்றி காண்பீர்கள். கணவன், மனைவி அன்யோன்யம் கூடும். ஆபரணச் சேர்க்கையுண்டு. பயணம் அனுகூலம் உண்டு. பங்குச் சந்தை லாபம் உண்டு. கனவுகள் நிறைவேறும். தாய் நலனில் கவனம் தேவை. எள் தானம் ஏற்றம் தரும். கவனமுடன் செயல்பட வேண்டும். வழக்குகள் சாதகமாகும். தாய் நலனில் கவனம் தேவை. புதிய எண்ணம் நிறைவேறும். நிதிப்பற்றாக்குறை நீங்கும். இடமாற்றம் ஏற்படும். வியாபாரம் சிறக்கும். பணப்பிரச்சனை தீரும். அலைச்சல் அதிகரிக்கும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளித்தால் யோக பலன் கூடும். பொருளாதாரம் உயரும். வேலை வாய்ப்பு கூடும். வேற்று மனிதரால் லாபம் உண்டு. மாற்று யோசனை பலன் தரும். ஆரோக்கியம் கூடும். அணிகலன் சேரும். அன்யோன்யம் கூடும். வருத்தங்கள் மறையும். திருத்தமான முடிவு ஏற்படும். பொறியியல் துறை லாபம் தரும். பேச்சுத்திறமை அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். சகோதர உதவி கிட்டும். மனைவியின் பிரார்த்தனை மாற்றம் தரும். சுறுசுறுப்பு அதிகமாகும். எதிரிகள் ஏமாற்றம் அடைவர்.
வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 8,4,2,3
அதிர்ஷ்ட நிறம்: சிவப்பு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,U




**மகரம்:** உதவியும், பதவியும் கிடைக்கும் வாரம். கடுமையான காலம். கட்டிடத்தொழிலில் கவனம் தேவை. புதிய முதலீடு உருவாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கௌரவம் உயரும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளி நிலை மாறும். பெண்வழிப் பிரச்சனை முடிவுக்கு வரும். முன்னேற்றம் அதிகரிக்கும். முத்தான வாய்ப்புகள் பெருகும். மனைவியின் மருத்துவச் செலவு உண்டு. விரக்திகள் மறையும். வினோதமான எண்ணங்கள் விலகும். பெற்றவர்கள் பாராட்டு கிட்டும். பிள்ளைகளின் தொல்லை அதிகரிக்கும். புதிய முயற்சி பலன் தரும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பண வரவு உண்டு. சகோதர வகையில் சச்சரவு ஏற்படும். நட்டம் இல்லாத காலம். பட்டம் பதவி வந்து சேரும். வெளி வட்டாரப் பழக்கம் அதிகமாகும். தேக ஆரோக்கியம் கூடும். வேலையாட்களிடம் கவனம் தேவை. மாற்று இனத்தவரால் ஆறுதல் அதிகரிக்கும். சாதனையான எண்ணங்கள் உதயமாகும். எதிர்கால எண்ணம் நிறைவேறும். மற்றவர்களிடத்தில் மரியாதை உயரும். பெற்றோர்களின் பாராட்டு கிடைக்கும். புதிய நண்பர்களால் தகுதி மேம்படும். வரவு திருப்தி தரும். நீண்ட நாள் கனவு நிறைவேறும். கால்நடைகளால் பலன் உண்டு. ஸ்டேஷனரி தொழில் லாபம் தரும். பிள்ளைகளால் செலவு அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். மனச்சஞ்சலம் ஏற்படும். பகையாளியிடம் எச்சரிக்கை தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: பராசக்தியம்மன், அதிர்ஷ்ட எண்: 5,9,3,2
அதிர்ஷ்ட நிறம்: குங்குமகலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: K,D




**கும்பம்:** வெளியூர் பயணம் லாபம் தரும் வாரம். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். கலைத்தொழில் கவனம் தேவை. மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். பாதகமான சூழ்நிலை அகலும். பக்குவமான பேச்சு பயன் தரும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். நல்லோர்களின் வாழ்த்து அதிகரிக்கும். அரிசி தானம் ஆயுள் விருத்தி தரும். துணிவோடு செயல்படுவீர்கள். புதிய முதலீடு லாபம் தரும். நண்பர்களின் உதவி கிடைக்கும். பழைய பாக்கி வசூலாகும். இரும்பு தொழில் ஏற்றம் தரும். விளையாட்டு துறை லாபம் தரும். வீண் வம்பு உருவாகும். தாய் வழி உறவில் கவனம் தேவை. பெரியோர்களை அனுசரித்து செல்வது நல்லது. உறவினர்கள் உதவி செய்ய முன் வருவர். எதார்த்தமாக செயல்படவும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். பூமி வாங்கும் யோகம் உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. ஏற்றுமதி தொழில் லாபம் தரும். நினைத்த காரியம் நிறைவேறும். உறவினர் வருகை உற்சாகம் தரும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். எதிர்பார்ப்புகள் குறையும். குடும்ப அன்யோன்யம் அதிகரிக்கும். வழக்கு முடிவுக்கு வரும். தொழில் லாபம் பெருகும். பணியில் கண்டிப்பு அவசியம். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். புதிய சிந்தனை உருவாகும். மாணவர்கள் கல்வியில் சிறப்பார்கள். சிரமப்பட்ட காரியங்கள் நிறைவேறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அண்ணாமலையார், அதிர்ஷ்ட எண்: 4,9,5,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: O,W





**மீனம்:** இழந்த செல்வம் திரும்ப கிடைக்கும் வாரம். பிரியமானவர்களால் செலவு அதிகரிக்கும். விளையாட்டில் கவனம் தேவை. புது முயற்சிகளை தள்ளிப் போடவும். நல்ல சம்பவங்கள் நடைபெறும். இரும்புத்தொழில் ஏற்றம் உண்டு. புதிய பொருள் சேர்க்கையுண்டு. தெய்வ நம்பிக்கை கூடும். இல்லத்தில் மேன்மை ஏற்படும். வாயில் தேடி வரன் வரும். பணமும், பாராட்டும் சேரும். மங்கல செய்தியால் மனம் மகிழும். விலகி சென்றவர் விரும்பி வருவர். கனவுகள் பலிதமாகும். மருத்துவச் செலவு குறையும். கணவன், மனைவி அன்பு அதிகரிக்கும். கனிவான பேச்சு அவசியம். ஆண்களுக்கு அதிகாரம் உயரும். மறைமுக எதிர்ப்புகள் உருவாகும். உழைப்பிற்கேற்ற பலன் கிடைக்கும். கலைஞர்களுக்கு கௌரவம் கூடும். பயணங்களால் பலன் தரும். ஆரோக்கியத்தில் அக்கறை தேவை. தொட்டது துலங்கும் காலம். தாராளமான தனவரவு உண்டு. குழப்பங்கள் நீங்கும். வழக்குகள் சாதகமாகும். வீண் வம்புகள் அகலும். குடும்ப விஷயத்தில் கவனம் தேவை. வழக்கமான பணியில் மாற்றம் ஏற்படும். தாய் வழி உறவில் கவனம் தேவை. கடன் சுமை குறையும். நூதன பொருள் சேர்க்கையுண்டு. வீட்டுத் தேவைகள் பூர்த்தியாகும். புதிய வேலை வாய்ப்பு கிட்டும். பிள்ளைகளால் தொல்லைகள் அகலும். இடமாற்றத்தால் நன்மை உண்டு. திருமண முயற்சி பலன் தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சூரிய பகவான், அதிர்ஷ்ட எண்: 3,5,9,7
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: M,F

# வீணைமைந்தன் என்னும் கனடா வாழ் ஈருடகவாசியின் இரை மீட்டல்

பிரிவேக்கக் குறிப்புகள் இவை. முதலாம் தலைமுறைப் புலம்பெயரி ஒருவரின் பிரிவேக்கக் குறிப்புகள் (nostalgia). புலம்பெயரும் போது, தான் விட்டுப் பிரிந்த ஊரின் அதே நினைவுகளோடு முதலாம் தலைமுறைப் புலம் பெயரியான வீணை மைந்தன் நாடு திரும்புகிறார். வடக்கின் மிகப்பெரிய படைத்தளம் ஒன்றின் சிறு பகுதியாக்கப்பட்டு, சிதைந்து போய்க் கிடக்கின்றது அவருடைய தாய்ப் பட்டினம், காங்கேசன் துறை.

அவருடைய ஊர் மட்டுமல்ல எல்லாத் தமிழர்களின் ஊர்களும் அப்படித்தான்.மீளக் குடியமர வரும்போது ஊரின் உருவமே மாறியிருக்கும்.போர் கிராமங்களின் புவியியல் அமைப்புகளை மாற்றியமைத்து விட்டது. ஒரு கிராமம் அதன் இயல்பான வளர்ச்சி போக்கில் படிப்படியாகக் கட்டியெழுப்பிய தனியார் கட்டடங்கள் பொதுக் கட்டடங்கள், வேலிகள், எல்லை மதில்கள், தெருக்கள், கிணறுகள், வாய்க்கால்கள் அனைத்தையுமே ஒரு படை நடவடிக்கை சிதைத்து விடுகிறது. நிலத்தைக் கைப்பற்றிய படை தனது ராணுவ நோக்கு நிலையில் இருந்து கிராமங்களை ஒரு புதிய ஒழுங்குகள் கொண்டு வருகிறது.



அந்த ஊரில் இயல்பாகத் தோன்றிய வீதிகளும் வேலிகளும் கட்டமைப்புகளும் சிதைக்கப்பட்டு அவை ஒரு பெரிய ராணுவ குடியிருப்பின் பகுதிகளாக மாற்றப்படுகின்றன. ஒரு மிகப்பெரிய ராணுவ வேலிக்குள் விழுங்கப்பட்ட சிறிய கிராமமானது அதன் புவியியல் தனித்துவத்தை, நூதனத்தை, இயல்பை இழந்து விடுகிறது. வீணை மைந்தனின் ஊருக்கும் அதுதான் நடந்தது.

எல்லா மீளக் குடியமரிகளுக்கும் அது ஒரு பொதுவான அனுபவம். ஊருக்கு திரும்பும் பொழுது வீடு இருந்த இடத்தில் ஒரு கற்குவியல் இருக்கும். அல்லது ஒரு படைத் தளபதியின் பணிமனையாக, வசிப்பிடமாக வீடு மாற்றப்பட்டிருக்கும். அல்லது வீடு இருந்த இடத்தில், ஒரு அகற்றப்பட்ட காவலரணின் மிச்சங்கள் சிதறிக் கிடக்கும். வேலி அல்லது சுற்றுமதில் இருக்காது. வீதி இருந்த இடத்தில் ஒரு மைதானம் இருக்கும். மைதானம் இருந்த இடத்தில் ஒரு பயிற்சித் தளம் இருக்கும். கிணறு இருந்த இடத்தில் வேறு ஏதோ ஒன்று இருக்கும். கோயில் இருந்த இடத்தில் ஒன்றுமே இராது அல்லது சில சமயம் ஒரு புத்தர் சிலை இருக்கும். சில சமயம் வீடு இருக்காது ஆனால் இடம்பெயரும் போது வீட்டைப் பூட்டி எடுத்துக் கொண்டு வந்த திறப்பு மட்டும் கையில் இருக்கும்.

சில அல்லது பல ஊர்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு எல்லைகள் மாற்றப்பட்டு ஒரு பெரிய படைத்தளத்தின் பகுதியாக மாற்றப்பட்டிருக்கும். ஊர்களின் பெயர்ப் பலகைகள் இருந்த இடத்தில், இன்ன படைத்தளத்துக்கு அல்லது இன்ன படைப்பிரிவுக்கு போகும் வழி என்று கூறும் குறிகாட்டிப் பலகை இருக்கும். அதாவது ஊர்களுக்கும் தெருக்களுக்கும் ராணுவப் பெயர்கள் கிடைத்திருக்கும். மிஞ்சிய வேலிகளில் ஜி.பி.எஸ். குறியீடு இருக்கும்.

அப்படித்தான் வீணை மைந்தன் ஊருக்குத் திரும்பியபொழுது அவருடைய கிராமமும் இருந்தது. ஏற்கனவே பிரிவேக்கம் (nostalgia). தாகத்தோடு ஊரைப் பார்க்க வந்தவருக்கு உருமாறிய சிதைந்த ஊர்தான் காணக் கிடைக்கின்றது.

அது ஒரு சாதாரண ஊர் அல்ல. ஈழத் தமிழர்களின் அரசியல் பொருளாதார வாழ்வில் அதற்கு மகத்தான இடம் உண்டு. காங்கேசன் துறை. அதற்கு ஓர் ஐதீக முக்கியத்துவம் உண்டு. தவிர வங்கக் கடலில் அருகருகே அமைந்திருந்த காங்கேசன் துறைமயிலிட்டிப்பருத்தித் துறை ஆகிய மூன்று துறைமுகங்களும், போருக்கு முந்திய காலங்களில்,முழு இலங்கை தீவினதும் மீன் உற்பத்தியில் 45 விகிதமான உற்பத்தியை வழங்கின. ஆனால் இன்று காங்கேசன் துறைப் பட்டினமே பொலிவிழந்து காணப்படுகின்றது.

அத்துறைமுகப் பட்டினத்தில் என்னென்னவெல்லாம் இருந்தன்யார் யாரெல்லாம் பேரோடும் புகழோடும் இருந்தார்கள்என்றெல்லாம் நினைந்து நினைந்து வீணை மைந்தன் துயருறுகிறார். அவர் விட்டுப் பிரிந்த ஊர் இப்பொழுது இல்லை. அவர் விட்டுப் பிரியும் போது இருந்த மனிதர்களும் பெரும்பாலும் இப்பொழுது இல்லை.

இப்பொழுது அவர் ஒரு ஈருடக வாசி (Amphibian). பெரும்பாலான முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகள் அப்படித்தான். விட்டுப் பிரிந்த தாயகத்துக்கும் குடியேறிய புதிய நாட்டுக்கும் இடையே இரண்டாகக் கிழிபடும் ஒரு தலைமுறை.அந்த பிரிவேக்கந்தான் ஈழப் போரின் நிதி ஊக்கமாகவும் இருந்தது. இப்பொழுதும் தமிழரசியலில் அது நிதியூக்கந்தான்.

வீணை மைந்தனைப் போல பல ஈருடக வாசிகளான முதலாம் தலைமுறைப் புலம் பெயரிகள் கிராமங்களுக்கு திரும்பி வருகிறார்கள். தாம் பிறந்து வளர்ந்த கிராமத்தில் தங்கள் உயிரை விட ஆசைப்படுகிறார்கள். ஆனால் அவர்களில் பலர் இப்பொழுது நடுத்தர வயதையும் கடந்த முதியவர்கள். அவர்கள் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் அவர்கள் அனுபவிக்கும் மருத்துவ வசதிகளை அவர்கள் இலங்கையில் கற்பனை செய்ய முடியாது. தங்களுடைய பிள்ளைகள் பேரப்பிள்ளைகளிடமிருந்து தங்களைப் பிடுங்கிக் கொண்டு ஊருக்குத் திரும்பவும் முடியாது.

எனினும் ஊருக்கு வருகிறார்கள். பழைய நினைவுகளை இரை மீட்கிறார்கள். குளிர் காலங்களில் புலம்பெயரும் ஈருடகப் பறவைகள் அவர்கள். அப்படி ஒரு ஈருடகப் பறவையின் பிரிவேக்கக் குறிப்புகளின் தொகுப்பே இந்நூல்.

வீணை மைந்தன் ஊருக்கு திரும்பி, ஒரு புதிய வீட்டைக் கட்டத் தொடங்க, பலாலி விமான நிலையத்தில் மீண்டும் விமானங்கள் பறக்கத் தொடங்கி விட்டன.காங்கேசன் துறைமுகத்தில் இருந்து காரைக்காலுக்கு ஒரு படகுச் சேவை தொடங்கியது.பின் நிறுத்தப்பட்டது. இனிவரும் காலங்களில் அது மீண்டும் தொடங்கக்கூடும்.

காங்கேசன் துறை எனப்படுவது வட பிராந்திய படைத்துறைக் கட்டமைப்பின் பிரதான துறைமுகங்களில் ஒன்று.வட கட்டளைப் பீடத்தின் இதயத்தில் ஒரு வான் வாசலையும் கடல் வாசலையும் திறப்பது என்பது அதன் விளைவுகளின் அடிப்படையில் கூறின் ராணுவ மயநீக்கந்தான். அப்படிப் பார்த்தால் காங்கேசன் துறையிலிருந்தும் பலாலியிலிருந்தும் இரண்டு பயண வழிகள் தமிழகத்தை நோக்கித் திறக்கப்படுவது என்பது இலங்கை அரசாங்கத்திற்கு விருப்பமான ஒன்றாக இருக்குமா? அதிலும் குறிப்பாக இந்தியப் பொருளாதாரத்தின் பிரம்மாண்டமான வளர்ச்சியின் ஒரு பகுதியாக தமிழகப் பொருளாதாரம் வேகமாக வளர்ந்து வரும் ஒரு பின்னணியில், இவ்வாறு இரண்டு வழிகளின் மூலம் வடபகுதியானது தமிழகத்துடன் பிணைக்கப்படுவது, எதிர்காலத்தில் என்ன விளைவுகளை ஏற்படுத்தும்?

பலாலி விமான நிலையமும் காங்கேசன் துறைமுகமும் யாழ்ப்பாணத்தின் சர்வதேச வாசல்களாக விஸ்த்தரிக்கப்படுமாக இருந்தால், வீணை மைந்தனின் தாய்ப் பட்டினமான காங்கேசன் துறை அது இழந்த செழிப்பை மீண்டும் பெறும்.

**- யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன்**
**பங்குனி 2024, யாழ்ப்பாணம்.**

## உயிர்த்தெழுந்த ஞாயிறு

பாரினில் தோன்றிய பரிசுத்த பிரானை
பாவிகள் சேர்ந்து படுகொலை செய்தனர்
ஊரினில் உபதேசம் செய்த உத்தமனை
ஊழல் பேர்வழிகள் ஒன்றாய்க் கூடியே

பாரிய குற்றம் பிதாமேல் சுமத்தியே
பாதக நண்பனின் பக்கத் துணையுடன்
காரியம் ஆற்றியே கடுமையாய்த் தாக்கினரே!
கருணை இல்லாக் கொடுமையில் வீழ்ந்தாரே!

செய்யாக் குற்றத்தால் சித்திரவதைப் பட்டும்
சித்தம் கலங்காத் திடமாய் நின்றார்
பொய்யாய்ப் பலவிதப் பழிகளைச் சுமத்தினும்
பதிலேதும் சொல்லாப் பதுமையாய் இருந்தார்

மெய்நோகக் கடுமையாய் மேனியில் தாக்கினும்
மனது நொந்து மறுமொழி பேசவில்லை
தெய்வமே பொறுத்திடாச் செயலைச் செய்யினும்
தன்னிலை தளராத் தாங்கிக் கொண்டாரே!

முள்முடி தரிக்க மூடர் சொல்லியும்
மரச்சி லுவையைத் தோளிலே சுமந்தும்
தள்ளாடி நடந்து தடுக்கி வீழ்ந்தும்
தயங்கிடா இட்டபணி தவமாய்ச் செய்தார்

வெள்ளை மனது வழுவிலா வரதனை
வீணர் வீணாய் வெட்டி வீழ்த்தினர்
உள்ளம் குமுறி ஊரார் அழுதிட
ஊமையாய் இருந்து உயிர்வதைப் பட்டாரே!

சிவப்பு அங்கியால் சித்தனை மூடியே
சவுக்கால் அடித்துத் தரையிற் சாய்த்தனர்
தவமாய் வாழ்ந்த தருமச் சீலனை
சிலுவையில் அறைந்து சீவனைப் போக்கினர்

கல்லறை வைத்துக் கல்லால் மூடியும்
கர்த்தர் கண்விழித்து மூன்றாம் நாளில்
கலேலாயா நோக்கிக் கடுகிச் செல்கையில்
காட்சி கொடுத்தார் கண்ணிய மாதர்க்கே

நாற்பது நாட்கள் பேதுறுடன் தங்கியே
நன்றாய்த் தான்யார் என்பதை நிறுவியே
போற்றுதற் குரிய புண்ணிய சீலன்
பரலோகம் நோக்கிப் பிரியமாய்ச் சென்றார்

உத்தமனாய் வாழ்ந்து உலகிற்காய் மரித்து
உயிர்த்து எழுந்த உன்னத நாளில்
சத்தியம் காத்துச் சகோதரப் பாசத்தில்
சித்தம் நிறைவாய்ச் சிறப்பொடு வாழ்வோமே!

**ஆக்கம் ... பாவலர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**

MORTGAGE FINANCIAL SOLUTIONS

RESIDENTIAL  COMMERCIAL  INDUSTRIAL  VACANT LAND  CONSTRUCTION




NESAN Subramaniam 416-908-5656

Our Services

• 1st & 2nd Mortgages • Purchase • Refinance • Renewal • Switches • Equity Line of Credit
• Pre-approvals • Self-employed • Multi-rental properties • New immigrants

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
Canada

www.nesan.ca

WE DEAL WITH ALL BANKS

Powered By

Mortgage Alliance — RightBroker = RightMortgage — Brokerage #10330 / Licence # M15001465

Scotiabank · TD Canada Trust · National Bank · First National Financial LP · MCAP · Home Trust · Equitable Bank · RFA · radius financial · RMG mortgages












26ம் ஆண்டில்...
26 years of publishing
www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

உதயம் 1460 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday March 29, 2024


## கனடாவில் தமிழர்களால் நிறைந்து வழிந்த "சொற்கோ வி. என். மதிஅழகன்" நூல் அறிமுக விழா



கனடா- ஸ்காபுறோ நகரில் கடந்த சனிக்கிழமை 23ம் திகதி நடைபெற்ற "சொற்கோ வி. என். மதிஅழகன்" நூல் அறிமுக விழா கனடா தமிழ் எழுத்தாளர் இணையத்தின் ஏற்பாட்டில் நடைபெற்றது. இணையத்தின் தலைவர் அகணி சுரேஸ் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்த அறிமுகவிழா. தமிழர்களால் நிறைந்து வழிந்த ஒன்றாக வெற்றிகரமாக நடைபெற்று முடிவுக்கு வந்தது.

கனடாவில் வாழும் தமிழர்கள் மத்தியில் உள்ள ஊடகவியலாளர்கள். நடன இசை ஆசிரிய ஆசிரியைகள் கலை இலக்கிய நண்பர்கள். கல்வியாளர்கள். பேராசிரியர்கள் நண்பர் மானிப்பாய் இந்துக் கல்லூரி பழைய மாணவர்கள் வர்த்தகப் பெருமக்கள் உட்பட 500க்கும் அதிகமான பார்வையாளர்கள் மண்டபத்தை நிறைத்த வண்ணம் அமர்ந்திருக்க பாராட்டுரைகள் மற்றும் சிறப்புரைகள் ஆகியன இடம்பெற்றன.



## ஒரு அசாதாரண "அரசராக" விளங்கிய கனடாவின் 18வது பிரதமர் பிரையன் மல்ரோனி மறைந்தார்

### கனடியத் தமிழர்கள் அன்னாருக்கு நன்றி உணர்வுடன் அஞ்சலி செலுத்தினார்கள்

அண்மையில் காலமான கனடாவின் சிறந்த பிரதமர்களாக பணியாற்றிய சிலருள் ஒருவராக மதிக்கப்பெற்ற பிரையன் மல்ரோனி அவர்களின் இறுதிக்கிரியைகள் 23-03-2024 அன்று கனடியத் தலைநகரான ஒட்டாவா மாநகரில் பாராளுமன்றத்திற்கு அருகில் நடைபெற்றது. அவரது இறுதிக்கிரியைகளில் கனடியத் தமிழர்கள் பெருமளவில் பங்குபற்றாவிட்டாலும் ஒட்டு மொத்த தமிழ் மக்களும் அன்னாருக்கு நன்றியுடையவர்களாக இன்றும் இருப்பதற்கு காரணங்கள் உண்டு.

(உள்ளே விபரமான செய்தி 11ம் பக்கத்தில்)

## யுத்தம் காரணமாக மியன்மாரில் இருந்து இடம் பெயர்ந்து பாணந்துறையில் வாழும் முஸ்லிம்களுக்கு மன்னார் மெசிடோ நிறுவனம் வீட்டு நிவாரணம் வழங்கி வைப்பு

யுத்தம் காரணமாக மியன்மாரில் இருந்து இடம் பெயர்ந்து இலங்கைக்கு கடல் மார்க்கமாக வருகை தந்து பாணந்துறையில் தங்கியுள்ள மியன்மார் முஸ்லிம் மக்களுக்கு அவசரமாக காணப்பட்டு வீட்டிற்கான நிவாரணத்தை மன்னார் மெசிடோ நிறுவனம் நேற்றைய தினம் வியாழக்கிழமை (28) மாலை நேரடியாக சென்று வழங்கி வைத்துள்ளனர்.

மன்னார் மெசிடோ நிறுவனத்தின் இயக்குனர் ஜாட்சன் பிகிராடோ தலைமையிலான குழுவினர் நேரடியாக விஜயம் செய்து வழங்கி வைத்துள்ளனர்.

- (மன்னார் நிருபர்)



## ஈழத் தமிழர்களுக்கு அரசியல் ரீதியாக சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்ட ஒரு தலைவரோ அன்றி ஒரு தலைமையோ இல்லாதது கவலைக்குரியதே!



யுத்தம் முடிந்து 2009ம் ஆண்டு மே18க்கு பின்னரான சூழலில் இருந்து இன்று வரை ஈழத் தமிழ் மக்கள் அனைவரும் ஆரோக்கியமான சிந்தனைகள் எதுவும் மற்ற மந்தைக் கூட்டங்களாகவே மாறி விட்டார்கள். அதற்கு காரணம் அரசியல் ரீதியாக சிறந்த தலைமைத்துவப் பண்புகளைக் கொண்டு வழி நடத்தக் கூடிய ஒரு தலைவரோ அல்லது ஒரு தலைமையோ இல்லாததே இதற்கு முழுக் காரணம்.

எமது தமிழ் அரசியல்வாதிகள் ஒருவரைப் பார்த்து இன்னொருவர். அவரைப் பார்த்து மற்றவர்... என அனைவரும் ஓரே நோக்கமும் சுயநலமும் கொண்டவர்களாக மாறிவிட்டார். அவர்களில் சிலர் அரசாங்கம் மற்றும் இந்தியா .அமெரிக்கா போன்ற நாடுகளிலிருந்து சன்மானமாக பணத்தையும் சொத்துக்களையும் பெறுகின்றவர்களாக மாறிவிட்டார்கள். இதனால் அவர்கள் மக்களைப் பற்றிச் சிந்திப்பதில்லை. தம்மைப் பற்றியும் தமது குடும்பங்களைப் பற்றியே சிந்திப்பதில் கவனம் செலுத்துகின்றார்கள்.

(உள்ளே செய்தி 12ம் பக்கத்தில்)

## இஸ்லாமிய மதத்தை இழிவு படுத்திய ஞானசார தேரருக்கு 4 வருட கடூழிய சிறைத் தண்டனை

கூரகல விகாரையில் இஸ்லாமிய மதத்தை இழிவுபடுத்தும் வகையில் வெளியிட்ட கருத்து, தேசிய மற்றும் மத நல்லிணக்கத்திற்கு குந்தகம் விளைவித்ததாக சம்மந்தமாக ஞானசார தேரருக்கு எதிராக சட்டமா அதிபரால் தொடரப்பட்ட வழக்கில் அவருக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே 28-03-2024 அன்று வியாழக்கிழமை 4 வருட கடூழிய சிறைத் தண்டனையும் ஒரு இலட்சம் ரூபா அபதாரமும் செலுத்துமாறு உத்தரவிட்டு தீர்ப்பளித்தார்

(உள்ளே செய்தி 7ம் பக்கத்தில்)

